KATHA KARPAKAM

BOOK I

A Collection of Moral Stories in Tamil
specially prepared to suit the Lower Forms

9-JUL 1946

V. S. SWAMINATHAN
EDUCATIONAL PUBLISHER
MADRAS, MADURA & TINNEVELLY

Rs. 0—7—9

கதா கற்பகம்

மலர் 1

மாணவர்க்குகந்த சிறு கதைத் திரள்

894.8113



வி. சூ. சுவாமிநாதன்

பிரசுரகர்த்தர்

மதராஸ்—மதுரை—திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை 0-7-9

Reprint June 1945 - 2000

031, 3

Commercial Printing & Publishing House, G. T., Madras

முகவுரை

'கதா கற்பகம்' என்னும், இந்நூல் மூன்று மலர்கள் கொண்டது. இவை லோயர் செக்கண்டரி மாணவர்க்காகவே இனிய எளிய நடையில் பிரபல வித்துவான்களால் எழுதப் பெற்றவை. முதல் மலர் முதலாவது பாரத்திற்கும், இரண்டாவது மலர் இரண்டாவது பாரத்திற்கும், மூன்றாவது மலர் மூன்றாவது பாரத்திற்கும் உபயோகமாகுமாறு தக்க நடையிலெழுதப் பெற்றுள்ளன.

இதற்கு முன் ஆரம்ப பாடசாலை மாணவர்க்காக தயாரித்த 'கதா மஞ்சரி' என்றது மூன்று மலர்களோடுங் கூடி, கலாசாலை அதிகாரிகளின் நன்மதிப்பைப்பெற்று உலவுகின்றது. இப்புத்தகங்களையும் பாடசாலை அதிகாரிகள் பார்வையிட்டு இதன் மதிப்பையும் அறிந்து இதனைப் பாடப் புத்தகமாக வைக்கும்படியாக மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

ஆக்கியோன்

பொருளடக்கம்

1.	காணுமற்போன ஒட்டகம்	...	1
2.	அன்புள்ள சிவகாமி	...	9
3.	நல்லதங்கை	...	18
4.	ஆளப்பிறந்தான்	...	30
5.	கடவுளின் செயல்	...	45
6.	கோபாலன்	...	56
7.	அரசனும் வைத்தியனும்	...	66
8.	புருஷோத்தமன்	...	80

உ

கதா கற்பகம்

மலர் I

---

1. காணுமற்போன ஒட்டகம்

பண்டைக்காலத்தில் கலிங்கநாடு என்று ஒரு நாடு இருந்தது. அதைச் சந்திரகாசன் என்னும் ஓர் மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி தவருதவன். குடிகளுக்கு நன்மையான காரியங்களைச் செய்வதில் கண்போனறவன்; எவ்வழக்கையும் தீர விசாரித்துத் தீர்ப்புச்சொல்லும் திறத்தன். அதனுல் அவன் நாட்டுக் குடிகள் அனைவரும் அவனைத் தாய்போலக் கருதி அடக்கமும் பணிவும் உடையவராய் ஒழுகுவாராயினர்.

அந்நாட்டில் உள்ள சதுர்வேதமங்கலம் என்னும் கிராமத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவர் பெயர் சற்குணன் என்பது. அவன் தன் பெயருக்குத்தக்கபடி அன்பு, அருள், ஈகை, பொறுமை முதலிய எல்லாக் குணங்களிலும் சிறந்தவனுயும், இளமைப் பருவத்திலேயே கல்வி யறிவை விருத்தி செய்து கொண்டவனுயும் இருந்தான். அவனுக்கு வயதும் இருபத்தைந்து ஆயிற்று. அதையறிந்த அவனது பெற்ருேர்கள் குலத்திலும் நலத்திலும் பெருமைமிக்க ஒரு பெண்ணைப் பார்த்து மணம் முடிக்கக் கருதினர். சற்குணனுக்கு மண விஷயத்தில் சிறிதும் விருப்பமில்லை. 'இல்லற வாழ்க்கை துன்பத்திற்கு இருப்பிடமானது' என எண்ணி

னன். தன் எண்ணத்தைப் பெற்ருேருக்குத் தெரிவித்து, தான் துறவியாகப் போவதையும் கூறினன். பெற்ருேர்கள் எவ்வளவோ கூறியும் கேட்கவில்லை. கடைசியில், ஒரு நாளிரவு வீட்டினின்றும் கிளம்பி ஒரு காட்டையடைந் தான். அக்காட்டில் ஒரு பெரிய பாலைவனம் இருந்தது. அவ்வனத்தில் மரஞ்செடிகள் ஒன்றும் கிடையாது. சதா காலமும் அக்கினிக்காற்று தாண்டவமாடிக் கொண்டிருக் கும். அத்தகைய பாலைவனத்தில் ஒரு பக்கமாக விருந்த சிறு மலைக்குகையிற் சென்று தங்கினன். தன் பழைய உடைகளையும், கோலத்தையும் மாற்றி, காவி உடையை யும் சடைமுடியையும் மேற்கொண்டான். சிவபெருமா னுடைய பாதங்களைச் சிந்தையிலிருத்தினன். உருத்தி ராக்ஷக் கண்டிகையை கண்டத்தி லணிந்துகொண்டான். தேகமுழுதும் திருநீற்றைப் பூசிக்கொண்டு தவஞ்செய்ய லானன். தவஞ்செய்யும் பொழுது நல்ல ஞானத்தைத் தனக்கு அளிக்குமாறு கடவுளைப் பிரார்த்தித்தான். அவன் தவத்தைக்கண்டு மெச்சிய கடவுளும் அவன் விரும்பிய வாறே நல்ல ஞானத்தை யவனுக்கு அருளினர். அதனு லவன் விருப்பும், வெறுப்பும் விட்டொழித்தான். யாரே னும் அவ்வழி வருபவர் கொண்டுவந்து கொடுக்கும் உணவை மாத்திரம் உண்பான். வேறு உணவு தனக்கு வேண்டுமென்று விரும்புவது அவன் வழக்கமில்லை:

இத்தன்மை வாய்ந்த சற்குணனிடத்து இன்னும் சில நற்குணங்களுமிருந்தன. அவை பிறர்பொருளை விரும் பாமை, உற்றுநோக்கும் சக்தி, உண்மை யுரைத்தல் முதலி யன. அவன் ஒருநாள் தன்னிடத்தைவிட்டு ஒற்றையடிப் பாதையாக அக்காட்டின் வழியே சென்று கொண்டிருந் தான். செல்லும் வழியில் ஒரு ஒட்டகத்தினுடைய அடிச் சுவடுகளைக் கண்டான். அதை நிதானித்துச் சற்று உற்று நோக்கினன். உற்று நோக்கவே சற்குணனுக்குச் சில விஷயங்கள் தோன்றின. மீண்டும் மீண்டும் அதன் அடிச்

சுவடுகளையும், சுவடுகளின் பக்கங்களையும் பார்த்தவண்ண மாகவே சென்றான். கடைசியில் தன் மனதிற்குள், 'இவ் வழியாக ஓர் ஒட்டகம் சென்றிருக்க வேண்டும்; அவ் வொட்டகமும் பாகனிடமிருந்து தப்பிக்கொண்டு வந்த தாகத் தெரிகிறது. ஏனெனின், அதன் சுவடுகள் மணலில் சரியாகப் பதியவில்லை. மேலும், அச்சுவடுகளில் அதன்முன் கால்களுள் வலக்கால் ஒழிந்த ஏனைய கால்களின் சுவடு களே அழுத்தமாகப் பதிந்திருக்கின்றன. அதனால் அதன் முன்கால்களுள் ஒன்றாகிய வலக்கால் சிறிது ஊனமுற் றிருக்கலாம். அது பக்கங்களிலுள்ள புற்களை மேய்ந்து கொண்டு சென்றிருப்பதைப் பார்க்கும்பொழுது இன்னு மொன்று தோன்றுகிறது. அதாவது இடப்பக்கமாகவே மேய்ந்துகொண்டு போயிருக்கிறது. அதனால் அதற்கு வலக்கண் குருடாகவிருக்கலாம் போலும். புற்களைக் கடித்திருப்பதைப் பார்த்தால், இடையிடையே சிற்சில புற் கள் கடிக்கப்படாமலிருக்கின்றன. அதனால் அதற்கு வாயிலுள்ள முன் பற்களுள் இரண்டொன்று விழுந் திருக்கலாம் போலும். ஆகவே, வலக்கால், வலக்கண் ணில் ஊனமுள்ளதும், முன் பற்களுள் இரண்டொன்று போனதும், பாகனிடமிருந்து தப்பித்துக் கொண்டது மாகிய ஓர் ஒட்டகம் இவ்வழியாகச் சென்றிருக்க வேண் டும். மற்றும் ஒரு பக்கத்தில் தேனீக்கள் மொய்த்துக் கொண்டிருக்கின்றன. அவை இவ்வாறு மொய்ப்பதற் குக் காரணம் தேன் சிந்தி யிருக்கவேண்டும். அதனால் அது ஒரு பக்கம் தேன் குடத்தை எடுத்துக்கொண்டு சென் றிருக்கிறது. எனத் தீர்மானித்தான். பிறகு அவ்வழி யாகவே சிறிது தூரம் நடந்து சென்றான். செல்லும் வழி யில் எதையோ தேடியவண்ணமாக வரும் இரண்டு வணி கர்களைக் கண்டான்; அவர்கள் முகத்தை நிதானத்துடன் சற்று உற்று நோக்கினான். பின்பு, "நாம் முன் தீர்மானித்த ஒட்டகை இவர்களுடையதாகத்தானிருக்க வேண்டும்.

இவர்கள் முகம் வாட்டமுற்றிருக்கிறது. வியாபாரிகள் போலவும் தோற்றுகின்றனர்; நாம் தீர்மானித்ததின் உண்மையை இவர்கள் மூலம் அறிந்துகொள்ளலாம்'' என எண்ணி, அவர்களை யடுத்தான. அடுத்ததும் அவர்களை நிற்குமாறு கூறி, "ஐய! நீங்கள் மனவாட்டத்துடன் செல்வதைப் பார்த்தால் ஏதோ ஒரு ஒட்டகத்தைப் பறி கொடுத்தவர்போல் காண்கிறீர்கள். அது உண்மை தானே?'' என்று வினவினன்.

அதைக்கேட்ட வணிகர்கள், 'வழியல்லாற் குவியல் கண்டாற்போல' அவனைக்கண்டு மகிழ்ந்து, "பெருமை மிக்கவரே: நீர் அறிந்து கூறியது உண்மைதான். நாங்கள் வரும் வழியில் ஒட்டகையை நிறுத்திவிட்டு உணவு உட்கொள்ளும் பொருட்டு, ஒரு நீருற்று உள்ளதொரு இடத்தை நாடிச் சென்றோம். அங்கு உண்டு முடித்துச் சிறிது நேரத்தில் திரும்பினோம். நாங்கள் நிறுத்திவைத்த விடத்தில் ஒட்டகையைக் காணோம். உடனே நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தும் எங்கும் அதனைக் காணவில்லை. அதனால் மனவருத்தத்துடன் இவ்வழியாக வந்து கொண்டிருக்கிறோம்'' என்றனர்.

அதைக்கேட்ட நற்குணன் மீண்டும் அவர்களைப் பார்த்து "அப்படியா! சரிதான். இன்னுமொன்று உங்களைக்கேட்க விரும்புகிறேன். அதாவது, அவ்வொட்டகத்திற்கு வலக்காலிலும், வலக்கண்ணிலும் யாதேனும் ஊனம் உண்டோ?'' என்று கேட்டனன். அதற்கவர்கள் "ஆம்; வலக்கண் அதற்குக் குருடு; வலக்காலை அது சிறிது தாங்கித் தாங்கி நடக்கும்'' என்றனர்.

மீண்டும் சற்குணன் அவர்களைப் பார்த்து "வாணிகத் தொழில் வல்லீர்! உங்கள் ஒட்டகத்திற்கு முன் வாய்ப் பற்களுள் இரண்டொன்று விழுந்திருக்குமோ?'' எனக் கேட்டான். அதற்கும் அவர்கள் "தாங்கள் கூறுவதுண்மைதான்'' என்றனர்.

மறுபடியும் சற்குணன், "ஒட்டகையை யிழந்ததனால் மனம் வருந்தி யலைகின்ற வணிகர்களே! உங்கள் ஒட்டகத்தின் முதுகில் ஒரு பக்கம் தேன் சுமையை ஏற்றி வந்தீர்களோ?" என வினவினான். அதைக்கேட்ட வணிகர்கள், "அறிவிற் பெரியவரே! எம் ஒட்டகையின் உறுப்பிலக்கணங்களையும், மற்றும் சில விஷயங்களையும் கூறிவிட்டீர். அத்தகைய இலக்ஷணங்களையுடைய ஒட்டகந்தான் எங்களுடையது. இவவாறு அதன் தன்மைகளைக்கூறுகிற நீவிர் அதனை எங்குக் கண்டீர்? எவ்விடம் நோக்கிச்சென்றால் நாங்கள் அதனை அடைவோம்? எப்படியும் சூரியன் மறைவதற்குள் அதனை நாங்கள் கண்டு பிடிக்கவேண்டும். கூறுவீராக" எனக்கேட்டனர்.

அதற்கு சற்குணன் அவர்களைப் பார்த்து, "நீண்ட கழுத்தையுடைய ஒட்டகத்தைத் தேடித் தேடிக் களைப்புற்ற வணிகர்களே! என் மனதிலிருக்கும் கடவுள் சாக்ஷியாகச் சொல்லுகிறேன். நான் உங்கள் ஒட்டகத்தைக் கண்டிலேன். ஆனால் அது இவ்வழியாகச் சென்றிருக்கிறது என்பதை மட்டும் அறிவேன். ஆதலின் இவ்வனத்தில் நீங்கள் தங்க வேண்டாம். உங்களிருப்பிடத்தை நோக்கி விரைந்து செல்லுங்கள். இன்னுமொன்று உங்களுக்குக் கூறுகிறேன். உலகத்தில் காணாத தொன்றைக் கண்டேன் என்று எவன் பொய் சொல்லுகிறானோ அவன் உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி அலைவான். 'பொய்யுரைப்பவர் போனகமின்றி வீழ்வர்' என்பது உலகப் பழமொழியல்லவா? ஆதலின், நேரிற் காணாமலும், இவ்வழியாகச் சென்றது எனப் பிறர் மூலம் கேட்காமலும் இருக்கும் நான், அதனைக் கண்டேன் என்று உங்களிடம் எவ்வாறு கூறமுடியும். உங்கள் மனம் களிப்பதற்காகப் பொய் கூறினால் எனக்கு நரகமன்றோ கிடைக்கும். ஆகையால் உங்களுக்குத் தோன்

றியவிடத்திற்குச் செல்லுங்கள்'' என மறுபடியும் கூறினுன்.

சற்குணன் கூறியவற்றைக் கேட்ட வணிகர்களுக்கு அவனிடம் பெருத்த சந்தேகம் உண்டாயிற்று. ''இவ்வளவு தூரம் அதன் அடையாளங்கள் அனைத்தையும் கூறக்கூடியவன் அதைக் காணுதிருப்பானே? அதனை யபகரிக்க வேண்டுமென்று நினைத்து இவ்விதம் கூறுகிருன். இத்திருட்டுப் பயலை விடக்கூடாது'' என நினைத்து அவனைப் பார்தது, ''அடே அற்பப் பயலே! நீயே பெருந் திருடன். ஒட்டகத்தை ஒளித்து வைத்துக்கொண்டு எங்களை ஏமாற்றப்பார்க்கிருய். உன் செபம் பலிக்காது. உண்மையைக் கூறிவிடு. இல்லையேல் இதோ எங்களிடமுள்ளவாளுக்கு இரையாவாய். உலகத்தில் உன்னைப்போல் சிலர் சடைமுடிதரித்துக் காவி வஸ்திரம் தரித்துப்பிறரை ஏமாற்றித் திரிகின்றனர். எங்கள் ஒட்டகத்தில் மன்னர்கள் அணியத் தகுந்த அநேக இரத்தினங்கள் அடங்கிய பையொன்று வைத்திருந்தோம், அதை நீ யபகரிக்கக் கருதியே ஒட்டகத்தையே பார்க்கவில்லை என்கிருய்போலும். ஒட்டகம் இழந்துபோனது மட்டுமல்லாமல் மாணிக்கக் கற்களையுமா நாங்கள் இழக்கச் சம்மதிப்போம்'' என்றனர். பின்பு தமக்குள், ''நம்மரசன் செங்கோலரசன்; நீதிதவருதவன்; வழக்கின் உண்மையை யறிந்து சொல்லக் கூடியவன். ஆதலின், இத்திருடனை அவன் சமூகத்திற்கு அழைத்துச்சொல்வோம்'' எனக் கூறிக்கொண்டு சற்குணனைப் பிடித்துக் கைகளைக் கட்டினர்.

அதன் பின் ஒருவன் அவன் மடியைப் பிடித்துக்கொண்டு இழுத்தான். மற்ருெருவன் அவன் கழுத்தைப் பிடித்துத் தள்ளினுன். சற்குணன் யாது செய்வான். பாவம்! பொறியிலகப்பட்ட எலி போலத் துடிதுடித்தான். கடவுளை மனத்தில் தியானித்துக்கொண்டே அவர்களுடன் சென்ருன். சந்திரகாசன் அரண்மனை யடைந்த

வுடன் வணிகர்கள் அரசனை யடைந்து, "அரசர்க்கர சனே! இதுவரையிலும் நமது அரசாட்சியில் கள்ளர் பயம் என்பது கனவிலும் காணவொண்ணுததாக விருந் தது. தற்பொழுது சிற்சில விடங்களில் களவு போகிற தாகவறிகிறோம். நாங்கள் வியாபார நிமித்தம் அயல் நாடு நோக்கி ஒட்டகத்தின் மீதேறிச் சென்றோம். வியா பாரஞ் செய்து முடிந்தவுடன் எங்கள் இடத்தைநோக்கிப் புறப்பட்டோம். வரும் வழியில் ஒட்டகையை நிறுத்தி விட்டு ஓரிடத்திற்சென்று உணவருந்தினேம். அதன் பின் திரும்பி வந்து ஒட்டகையைப் பார்த்தோம்; காண வில்லை. ஒட்டகத்தின் பேரில் தங்களை யொத்த மன்னர் கள் அணியத்தக்க இரத்தினங்கள் அடங்கிய பையொன்று வைத்திருந்தோம். அதனல் அவ்வொட்டகையை எவனே ஒருவன் கவர்ந்து கொண்டு போயிருக்கவேண்டும் என நினைத்து நாலாவிடங்களிலும் ஓடித் தேடினேம். அது தென்படவில்லை. கடைசியில், அவ்வழியாகச் சென்று கொண்டிருக்கும்பொழுது இத்திருடனைக் கண்டோம். ஆதலின் இவனுக்குத் தக்க தண்டனை விதித்து எமது ஒட் டகையையும் பொருள்களையும் வாங்கித்தரல்வேண்டும்" என்றனர்.

அவற்றைக்கேட்ட மன்னன் வணிகர்களையும், சற் குணனையும் உற்றுப்பார்த்தான். அதன் பின் வணிகர்களை நோக்கி, "வணிகர்களே! நீங்கள் கூறுவது சரிதான். ஆனல், இவன் உங்கள் ஒட்டகையைக் களவாடினன் என்பது என்ன நிச்சயம்? இவன் கள்வாடினன் என்ப தற்குத் தாங்கள் கூறும் சாக்ஷியம் என்ன? மேலும் அவ னைப் பார்த்தால் சத்தியவந்தனுகத் தோற்றுகிறதே. உங் கள் கருத்தைக் கூறுங்கள்" என்ருன்,

வணிகர்கள், "அரசே! எங்கட்கு வேறு சாக்ஷி கிடையாது. இவனுடைய வாய்மொழிகளே எங்கட்குச் சாக்ஷியாகின்றன. நாங்கள் இவனைக்கண்டு பேசாம

யிருக்கும்பொழுதே, இவன் வலியவந்து 'ஒட்டகையைத் தவிற விட்டு விட்டீர்களோ? உங்கள் ஒட்டகத்திற்கு இன்னின்ன அடையாளங்கள் உண்டோ?' என்று உள்ளதை உள்ளவாறே கூறினன். அதனல் இவனே எங்கள் ஒட்டகையைக் கவர்ந்திருக்க வேண்டுமெனக் கருதுகிறோம்" என்றனர். பிறகு மன்னன், சற்குணனைப் பார்த்து, "ஐயா! இவ்வணிகர்கள் உம்மீது களவுக்குற்றம் சுமத்துகிறர்களே. நீர் உண்மையைக் கூறும். இவர்கள் ஒட்டகையை நீர் அபகரித்ததுண்டோ? உள்ளதையுள்ள வாறு கூறும்" என்றனன்.

அரசன் கூறியவற்றைக்கேட்ட சற்குணன், தனக்குக் கடவுள் உதவி புரிவார் என நினைத்துக்கொண்டு, அரசனைப் பணிந்து நின்று, "அரசே! யான் கூறுகிற மொழிகளைச் சற்று நிதானித்துக் கவனிக்கவேண்டும். யான் இவ்வணிகர்களுடைய ஒட்டகத்தைக் கண்டிலேன். அச்சுவடுகளைக் கொண்டே இவர்கள் ஒட்டகம் இத்தன்மையானதாக விருக்கவேண்டும் எனத் தீர்மானித்தேன். அது எவ்வாறெனில், அவ்வொட்டகத்தின் அடிச்சுவடுகள் மணலில் சரியாகப் பதியவில்லை. அதனல் அது பாகரைவிட்டு ஒற்றையாய் வந்த ஒட்டகம் என அறிந்தேன். அதன் கால்கள் நான்கினுள் முன் பக்கத்திலுள்ள வலக்கால் சுவடு சரியாகத் தோன்றவில்லை: அதனல் அது ஒரு கால் முடம் உள்ளதாக விருக்கவேண்டும் என நினைத்தேன். இரு பக்கங்களிலும் உள்ள புற்களுள் இடப்பக்கத்துப் புற்களையே கடித்துக்கொண்டு சென்றிருப்பதால், அதற்கு வலக்கண் குருடாக இருக்கலாமெனத் தீர்மானித்தேன். கடித்த புற்களுள்ளும் இடையிடையே சிறிது கடிக்கப் படாமல் நின்றமையால் அதன் முன்னம் பற்களுள் ஒன்றிரண்டு விழுந்திருக்கலாமென வுன்னினேன். அது சென்ற வழியெல்லாம் தேனீக்கள் மொய்த்துக் கொண்டிருந்ததனல், அதுகொண்டு சென்றது தேன் என அறிந்தேன்.

இவ்வாறு யான் உற்று நோக்கி அறிந்த விஷயத்தையே, இவ்வணிகரிடம் கேட்டேன். யான் கேட்டவைகளனைத்தும் அவர்களுக்கு உண்மையானதாகத் தோன்றினமையின், அவர்கள் என்மீது களவுக் குற்றம் சுமத்திவிட்டனர். இதைத் தவிர யான் வேறொன்றையும் அறியேன்" என்றான்.

சற்குணன் கூறியவற்றைக் கேட்ட சந்திரகாச மன்னன் மிகுந்த சந்தோஷத்தை யடைந்தான். அவனை வணங்கினான். "இவ்வாறு உற்றுநோக்குதல் சக்தி பிறரிடம் அமைவது அருமை அருமை" என்றான். அவனுக்கு வேண்டியமட்டும் மரியாதை செய்து, விருந்தளித்து அனுப்பினான். வணிகர்களும் தான் அறியாமற் செய்த பிழையைப் பொறுக்கும்படி சற்குணனையும் மன்னனையும் வணங்கிச் சென்றனர்.

பிள்ளைகளே! சற்குணனிடத்துக் காணப்பட்ட உற்று நோக்குதலின் சிறப்பைப் பார்த்தீர்களா? அவனைப்போல் நீங்களும் ஒவ்வொன்றையும் உற்றுநோக்கி யறிவீர்களானால் உலகத்தில் எல்லோரையும் வென்றுவிடலாம். சிறந்த பதவிகளைப் பெறலாம். படிக்கும்பொழுது ஒவ்வொரு பாடத்தையும் உற்று நோக்கிக் கவனிப்பதனால் சிறந்த அறிவு உண்டாகிறது.

உற்றுணர்வதனால் நற்பயன் விளையும்

---

2. அன்புள்ள சிவகாமி

நம் தமிழ் நாடு, சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று மூன்று வகையாகப் பகுக்கப்படும். சேர நாட்டை, சேரமன்னனும், சோழநாட்டை, சோழ மன்னனும் பாண்டியநாட்டை, பாண்டிய மன்னனும் ஆண்டுவந்தனர். சேர பாண்டிய நாடுகளைக் காட்டிலும்

சோழநாடு நீர்வளத்திலும் நிலவளத்திலும் செழிப்புற்றிருந்தது. அந்நாட்டிற்கு காவிரிப்பூம் பட்டினம் என்னும் துறைமுகப் பட்டினம் தலைநகரம். அந்நகரத்தில் பண்டைக் காலத்தில் வணிககுலத்தில் சாலமன் என்று ஒருவர் இருந்தார். அவர் செல்வத்திற் குபேரனுக்கு ஒப்பானவர். அன்பு, அடக்கம், அறிவு முதலிய குணங்களிற் சிறந்தவர். அவருக்கு ஒரு புத்திரரும் இரண்டு புத்திரிகளும் உண்டு. அவர் செல்வத்தில் சீமான்; ஆனபடியால் தம் புத்திரருக்குச் சிறந்த ஒரு பெண்ணையும், புத்திரிகளுக்குத் தகுந்த மணாளர்களையும் தேடிக் கல்யாணம் செய்துவைத்தார். பிறகு சில காலம் இருந்து அவர் உயிர் துறந்தார்.

அப்புத்திரர் தம் தந்தையார் தேடிவைத்த செல்வங்களை வைத்துக்கொண்டு சுகமாகக் காலம் கழித்து வந்தார். நாளடைவில் அவருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவன் மன்மதனைப்போல் அழகும் சூரியனைப்போல் பிரகாசமும் உடையவனாய் விளங்கினான். அதனால், அவருக்குப் புத்திரன் மீது அளவில்லா அன்பு உண்டாயிற்று. அருமையாய்ப் பெற்ற குழந்தையாதலின் அதனை மடிமீதும் தோள்மீதும் வைத்துச் சீராட்டிப் பாராட்டி. வளர்தது வந்தார். பின்பு அப் புத்திரனுக்குச் சிதம்பரன் என்று நாமகரணஞ் செய்து தக்க பருவம் வந்தவுடன் கல்விச் சாலைக்கு அனுப்பினார். சிதம்பரனும் உரிய நேரம் தவறாமல் கல்விச்சாலைக்குச் செல்வான். அங்கு நடக்கும் பாடங்களை ஒழுங்காக கவனிப்பான். வீட்டில் வந்து அவற்றைச் சிந்திப்பான். வகுப்பில் நல்ல அம்சங்கள் பெறுவான். இவ்வாறு அவன் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக நடந்து வந்தான்.

இவ்வாறிருக்கும் நாளில் அவனுடைய மூத்த அத்தைக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அது ஏறக்குறைய சிதம்பரனை யொத்த அழகும், ஒளியும் உடைய

தாய், அவனுக்கு ஓராண்டு வயதிற் குறைந்ததாயிருந்தது. அக்குழந்தைக்கு அதன் பெற்ருேர் சிவகாமி என்று பெய ரிட்டு அழைத்தனர். சிவகாமி சிறுவயதிலேயே நல்ல குணங்கள் எல்லாம் பெற்றிருந்தாள். அவள் அடிக்கடி தன் மாமன் வீட்டுக்குச் செல்வதும், அங்குத் தனது அம்மான் சேய் ஆன சிதம்பரனேடு விளையாடுவதும் வழக்கம். அதனல் நாள் பல செல்லச் செல்ல சிதம்பர னுக்கும் சிவகாமிக்கும் மிகுந்த சிநேகமும், அன்பும் ஏற் பட்டது. சிதம்பரன் தான் பள்ளிக்கூடத்தில் படித்த பாடங்களைச் சிவகாமிக்குச் சொல்லிக்கொடுப்பான். சிவ காமி மிகுந்த புத்திசாலியானதால், அவன் ஒரு முறை கூறியதை மனதில் செவ்வனே பதித்துக்கொள்வாள். என்றைக்குக் கேட்டாலும் அதனை மறவாது கூறுவாள். இவ்வாறு அவ்விருவரும் காலம் கழித்து வரலாயினர். இதனைப் பார்த்த அவர்களது பெற்ருேர்கள் தமக்குள் "சிதம்பரனுக்குச் சிவகாமியே மனையாட்டியாகத் தகுந் தவள்; சிவகாமிக்குச் சிதம்பரனே மணாளன் ஆகத் தகுந் தவன்" என்று கூறிக்கொள்வது வழக்கம்.

சிதம்பரனும் தான் கற்கவேண்டியவற்றை எல்லாம் கற்று முடித்தான். அதனை யறிந்த அவனது பெற்ருேர் அவனுக்கு மணம் முடிக்கக் கருதினர். அச்சமயம் சிவ காமியும் பன்னிரண்டு வயதுடைய கன்னிகையாக யிருந் தாள். சிதம்பரனுடைய பெற்ருேர் தாம் முன் நினைத்த படி, சிவகாமியையே சிதம்பரனுக்கு மணஞ் செய்து வைக்க வேண்டுமென நினைத்தனர். தாம் நினைத்ததை அப் பெண்ணின் பெற்ருேரிடம் தெரிவித்தனர். அவர்களும் தாம் நினைத்தது சரியாக விருக்கிற தென்றெண்ணிச் சம்ம தித்தனர். பிறகு ஒரு நல்ல நாளைப் பார்த்து அவ்விருவ ருக்கும் மணஞ்செய்து வைத்தனர். சிவகாமியும் சிதம் பரனும் தாம் முன் இளமைப் பருவத்தில் எவ்வாறு அன்

புடையவர்களாக இருந்தார்களோ, அதினும் பதின்மடங்கான அன்புடையவர்களாய்க் காலம் கழித்து வந்தனர்.

இவ்வாறு அவ்விருவரும் இருக்கும் நாளில், சிவகாமிக்குச் சிறிய தாயும், சிதம்பரனுக்கு அத்தையுமாகிய ஒருத்தி குழந்தையில்லாது இருந்தாள். அவள் அளவிட முடியாத திரவியம் உடையவள். ஆயினும் அவள் புத்திரபாக்கியம் இல்லையே என்று தன் மனதில் அடிக்கடி கவலை கொள்வது வழக்கம். அக்கவலையைப் போக்கிக்கொள்வதற்காக அவள் தன் சகோதரி மகளையும், சகோதரன் மகனையும் தன் வீட்டிற் கழைத்து, தன் மக்கள்போல் கருதிப் பாது காத்து வந்தாள். அவர்களும் சில வருடங்களாக அவள் வீட்டிலேயே தங்கி, அவள் கவலையைத் தணிப்பாராயினர்.

இவ்வாறிருந்து வரும் நாளில் சிவகாமிக்குக் கர்வம் அதிகரித்தது. தன் சிற்றன்னை செல்வத்திற்குத் தானே யதிகாரியென நினைத்தாள். தன் கணவனைத் தெய்வமாக நினைக்க வேண்டியதை மறந்தாள். அவனுக்குப் பணி விடைகளை ஒழுங்காகச் செய்வதுமில்லை. அவன் மனம் வருந்துமாறு பல தீய சொற்களையும் வழங்கினள். சிதம்பரன் பெண்ணின் அறியாமைக்கு மனம் வருந்தினன். அவள் தன்னிடம் நடந்துகொள்வது தவறு என்பதைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறிக் கண்டித்தான். கண்டித்துமென்ன? செல்வச் செருக்குற்றவருக்கு நல்ல அறிவு எவ்வாறு தோன்றும்? மீண்டும் அவள் முன் போலவே நடந்து வந்தாள். பார்த்தான் சிதம்பரன் "இனிமேல் இவளுடன் கூடி வாழ்தல் புலியுடன் கூடி வாழ்தலுக்கு ஒப்பாகும். நயத்திலும் பயத்திலும் எவ்வளவோ கண்டித்துப் பார்த்தோம். அவளோ செல்வச் செருக்கால், கொண்டான் குறிப்பறியாது நடக்கின்றுள். பெரியோர்கள் 'மனையாள் சற்றேனும் எறுமாருக இருப்பாளேயாமாயின் கூறுமமற் சந்நியாசங்கொள்" என்று கூறியிருக்

கின்றனர். அதனல் நாம் துறவிக் கோலத்தை மேற்கொள்ளுதலே தக்கது" என நினைத்தான்.

நினைத்த சில நாட்களுக்கெல்லாம் சிதம்பரன் வீட்டினின்றும் ஒருவரிடமும் சொல்லாது கிளம்பினன். தன் பட்டினத்திற்கு வெகு தூரத்திலுள்ள ஒரு வனத்திற் சென்று சடைமுடி தரித்து, காவி வஸ்திரத்தை உடுத்திக் கொண்டான். பல துறவிகளை அடைந்து யோக மார்க்கத்தை மேற்கொண்டான். அறுசுவை உணவை வெறுத்தான்; அல்லும் பகலும் நித்திரையை நீத்தான். காய் கனி கிழங்குகளையே தின்றுன். இவ்வாருக அநேக வருடங்கள் அக்காட்டிலேயே தங்கிவிட்டான்.

கணவனைப் பிரிந்த சிவகாமி, தன் கணவன் 'இன்று வருவான். நாளை வருவான்; இன்னுஞ் சில நாள் கழித்து வருவான்' என்று எண்ணியிருந்தாள். அவள் அவ்வாறு எண்ணி எதிர்பார்த்த நாட்கள் எல்லாம் வீணுயின. கடைசியில் தன் மனத்திற்குள் "நாம் செய்த கொடுமையைக் கருதி நம்மை விட்டு பிரிந்தார் போலும்! என் செய்வோம்: அறியாமையால் அவர் மனம் நோவுமாறு நடந்து கொண்டோமே" எனப் பலவாறு வருந்திஞள். அவள் வருத்தத்தைக் கண்ட அவளது சிற்றன்னை, அவளைப் பார்த்து "நீ ஏன் வருந்துகிருய், கணவன் சென்ருல் என்ன? உனக்கு உண்ண உணவும் உடுக்க உடையுமில்லாவிட்டால் அல்லவோ வருந்த வேண்டும். நீயோ என் செல்வங்கட்கெல்லாம் அரசியாகப் போகிருய். உன் புருஷனுக்கு இது கொடுத்துவைக்கவில்லை. நீ அவனுக்காக இனிமேல் வருந்தாதே" என்ருள். சிவகாமிக்கோ அவள் கூறியதொன்றும் சமாதானம் அளிக்கவில்லை. தன் சேடியர்களை யழைத்துத் தன் கணவனைத்தேடி வருமாறு கூறினுள். அதற்கு அச்சேடியர், "அம்மா! உமது தலைவர் சென்றிருக்கும் இடம் இது என்று அறிந்தால் அல்லவோ அவரைக்கண்டு அழைத்து வரமுடியும். அவர்

சென்ற இடம் இது என்றுசொல்லுவாரையும் காணேமே''
என்று கூறினர்.

அதனைக்கேட்ட சிவகாமிக்கு, புண்ணில் கனலை
எடுத்து வைத்தாற்போலக் கவலை யதிகரித்தது. உடனே
தனக்குள் ''இனி நம் துயரை இவர்களிடம் கூறுவதிற் பய
னில்லை. நாமே சென்று நம் தலைவரைத் தேடிப்பிடிக்க
வேண்டும். கண்டு பிடிக்க முடியாவிட்டால், கடைசியில்
உடலை நெருப்பிற்போட்டு உயிர் துறக்கவேண்டும்.
இதுவே முடிவாகச் செய்யவேண்டியது'' என நினைத்தாள்.
நினைத்த அன்றிரவே, ஆண் துறவிபோல் வேடந் தரித்துக்
கொண்டு ஒருவரிடமும் கூறுமல் வெளிக் கிளம்பினுள்.
மறுநாள் பகற்பொழுது பலவிடங்களிலும் சென்று தேடிப்
பார்த்துக் கடைசியில், சிதம்பரனிருக்கும் வனத்தையே
யடைந்தாள். அப்பொழுது சூரியனும் மேற்றிசையை
அடைந்தான். சிவகாமி நாலாதிசைகளிலும் அலைந்து
கடைசியில் துறவிக்கோலத்துடன் வந்த சிதம்பரனைச் சந்
தித்தாள். ஆனல், அவன் தான் தன் நாயகன் என்று
அவளுக்குத் தோன்றவில்லை. ஆண் வேடத்துடன் வந்த
வள் தன் மனைவியாகிய சிவகாமிதான் என்பது அவனுக்
கும் தோன்றவில்லை. இவ்வாறு ஒருவரையொருவர் சற்று
பார்த்துக்கொண்டு நின்றனர்.

பின்பு சிவகாமி அம்முனிவன் காலில் வீழ்ந்து
வணங்கி, ''சுவாமி! இக்காட்டில் யான் தன்னந்தனி
யாய்ப் பலவிடங்களிலும் சுற்றியலைந்தேன். தங்குவதற்கு
ஓரிடமும் சரியானதாகத் தோன்றவில்லை. என் களைப்பும்
கவலையும் மாற்றித் தங்குவதற்கு யாதேனும் இடமுள
தேல் அதை எனக்குத் தெரிவிக்கவேண்டும்'' என்ருள்.
அதைக்கேட்ட முனிவன், '' ஐய! இவ்விடம் பரந்ததோர்
வெளியிடமாகும். இதில் வேற்று மக்கள் வந்து சஞ்சாரஞ்
செய்வதில்லை. என் வீடு பரந்திருக்கின்ற இவ்வனமே
யாகும். இவ்விடத்தில் விருப்பு வெறுப்பு இல்லாத மன

துடையவர்கள்தான் வருவார்கள். அவர்கள் இவ்விடத்தில் சிறிது தங்குவார்களானால், அறுசுவையுணவையும், கண் துயிலச் சிறந்த வமளியையும் விரும்பார். ஆதலின் இத்தன்மை வாய்ந்த இவ்விடத்தில் என்னுடன் வரவிரும்பினால் உமக்கு ஏற்பட்ட மனக் களைப்பும், கவலையும் உம்மை விட்டகலும்" என்றான்.

அதனைக்கேட்ட சிவகாமி, ஊசியின் வழியே நூல் நுழைந்து செல்வதைப்போல, அம்முனிவனைப் பின்பற்றி, காடும் மலையும் கடந்து அவன் இருக்குமிடத்தை யடைந்தாள். பின்பு முனிவன் சிவகாமியை அவ்விடத்தில் நிறுத்தி வைத்து விட்டு, சில விறகுகளைத்தேடிக் கொண்டுவந்து நெருப்பு வளர்த்தான். அதன்பின் தன்னிடத்திலிருந்த காய், கனிகளை எடுத்து சிவகாமியை நோக்கி, "அன்ப! தற்பொழுது இராக்காலமானதால் பனியதிகமாகவிருக்கும். அப்பனியின் கொடுமையைப் போக்கிக்கொள்வதற்காக இக்கனலின் பக்கத்தில் வந்து இரு. இதோ இருக்கும் காய் கனிகளைத் தின்று, உன் பசியையும் தணித்துக் கொள்" என்றான். அதைக்கேட்ட சிவகாமிக்குச் சிறிது வெட்கம் உண்டாயிற்று. அவள் தன் மனதிற்குள், "நாமோ பெண்பால்; இவ்வாடவனுக்கெதிரில் எவ்வாறு தங்குவது. நம் வேடத்தால் இம்முனிவன் நம்மை ஆண் மகன் என்றே எண்ணியிருக்கிறான். இவ்வாறு எண்ணிக் கொண்டிருக்கிற இத்தவமுனிவனிடம் உண்மையைக் கூறுவதா? அல்லது முன்போலவே கடைசிவரை நடித்து விடுவதா?" என்று ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது முனிவன் மறுபடியும் அவளைப் பார்த்து, "வழிநடையால் வருந்தியவனே! ஏன் என் முன்பு உட்காரக் கூசுகிறாய். நாம் இருவரும் உடல் அளவால் வெவ்வேறாக இருக்கிறோமே யல்லாமல், உயிரளவால் வெவ்வேறாகவில்லை. ஆதலின், நமக்குள் யாரைப் பெரியார்

என்பது? யாரைச் சிறியார் என்பது? சிறிதும் வித்தியா சம் பாராட்டவேண்டாம். என் முன்னர் வந்து உட்காரு வாயாக" என்ருன். அதற்கும் அவள், ஒன்றும் பேசாது ஓவியம்போல் நின்று கொண்டு ஒரு கையை முகத்தில் வைத்துக்கொண்டு கண்ணீர் உகுத்து நின்ருள்,

அதைக்கண்ட முனிவன். தனக்குள் "இவன் ஏதோ கவலைக்குள் ஆழ்ந்திருக்க வேண்டும். அதனுல்தான் நாம் ஒரு முறைக்கு இருமுறை கூறியும் நம்முடன் சமமாக உட்காராது இருக்கிருன்" என நினைத்து அவளைப்பார்த்து, "அன்பனே! உனது மனத்தில் உள்ள கவலை என்ன? ஏதேனும் அரிய பொருளைப் பறிகொடுத்தனையோ? அல்லது உற்ருர், உறவினர், பெண்கள் உன்னைக் கைநழுவ விட்டனரோ? உலகத்தில் நண்பர் என்போரும் உறவினர் என்போரும் நம்மை நாடியிருப்பதெல்லாம் நெய் உள்ள குடத்தை எறும்புகள் நாடியிருப்பது போலாம். பெண்கள் நம்மிடத்து வைத்திருக்கும் அன்பெல்லாம் பொய்மையான முயற்கொம்பிற்கு ஒப்பாகும்," என்று கூறினுன்.

அவற்றைக் கேட்ட சிவகாமிக்கு அத்தவ முனிவனிடத்துச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. "நடையாலும், பேசும் உரையாலும், முகத்தின் அழகாலும் நமது தலைவரைப்போல் காணப்படுகிருரே. ஒருக்கால் இவர்தான் நம் தலைவராக விருக்கலாம் போலும்" என்று நினைத்து ஏங்கி அழுதாள். பின்பு அவனைப் பார்த்து, "முனிவரே! தெய்வத்தோடு நீர் வசிக்கும் திருக்கோயில் புகுந்த தீவினையேன் செய்த பிழையனைத்தையும் பொறுக்கவேண்டும். யான் என்னுடைய வரலாற்றைக் கூறுகிறேன். கேட்டு அருள் வீராக."

"காவிரிப்பூம்பட்டினத்தில் சாலமன் என்று ஒரு வணிகர் இருந்தார். அவருக்கு இரண்டு பெண்களும், ஒரு புத்திரரும் உண்டு. இவர்களுள் மூத்தபெண்ணின் வயிற்றில்

யான் பிறந்தேன். யான் தக்க வயது அடைந்ததும் என் பெற்றோர்கள், என்னை என் மாமன் மகனுக்கு மணஞ்செய்து வைத்தனர். யானும் என் மணாளனும் சில காலம் சந்தோஷமாகக் காலத்தைக் கழித்தோம். அவ்வா றிருக்கும் சமயத்தில் எனது சிறிய தாயாருக்குப் பிள்ளை கள் கிடையாது. ஆனால் அளவிறந்த செல்வம் படைத்த வள். அவள் எங்களிருவரையும் தன் வீட்டுடன் சேர்த்து வைத்துக்கொண்டாள். அப்பொழுது யான் அற்பமதி யாலும், செல்வச் செருக்காலும் கணவனை மதியாது நடந்து வந்தேன். அவர், அடக்கம், பொறுமை, வாய்மை முதலிய குணங்களில் சிறந்தவர்; அருள் வடிவினர்; காமனை வெல்லும் கட்டழகு படைத்தவர். அத்தகுதியான வருடைய திருநாமத்தை என் வாயால் தங்களிடம் எவ் வாறு கூறுவேன்? அப்பேர்ப்பட்டவர், என் பிழையை நயத்திலும் பயத்திலும் சொல்லிக்கண்டித்தார். யான் குறும்பு மதியால் அவருக்குத் திருப்தியாக நடக்கவில்லை. அதனால் அவர் என்னை வெறுத்துச் சென்றார். அவர் சென்ற சிறிது காலத்திற்கெல்லாம் 'யான் செய்தது தவறு' என்று தோன்றிற்று. அதனால் பலவாறு புலம்பி அழுதேன். அழுது பயனென்ன? வெறுத்துச் சென்றவர் எவ்வாறு திரும்பி வருவர். கடைசியாக, 'இனியவரைக் கண்டாலன்றி உயிர் வைத்திருக்கக்கூடாது' என்று தீர் மானித்து ஒருவரிடமும் சொல்லாது இக்கோலத்துடன் நாலாவிடங்கட்கும் சென்று கண்டவரை, கேட்டவரை எல்லாம் விசாரித்தேன். ஒருவரும் சரியாகக் கூறவில்லை. தவமுனிவ! என் தலைவருடைய சில அடையாளங்கள் எல் லாம் உங்களிடத்தில் விளங்குவது கண்டு நாணி நின்றேன்" என்றாள். இதையவள் கூறத்தொடங்குகையி லேயே முனிவன், "நம்மனையாள் அல்லவோ தன் தவற் றை நினைத்து வருந்தி இக்கோலங்கொண்டு வந்திருக்கி றாள்" என்று தன் மனதிற்குள் நினைத்துக்கொண்டான்.

ஆயினும் தான் நினைத்ததை அவளுக்கு வெளிக்காட்ட வில்லை.

சிவகாமி மீண்டும் முனிவனை நோக்கி, "முனிக்கரசே! என் தலைவர் மிகவும் அருளுடையவர்; ஆதலின் சின்னாள் கழித்து வருவார் என்று எதிர்பார்த்தேன். வரவில்லை. எல்லாவிடங்களிலும் சென்று தேடினேன் காணவில்லை. ஆதலின், இனி இவ்வுடலை வைத்திருக்கக்கூடாது. இவ்வுலகு என் விஷயத்தில் மட்டும் யமலோகமாகத் தோன்றுகிறது. இனி இதோ இந்நெருப்பில் வீழ்ந்து உயிர் துறத்தலே தக்கது" என்று கூறிக்கொண்டு நெருப்பின் பக்கஞ் செல்ல அடியெடுத்தாள். எடுத்தது தான் தாமதம், உடனே முனிவன் எழுந்து அவளைக்கட்டிப் பிடித்துக்கொண்டு, "சிவகாமி! யானே உனது சிதம்பரன். நீ என்னிடத்துக்கொண்டுள்ள பேரன்பை இன்றுதான் அறிந்தேன். நானிருக்கும் பொழுது என் நீ நெருப்பில் விழப்போகிருய்?" என்று இனிய குரலுடன் கூறினன். அப்பொழுது சிவகாமி அடைந்த களிப்பிற்கு ஓரளவில்லை. தன் முயற்சி வீண் போகாது கைகூடியதைக் குறித்துக் கடவுளை வணங்கினள். பின்பு கணவனுடன் சென்று இல்லற வாழ்க்கையை இனிமையாய் நடத்தினள். இருவரும் வெகுகாலம் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

குலமக ளிர்க்குக் கொழுநனே தெய்வம்.

---

3. நல்லதங்கை

முன்னொரு காலத்தில் வடமதுரை என்னும் பட்டினத்தை ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் பெயர் இராமலிங்கராஜன் என்பது. அவன் குடிகளைத் தன்னுயிர்போல் கருதக்கூடியவன். நீதிதவருதவன். அவன் தனக்கு அழகிற்சிறந்த இந்திராணி என்னும் பெண்ணை மணஞ்செய்து கொண்டு சந்தோஷமாகக் காலத்தைக் கழித்தான். ஆனல்

மணஞ்செய்து நெடுநாளாகியும் புத்திரப்பேறு இல்லாத ஒரு குறை மட்டும் இருந்தது. அதனால் அவன் தன் மனைவியுடன் சிவபெருமானை நோக்கி வரம் கிடந்தான். கடைசியில் அம்பெருமான் அருளால் ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்றான். தான் அருமையாய்ப்பெற்ற மக்களை கண்போற்கருதிக் காத்து, புத்திரனுக்கு நல்லண்ணன் என்ற பெயரையும், புத்திரிக்கு நல்லதங்கை என்ற பெயரையும் வைத்தான்.

அம்மக்கள் நாளுக்கு நாள் பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து ஒருவர் மற்றொருவரைவிட்டுப் பிரியாத அன்புடையவர்களாய் இருந்துவந்தனர். அரசன் அவ்விருவர்க்கும் உரிய பருவத்திலேயே கல்வியைக் கற்பித்தான். அவர்களும் ஆசிரியர் கூறும் விஷயங்களை விடாது கற்றுத்தேர்ந்தனர்.

இராமலிங்கராஜன் முதலில் தன் புத்திரனுக்கு மணம் முடிக்கக் கருதினான். அப்பொழுது தன்னையொத்த பெருமையும் புகழையும் உடைய ஓர் அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரு புத்திரியிருந்தாள். அவள் பெயர் அலங்காரி என்பது. அலங்காரியை இராமலிங்க ராஜன் அவள் பெற்றோரிடம் தன் மகனுக்குக் கொடுக்குமாறு கேட்டான். அவர்களும் இசைந்தனர். உடனே நல்லதொரு நாளைப் பார்த்து அதிவிமரிசையாக நல்லண்ணனுக்கும் அலங்காரிக்கும் கல்யாணத்தை நிறைவேற்றினான். பிறகு அவன், சில காலம் உயிருடன் இருந்து நல்லதங்கைக்குக் கலியாணம் செய்வதற்கு முன்னமேயே உயிர் துறந்தான்.

பிறகு நல்லண்ணன் தன் பிதாவிற்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகளை எல்லாம் ஒழுங்காகச் செய்து முடித்தான். தன் நாட்டுக்குடிகளைத் தன் தந்தை எவ்வாறு பாதுகாத்து வந்தாரோ, அதினும் பதின்மடங்கு அதிக

மாக அன்புடன் பாதுகாத்து வந்தான். அதனல் குடிகளும், 'தந்தை எப்படி தனயனப்படி, என்ற பழமொழிப்படி நல்லண்ணன் அன்புடையவனக விருக்கிருன்' என்று புகழ்ந்து கொண்டாடினர். நல்லண்ணன் தன் தந்தை இருந்தால் எவ்வாறு சிறப்புச் செய்வாரோ, அவ்வளவு சிறப்பாகத் தன் தங்கையைக் காசி ராஜனுக்கு மணம் முடித்துக்கொடுத்தான். அளவிறந்த சீதனப் பொருள்களையும் வழங்கினன். அதன் பிறகு, நல்லதங்கை தன் மணளனுடன் காசி நகரத்தை யடைந்தாள்.

காசி ராஜன் நல்ல தங்கையினிடத்துக் காணப்பட்ட அன்பு, ஒழுக்கம், மரியாதை முதலிய குணங்களுக்கு மெச்சியவனய், அவளுடன் சந்தோஷமாக இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தான். அவளும் தன் கணவனைத் தன்னுயிர்போல் மதித்து வந்தாள். வரும் நாளில் அவர்களுக்குக் கடவுளருளால் ஏழு குழந்தைகள் உண்டாயின. அரச குலத்தில் எத்தனை குழந்தைகள் பிறந்தால் தான் என்ன? அத்தனையும் மாணிக்கந்தானே. காசி ராஜன் பொருட் செல்வத்துடன் புத்திரச் செல்வத்தையும் பெற்றதைக் குறித்து அளவிலா ஆனந்தங்கொண்டான். அப்புத்திரர்களைக் கண்ணினுள் இருக்கும் மணியெனக் காத்து வந்தான்.

இவ்வாறிருந்து வரும் நாளில் காசி நகரத்தில் இரண்டு வருடகாலம் மழை பெய்யாது போயிற்று. அதனல் விளைபொருள்கள் எல்லாம் பாழாயின. எங்கு பார்த்தாலும் பஞ்சம் அதிகரித்தது. குடிகள் பலவாறு கஷ்டம் அடைந்தனர். அரசன் குடிகள் படுந்துயரைக் கண்டு வருந்தினன். பயிர்கள் செழிக்கும்வரை யாதொரு வித மான வரிகளும் கொடுக்க வேண்டாமென்ருன். தன் பொக்கிஷசாலைகளில் உள்ள பொருள்களை எல்லாம் எடுத்து வேற்று நாடுகளில் உள்ள உணவுப்பொருள்களை வாங்கி ஜனங்களுக்குக் கொடுத்துப் பாதுகாத்தான்.

பஞ்சமோ அதற்கும் தணிந்தபாடில்லை. தொடர்ந்தாற் போல பத்து வருடங்கள் ஒரே நிலையாக இருந்தது. பொக்கிஷ சாலைகளில் உள்ள பொருள்களும் செலவழிந்தன. என் செய்வான் பாவம்! உடனே தன் குடிகளைப் பார்த்து, ''குடிகளே! உங்கள் குறைகளைப் போக்குவதற்காக எவ்வளவோ முயன்றேன். என் பொருள்களை யெல்லாம் செலவழித்தேன். அதற்கும் அது தணிவதாகவில்லை. என்னிடத்து இனிப் பொருளுமில்லை. ஆதலால், நீங்கள் வேற்று நாடுகளுக்குச் சென்று குடியேறி வாழுங்கள். பிறகு நாடு செழித்தவுடன் மறுபடியும் இங்கு வாருங்கள்'' எனக்கூறி விடுத்தான். குடிகளும் அவ்வாறே வேற்று நாடுகளுக்குச் சென்றனர். பிறகு அரசன் தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களுக்குங் கூடக் கஷ்டப்பட வேண்டியதாயிற்று. அப்பொழுது, நல்ல தங்கை அவளைப் பார்த்து, ''தலைவரே! இதுகாறும் குடிகளுக்கு நன்மைகளைச் செய்து, இனிச் செய்யமுடியாததினால் அவர்களை வேற்று நாடுகளுக்கு அனுப்பிவிட்டீர்கள். தற்பொழுது நம் அரண்மனையில் மக்கள் படும் துன்பத்திற்கோ அளவில்லை. நம் மக்கள் வாட்டத்தைத் தணிப்பது கருதி, நாமும், எனது சகோதரரும், தங்கள் மைத்துனருமாகிய நல்லண்ணன் நாட்டிற்குச் செல்லுவோமே''

என்றாள்.

அதைக்கேட்ட காசி ராஜனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. உடனே தன் மனைவியைப் பார்த்து, ''பெண்ணே! நீ கூறுவது சரிதான். ஒருவன் சுகமாக வாழ்கின்ற நாளில் உறவினன் வீட்டுக்குச் சென்றாலும் செல்லலாம்; ஆனால், கஷ்டப்படுகின்ற காலத்திற் செல்லலாகாது. மேலும், நமக்குக் கல்யாணமாகி இருபது வருடங்களாகியும், உன் தமையன் இங்கு வந்திருக்கிறானா? இல்லையே; தவிரவும் 'நீ யொருத்தி இருக்கிறாய்' என்ற எண்ணங்கூட இல்லாத அவன் நாட்டிற்குச் செல்வது

தகாது" என்றனன். அதைக்கேட்ட நல்ல தங்கை மீண்டும், "அரசே! தாங்கள் என் தமையனுரை அவ்வாறு கருதவேண்டாம். அவர் தன் உயிரைக் காட்டிலும் என்னிடத்து அன்பு அதிகமாகச் செலுத்துபவர். நாம் அடிக்கடி போய் வராததினுல்தான், நம்மீது அவர் கோபங் கொண்டிருக்கிருர்" என நினைக்கிறேன் என்ருள்.

தன் மனைவி கூறியது ஒருவிதத்தில் தனக்கு திருப்தியளித்தபோதிலும், 'தான் அவனிடத்திற்குச் செல்வது தன் பெருமைக்குக் குறைவு' என நினைத்தான். பிறகு மனைவியைப் பார்த்து, "நங்காய்! நீ மக்கள் படும் துயரைக் கருதி அங்குச் செல்ல வேண்டுமென நினைக்கிருய். நீ வேண்டுமானுல் மக்களை யழைத்துக்கொண்டு செல். யான் வரமாட்டேன். சென்ற விடத்தில் உன் பெருமைக்குக் குறைவு ஏற்படுமாயின், இவ்விடத்திற்கு வராதே. அவ்விதம் வரின் யான் உன்னெடு வாழ விரும்பேன்" எனக் கூறி யனுப்பினுன்.

நல்லதங்கையும் தம் மக்கள் எழுவரையும் அழைத்துக்கொண்டு காடும் மலையும் கடந்து பல நாள் யாத்திரை செய்தாள். இடைவழியில் அவள் மக்களுடன் அடைந்த அல்லலுக்கு ஓரளவில்லை. கடைசியில், வெயிலென்றும், பனியென்றும் பாராது நடந்து நடந்து வடமதுரையின் பக்கத்தை யடைந்தாள். மக்களும் சரியான உணவு உட்கொள்ளாததால் வாடிய முகத்துடன் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தனர். அப்பொழுது நல்லண்ணன், காட்டிற்குச் சென்று வேட்டை யாடுவதற்காக, ஏவலர் சூழ, குதிரையின்மீது வந்து கொண்டிருந்தனன். அவன் தனக்கு எதிரே வாடிய மேனியும் வருந்திய முகமும் உடையவளாய், ஏழு மக்களுடன் வந்துகொண்டிருக்கும் நல்ல தங்கையைக் கண்டான். கண்டதும் தனக்குள், "மனித சஞ்சார மற்ற இக்காட்டின் வழியாகத் தன்னந் தனியே புத்திரர்களை யழைத்துக்கொண்டு இப்பெண் வர

வேண்டிய காரணமென்ன? ஆகாராதிகள் இல்லாமையால் வருந்தியவளாகவும் காணப்படுகின்ருள். உயர்ந்த அரசர் குலத்தில் உதித்தவளாகவும் தோற்றுகின்ருள். இப்பேர்ப் பட்ட பெண் யார் என்பதை விசாரித்து அவள் குறையை நீக்கவேண்டும்'' என நினைத்து, அவளைப் பார்த்து, ''அம் மையே! நீங்கள் யாவர்? இங்கு எவ்விடம் நோக்கிச் செல்லுகின்றீர்கள்? உங்கள் மனதில் உள்ள கவலை யென்ன? உள்ளதையுள்ளவாறு கூறுங்கள். என்னல் ஆனவற்றைச் செய்கிறேன்'' எனக் கூறினுன்.

அதைக்கேட்ட நல்லதங்கை அவனைப் பார்த்து, ''சீமானே! யான் காசி நகரத்து அரசனுடைய மனை யாள். வடமதுரைப் பட்டினத்தை முன்னல் ஆண்ட இராமலிங்க ராஜனுடைய புத்திரி. என் பெற்ருேர்கள் காலஞ் சென்று விட்டனர். எனது சகோதரர் இப்பொ ழுது அதனை யாண்டு வருகிருர். தற்பொழுது எங்கள் தேயத்தில் பத்து வருட காலமாக மழையில்லாமையால் பஞ்சம் அதிகரித்துவிட்டது. எனது அரசர் குடிகளைப் பலவிதத்திலும் பொருள் கொடுத்துக் காத்தார். பொக் கிஷ சாலைகளிலுள்ள பொருள்களும் செலவாயின. ஆத லின் அவர்களை, 'வேற்று நாடுகளுக்குச் செல்லுங்கள். மழை பெய்து நாடு செழித்த பிற்பாடு இங்கு வாருங்கள்' என்று கூறி அனுப்பிவிட்டார். அதைப் பார்த்துக் கொண்டு இருந்த யான், அவரைப் பார்த்து, ''அரசே! நம் புத்திரர்களும் கஷ்டப்படுகின்றனரே. நாம், எனது தமையன் நாட்டுக்குச் செல்வோமே'' என்றேன். அதற் கவர், சிறுமை யடைந்திருக்கும் நிலையில் தான் வரமுடி யாதென்றும், நான் வேண்டுமானுல் போகலாமென்றும் கூறியனுப்பினுர். அதனுல் இங்குப் புறப்பட்டு வந்தேன். என்ருள். இவ்வாறு அவள் கூறி முடிக்கும் முன்ன மேயே, தன் தங்கை என்பதை யறிந்துகொண்ட நல்லண் ணன், குதிரையை விட்டிறங்கி, கண்ணீர் சிந்தி, புத்திரர்

களை எடுத்து மார்போடு அணைத்து முத்தமிட்டான். அதன் பின் அவளைப் பார்த்து, "தங்காய் இவ்வளவு காலமாக யான் ஒருவன் இருக்கிறேன் என்று நினைத்தாயில்லையே. போகட்டும். தற்பொழுதாவது அண்ணன் ஒருவன் இருக்கிறான் என்று வந்தனையே. உனக்கும் இவ்வளவு துன்பம் பம் வரலாமா? என் செய்வது? நாம் செய்த வினையின் பயனை நாம் தானே யனுபவிக்க வேண்டும்" என்று கூறி அவளைத் தேற்றினான். அதன் பின், வேட்டைக்குச் செல்வதாயும் இரண்டு தினத்தில் திரும்பி வருவதாயும் கூறி, தன் ஏவலர்களிற் சிலரை யவளுடன் அனுப்பித் தன்னரண்மனைக்குச் செல்லுமாறு கூறி விடுத்தான்.

நல்லதங்கை ஏவலருடன் சென்று தன் அண்ணன் அரண்மனையை நெருங்கினாள். அப்பொழுது மேன் மாடத்தில் உலாவிக் கொண்டிருந்த நல்லண்ணன் மனைவி அலங்காரி யென்பவள் சிறிது தூரத்தில் தன் ஏவலருடனும் ஏழு மக்களுடனும் வந்து கொண்டிருந்த நல்லதங்கையைக் கண்டாள். கண்டதுதான் தாமதம். உடனே யவள் மனம் துடி துடித்தது. "ஆஹா! நம் தலைவருடைய தங்கையல்லவா இத்தனை குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வருகிறாள். இச்சனியன்களை யார் அழைத்தார்கள்? எனத் தனக்குள் கூறிக்கொண்டு, கீழிறங்கிச் சென்றாள். தன் தாதியை யழைத்து வாயிற்கதவைத் தாளிடும்படியாகக் கூறிவிட்டுப் படுக்கையில் போய் முக்காடிட்டுப் படுத்துக்கொண்டாள்.

நல்லதங்கையும் அரண்மனையை அடைந்தாள். வாயிற் கதவு தாளிட்டு இருப்பதைக் கண்டாள். "அண்ணனுடைய அடையாத வாயிற் கதவு இன்று அடைபட்டிருப்பதின் காரணம் யாதோ! தெரியவில்லையே?" எனச் சிந்தித்தாள். பிறகு, கதவைக் கைகளினால் தட்டி, "அண்ணியாரே! அண்ணியாரே! கதவைத் திறவுங்கள், உங்களுடைய அருமைநாத்தி வந்திருக்கின்றேன்" எனக் கூறி

ளுள். வேலையாட்கள் என்ன செய்வர்? அவளுடைய உத்தரவுக்கு அஞ்சித் திறக்காது இருந்து விட்டனர். நல்ல தங்கை மீண்டும் அவ்வாறு கூறினுள். அதற்கும் திறந்த பாடில்லை. பிறகு, மறுபடியும் கதவைத் தட்டி, "அண்ணியாரே! யான் வந்து விட்டேனே என்ற வருத்தத்தினுல் கதவை யடைக்கவேண்டாம். யான் இதோ போகிறேன்" என்று கூறினுள், அதைக்கேட்ட மாத்திரத்தில் அலங்காரி, 'நாம் கதவைத் திறக்காது அவளை யனுப்பி விட்டால் அச்சமாசாரம் நம் தலைவருக்குத் தெரியாமற் போகாது. தெரிந்தால் அவர் கோபத்திற்கு நாம் ஆளாக வேண்டி வருமே' என நினைத்து, வேலையாளை யழைத்து, 'அச்சனியன்களுக்குக் கதவைத் திறந்துவிடு' என்ருள். ஏவலாளனும் உடனே சென்று திறந்து வருமாறு கூறினுன். நல்லதங்கையும் 'இன்னும் யாது நடக்கிறதென்பதைப் பார்ப்போம்' என நினைத்துக்கொண்டு உள்ளே சென்ருள். அங்கு அலங்காரி முக்காடிட்டுப் படுத்திருப்பதைக் கண்டாள். உடனே யவள் பக்கம் சென்று, "அண்ணியாரே! தங்களுடம்பிற்கு என்ன? யான் வந்த நேரத்தின் பலாபலனு நீங்கள் இவ்விதம் படுத்திருக்கவேண்டும்" என்ருள். அதற்குள், அவள் குழந்தைகள் அங்குமிங்குமாக அலைந்து கொண்டு கூக்குரலிட்டன. இவற்றையெல்லாம் பார்த்த அலங்காரிக்கு முன்னிலும் பதின் மடங்காகக் கோபம் அதிகரித்தது. அவளை உறுத்துப் பார்த்து, "உன்னை இங்கு யார் அழைத்தது? இத்தனை சனியன்களை என் அழைத்து வந்தாய்? தலைவலியுடன் கஷ்டப்படுகிற எனக்குத் தொந்தரவு கொடுக்காதே. இந்த நாய்களை அழைத்துக்கொண்டு விரைந்துசெல்" என்று கடுகடுத்துக் கூறினுள்.

அவள் அவ்விதம் கூறியதைக்கேட்ட நல்லதங்கைக்கு மனக்கவலை யதிகரித்தது. தன் கணவன் கூறியதைக் கேட்காமல் வந்ததற்குத் தக்க மரியாதை கிடைத்தது.

''இனி நம் தலைவரை நாடிச் செல்லுதலும் தகாது. ஏனெனின், அவரோ ''மரியாதைக் குறைவுடன் திரும்பி வருவாயானால், என் முகத்தில் விழியாதே'' என்று கூறிவிட்டார். 'மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்று பெரியோரும் கூறி யிருக்கின்றனர், அதனால், இனி நம் உயிரை வைத்திருக்கக்கூடாது என்று நினைத்து, ஒருவரிடமும் கூறாது வெளியே வெகுதூரஞ் சென்று, அங்குள்ளதொரு கிணற்றில் தன் ஏழு பிள்ளைகளையும் தள்ளி தானும் விழுந்து உயிர் துறந்தாள். இச்செய்தி, வடமதுரைப்பட்டினம் முழுதும் தெரிந்தது. அங்குள்ளாரனைவரும் அலங்காரியின் வன்னெஞ்சிற்கும், செய்த கெடுதல்களுக்கும் மனம் வருந்தினவர்களாய் அவளைத் தூற்றினர். மானத்தைக் காப்ப தன் நிமித்தம் மக்களுடன் தானும் உயிர் துறந்ததைக் குறித்து ஆறு போற கண்ணீரைச் சிந்தி மனமிரங்கினர். இவற்றைக்கண்ட அலங்காரி பயந்து, தன் நாயகன் வந்தால் அவனிடம் யாது சொல்வது எனச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

இது இவ்வாறிருக்க வேட்டைக்குச் சென்றிருந்த நல்லண்ணன், தன் பரிவாரங்களுடன் விரைந்து, தங்கையுடனும், மருமக்களுடனும் உரையாடலாமென வந்தான். அரண்மனையை யடைந்தான். அங்கு அரண்மனை முழுதும் அமைவுடனிருப்பதைக் கண்டான். பிறகு அந்தப் புரத்தினுட்சென்றுதன் தங்கையையும் தங்கை குழந்தைகளையும் தேடினான். காணவில்லை. உடனே யவன் மனதில், 'ஏதோ நடந்திருக்கிறது; அது இன்னதென்று தெரியவில்லை' என்ற சந்தேகம் ஏற்பட்டது. தன் மனைவியைப் பார்த்து, ''அலங்காரி! அநேகவருடங் கழித்துவந்த என்னருமைத் தங்கை எங்கே?'' என்றான். என்ன சொல்லுவாள் அலங்காரி? ஒன்றுங் கூறாது கன்னத்திற் கை வைத்துக்கொண்டு நின்றாள். மறுபடியும் நல்லண்ணன், ''வந்த தங்கை எங்கே?

வந்த தங்கை எங்கே? விரைவாகக் கூறுக" என்று மீசை துடிக்க, கண் சிவக்க, கைகள் படபடவென்றடிக்கக் கேட்டான். அதற்கும் அவள் ஒன்றும் கூருது மரம்போல நின்ருள். பிறகு கோபம் அதிகரிக்க, உடைவாளை உருவி அலங்காரியை வெட்டுவதற்குச் சென்ருன். அப்பொழுது, அலங்காரி அவனைப் பார்த்து, "தலைவ! உமது தங்கை வந்தது உண்மைதான். ஆனல், அவளிப்பொழுதிங்கில்லை. யான் எவ்வளவோ கூறியும் 'இங்குத் தங்கமாட்டேன்' என்று கூறிவிட்டாள். இதுதான் நடந்த விஷயம்" என்று உண்மை யுரைப்பவள்போல நடித்தாள். நல்லண்ணனுக்கு அவள் நடிக்கும் நடிப்புப் புலனுயிற்று.

பிறகு நல்லண்ணன், நடந்த விஷயங்களை மந்திரி முதலானவர்களிடம் கேட்டறிந்தான். அளவில்லாத துயரத்தில் மூழ்கினன். பின்பு 'உடற்பிறப்பில்லா உடம்பு பாழ்' என ஒளவையார் கூறிய பொன்மொழிப்படி இனி நம் உடல் இருந்தென்ன? இறந்தென்ன? என வுன்னினன். பிறகு, தன் தங்கைக்கும் தங்கை மக்களுக்கும் நேர்ந்த இறப்பிற்குக் காரணம் இவ்வலங்காரியாதலால், இவளை முதலில் சித்திரவதை செய்யவேண்டுமெனத் தீர்மானித்தான். ஆனல், அதனை யவன் வெளிக்காட்டவில்லை. தன் ஏவலாளர்களை யழைத்து ஒரு மண்டபம் நிருமிக்கும்படி ஏவினன். அவர்களும் சில தினங்கட்குள்ளாக அழகாய்க் கட்டி முடித்தனர். அத்துடன், உடனே யம்மண்டபம் இடிந்து விழும்படி செய்யக்கூடிய கருவிகளும் அரசன் உத்தரவுப்படி ஏவலர் செய்து வைத்திருந்தனர்.

மண்டபம் கட்டி முடிந்ததும் கிரகப்பிரவேசம் செய்யப்போவதாய், அலங்காரியின் உற்ருர்களுக்கெல்லாம் கடிதம் எழுதினன். மற்றவர்களுக்கும் எழுதினன். ஆனல் மற்றவர்களுக்கெழுதின கடிதம் வேறு. அக்கடிதத்தைப் பார்த்த உற்ருர்களனைவரும் வந்து கூடினர். அரசன், அலங்காரியிடம் சந்தோஷமாக, "மண்டபம் கட்டி முடிந்

தது; கிரகப் பிரவேசமும் இன்றுதான்; உன் உற்றார்கள் எல்லாம் வந்துவிட்டனர்: நீயும் நன்கு அலங்கரித்துக் கொண்டுவா'' என்றான். அவளும் அவன் கூறுவதனைத் தும் உண்மையென நம்பினாள். தன்மீது அரசன் சந் தோஷமாகவே யிருக்கிறான் என நினைத்தாள். தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டாள். பிறகு மண்டபத்தை யடைந்தாள். உற்றார்களுடன் உல்லாசமாக ஆனந்தத் துடன் பேசிக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது நல்லண்ணன் ஏதோ சொல்லுபவன் போல அலங்காரியை வெளியில் அழைத்தான். அவளும் வந்து அவனருகில் நின்றாள். அப்பொழுது அரசன் ஏவலர் களிடம் சைகை செய்தான். அதையறிந்ததும் ஏவலர் கருவிகளை முடுக்கினர். உடனே யவள் உற்றார் அடங்கிய மண்டபம் நெறு நெறுவென நொறுங்கி விழுந்தது. எல்லோரும் மாண்டனர். அப்பொழுது நல்லண்ணன், அலங்காரியைப் பார்த்து "ஏ! சண்டாளி! பார்த்தனையா? உன் சுற்றத்தார்கள் எல்லாம் நசுக்குண்டு உயிரிழக்கின் றனர்" எனச் சிரித்தான். அதைப் பார்த்த அலங்காரிக் குக் கவலை யதிகரித்தது. 'முன்னரே தீர்மானித்தல்லவா நம்மரசன் இவ்வாறு செய்திருக்கிறான்?' என நினைத்து முகத்திலும், மார்பிலும் அறைந்துகொண்டு அழுதாள். 'தன் வினை தன்னைச் சுடும்' என்ற பழமொழி தன்னிடத் துப் பலித்துவிட்டதே என்று ஏங்கினாள்.

அப்பொழுது நல்லண்ணன், ஏவலாளிகளை யழைத்து, "இச்சண்டாளியை யழைத்துக்கொண்டு சென்று சுண் ணாம்புக் காளவாயில் போட்டு நீற்றுங்கள்" என ஏவி னான். அவர்களும் அவளை யழைத்துக்கொண்டு சென்று அவ்வாறே செய்தனர். பிறகு, நல்லண்ணன், 'தானும் இனி இறப்பதே தக்கது' என நினைத்து உடைவாளை யுருவி, கழுத்தில் வீசிக்கொள்ள முயன்றான். அவ்வமயம் கடவுள்தோன்றி, "அப்பா! சற்றுப் பொறு. நீயே உல

கில் சகோதரியிடத்து வாஞ்சை யுள்ளவன். முன்பு இறந்த உன் சகோதரியும் குழந்தைகளும் உயிர்பெற்றுவிட்டனர். எனக் கூறி மறைந்தார். அவனும் அதைக்கேட்டு, சகோதரி யிறந்த கிணற்றின் சமீபமாகச் சென்றான். அங்கே நல்லதங்கை குழந்தைகளுடன் நிற்பதைக் கண்டான். அளவில்லாத ஆனந்தங்கொண்டான். கடவுளின் கிருபையை நினைத்துப் புகழ்ந்தான். பிறகு அவளையும் அவள் மக்களையும் அழைத்துக்கொண்டுபோய் தன்னரண்மனையில்வைத்து, தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினான். அதற்கு நல்லதங்கை, "அருமை யண்ணா! தாங்கள் என்ன பிழை செய்துவிட்டீர்கள்? சிறுவயதிலேயே எதையும் ஆராய்ந்தன்றோ செய்வீர்கள்! இது என் விதியின் பயனாக நடந்ததன்றி வேறு ஒன்றுமில்லை" எனச் சமாதானப் படுத்தினாள். பிறகு அவன் தேறி, சகோதரியுடனும் அவள் மக்களுடனும் சந்தோஷமாகக் காலங் கழித்தான்.

அவ்வாறிருக்கும் சமயத்தில், காசி நகரத்து அரசன், தன் நாடு மழை பெய்து செழித்துவிட்டமையினால், சந்தோஷ மடைந்து, தன் மனைவி மக்களை யழைத்துக் கொண்டு போக வடமதுரைக்கு வந்தான். நல்லண்ணன் மைத்துனன் வரவை யன்புடன் வரவேற்று உபசரித்தான். அதன்பின் நடந்தவற்றைக் கூறி வருந்தினான். காசி ராஜன், 'விதியினை வெல்வார் யாவருமில்லை' யெனத் தேற்றினான். பின்பு நல்லண்ணனை வேறு மணம் முடித்துக் கொள்ளுமாறு செய்து, தன் மனைவி மக்களுடன் காசி நகரம் அடைந்தான். நல்லண்ணனும் மணஞ்செய்து கொண்ட மனைவியுடன் இல்லறவாழ்க்கையைச் சுகமாகக் கழித்துவந்தான்.

நன்மைகள் செய்தார் நன்மையே அடைவர்.
தீமைகள் செய்தார் தீமையே அடைவர்.
தன்வினை தன்னைச் சுடும்.

4. ஆளப்பிறந்தான்

ஆலூர் என்பது ஓரூர். அதில் ஒரு ஏழைக்குடியானவன் வசித்து வந்தான். அவன் தன் மனைவியுடன் தினந் தோறும் வயல்களிற் சென்று வேலை செய்து, அதனல் கிடைக்கும் சொற்ப வருவாயைக்கொண்டு சந்தோஷமா கத் தன் குடும்பத்தை நடத்திவந்தான். அதனல் 'போது மென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பழ மொழிப்படி, அப்பொழுதைக்கப்பொழுது கிடைக்கும் வருவாய் அவனுக்குத் திருப்தியை யளித்தது. ஆயினும் அவனுக்கு ஒருகுறை யொன்று மட்டுமிருந்தது. அதா வது புத்திர பாக்கிய மில்லாமையேயாகும். அக்குடியான வன் அதனல் மனம் வருந்தி, மனைவியுடன் கடவுளை நோக்கி வரங்கிடந்தான்.

கடவுள், அவன் தன்னிடத்துக்கொண்டுள்ள பேரன் பிற்கு மெச்சி, ஒரு அழகிற் சிறந்த ஆண் மகவை யருளி ஞர். அம்மகவைப் பார்க்கப் பக்கத்திலுள்ளாரனைவரும் வந்து போய்க்கொண்டிருந்தனர். அவர்களுட் சிலர், அக் குழந்தையின் காந்தி மிக்க முகத்தைப் பார்த்து "இக் குழந்தை அரசர் வீட்டில் பிறக்கக்கூடியது. இராஜலக்ஷ ணங்களெல்லாம் பொருந்தி விளங்குகிறது" என்றனர். சிலர் சோதிட நூல் வல்லார், "இம்மகவு சாதாரணமான தென்று எண்ணவேண்டாம். நம் நாட்டரசனுடைய மகளை மணக்கப்போகிறதாகத் தெரிகிறது" என்று கூறி னர். இவ்வாறு வந்தவரெல்லாம் அதன் அழகைக்கண்டு புகழ்ந்துகொண்டாடினர்.

சில நாட்கள் சென்ற பிறகு இச்செய்தி அவ்வூர் அரச னுக்கு எட்டியது. அவன் தன் மனதிற்குள், "இது என்ன ஆச்சரியமாகவிருக்கிறது? ஓர் ஏழைக் குடியானவனு டைய பிள்ளை நம் பெண்ணை மணந்துகொள்ளுமாம். எது

வானுலுஞ் சரி; நாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். இக்குழந்தையை இப்பொழுதே அப்புறப் படுத்திவிடவேண்டும்" என நினைத்தவனாய் மாறுவேடம் பூண்டு அக்குடியானவன் இல்லத்தை யடைந்தான். அக் குடியானவனைப் பார்த்து, "அப்பா! யான் ஒரு வழிப் போக்கன்; இன்றிரவு இங்கு தங்குவதற்கு இடம் கொடுப்பாயோ" என்றான். அவனும் "ஐயா! இவ் வேழைக்குடிலில் தாங்கள் தங்கிப்போவதற்கு யான் செய்த பாக்கியந்தான் யாதோ? ஆதலின் சௌகரியமாய்த் தங்கிப் போகலாம்" என்றான். இவ்வாறு அவ்விருவரும் உரையாடிக்கொண்டிருக்கும் சமயத்தில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. உடனே அரசன், "அப்பா! உனக்கு எத்தனை குழந்தைகள்?" எனக்கேட்டான். அதற்கவன், "ஐயா! எனக்கு ஒரே ஆண் குழந்தை மட்டும் தான் உண்டு. அதுவும் கடவுளை நோக்கி வரங்கிடந்ததனால் கிடைத்தது. அதனைப் பார்ப்போரும், சோதிடர்களும், இவ் வூரரசனுடைய மகளை மணக்கும்' எனக் கூறுகின்றனர்" எனக்கூறி, அதனையெடுத்து அவனுக்குக் காண்பித்தான். அரசன் அக்குழந்தையைக் கூர்ந்து நோக்கினான். அத னிடத்து இராஜ லக்ஷணங்கள் அமைந்து விளங்குவதைக் கண்டான். தனக்குள், "சரிதான் ஒருக்கால் பிறர் கூறுகிற படி நடந்தாலும் நடக்கும்போல் தோன்றுகிறது. ஆத லின், இப்பொழுதே இதனைத் தொலைக்கவேண்டும்" என நினைத்து, அவனைப் பார்த்து "அப்பா! எனக்கு நீண்ட நாளாகப் புத்திர பாக்கியமில்லை. இக்குழந்தையை எனக் குக் கொடுத்தால், உனக்குப் பதினாயிரம் பொன் கொடுக்கி றேன். நீ சுகமாக வாழலாம்" என்றான். குடியானவன், "சுவாமி! அருமையாய்ப்பெற்ற குழந்தையை யான் எவ் வாறு கொடுப்பேன். இனிமேல் இவ்விதம் கேளாதீர்கள்" எனக் கூறினான். பிறகு அரசனும், வேறு ஏதோ பேசு பவன்போல் பேசி, அவ்விராப்பொழுதைக் கழித்துவிட்டுச் சென்றான்.

மறுநாள் தன் ஏவலாளனையழைத்து, குடியானவன் வீட்டிலிருக்கும் குழந்தையை யவனுக்குத் தெரியாமல் எடுத்து வருமாறு கூறினன். ஏவலாளனும் அவ்வாறே சென்று எடுத்துவந்தான். அரசன் அக்குழந்தையை ஒரு பெட்டியில் வைத்து ஆற்றில் ஒருவருக்கும் தெரியாமல் விட்டுவிட்டான். அதனல் இனி நேரவிருக்கும் அவமானம் தொலைந்தது என நினைத்துச் சந்தோஷித்தான். குடியானவனே குழந்தையைக் காணவில்லையே என்று ஏங்கி யழுதான். அவன் மனைவியும், 'இது யார் செய்த மாயமோ?' வென்று புலம்பினள். இச்சமாசாரம் அவ்வூர் முழுதும் பரவிற்று. எல்லாரும், 'குழந்தையைத் திருடுகிறவன் எங்கேனும் உண்டோ' வென ஆச்சரியங் கொண்டு பலவாறு பேசியவண்ணமாக விருந்தனர்.

இது இவ்வாறிருக்க நதியில் விடப்பட்ட குழந்தையோ மிதந்துகொண்டு வெகுதூரஞ் சென்றது. பெட்டி இலேசானதால் தண்ணீர் அதற்குள் செல்லவில்லை. குழந்தை யழுதுகொண்டே இருந்தது. அந்நதிக்கரையிலுள்ள மற்றொரு கிராமத்தில் வேறொரு குடியானவன் குழந்தைகளில்லாமல் மனைவியுடன் வருத்தத்தோடு இருந்தான். அவனுடைய குடிசையும் அந்நதிக்குப் பக்கமாகவிருந்தபடியால், குழந்தையின் அழுகுரல் அவர்கட்குக் கேட்டது. உடனே யவ்விருவரும் ஓடிப்போய் நதியைப் பார்த்தார்கள். அதில் ஒரு பெட்டி மிதந்து போவதைக்கண்டு, குச்சியின் உதவியால் சென்றுகொண்டிருந்த பெட்டியை யிழுத்து எடுத்தார்கள். பெட்டியில் காந்தியுடன் விளங்கும் குழந்தையைக் கண்டார்கள். அப்பொழுது அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கோ அளவில்லை. பிறகு குடியானவன் மனைவியைப் பார்த்து, "பெண்ணே! நாம் குழந்தையில்லாது வருந்தியதைக் கண்ட கடவுள், இக்குழந்தையை நமக்கு அனுப்பியிருக்கிறர்" என்றான். பிறகு அவ்விருவரும் கடவுளின் கருணையை

வியந்து, அக்குழந்தையை எடுத்துக்கொண்டு சென்று 'சந்திரமுகன்' எனப் பெயரிட்டுப் பிரியத்துடன் வளர்த்து வந்தனர்.

இவ்வாறு பதினாறு வருடங்கள் கழிந்தன. அப்பையனும் வள்ர்பிறைபோல் வளர்ந்து கல்வியிலும், அறிவிலும், சமயோசித புத்தியிலும் எவருங்கண்டு மெச்சும்படியான தன்மையில் விளங்கினான். இவ்வாறிவன் இருந்துவரும் நாளில், ஒரு நாள் அவ்வரசன் வேட்டையாடப் புறப்பட்டான். அவன் அநேக விடங்களுக்குச் சென்று வேட்டையாடிக் கடைசியில் தன்னுடன் வந்த பரிவாரங்களை விட்டுப் பிரிந்து வழிதவறி தற்செயலாகக் குடியானவனும் சந்திரமுகனும் இருக்கும் கிராமத்தை யடைந்தான். குடியானவன் அரசனைக்கண்டு வணங்கி, "அரசே! தாங்கள் வேட்டைமேற் சென்று களைத்திருப்பதாகத் தெரிகிறது. தங்கள் களைப்புத்தீரும் பொருட்டு அடியேனுடைய குடிசைக்கு எழுந்தருள வேண்டுகிறேன்" என்றான். அரசனும் அதற்கிசைந்து சென்றான்.

வீட்டிற்குச் சென்றதும் அங்கேயிருந்த சந்திரமுகனைச் சந்தித்தான். சந்தித்ததுதான் தாமதம்; உடனே யவன் மனதில் பயமும் குழப்பமும் ஏற்பட்டது. சந்திரமுகனோ; அன்றலர்ந்த செந்தாமரை போன்ற முகத்துடன் அரசனை வரவேற்றுஉபசரித்தான்.அப்பொழுது அரசன்,குடியானவனைப்பார்த்து, "அப்பா! இச்சிறுவன் யார்? இவனுக்கும் உனக்குமுள்ள சம்பந்தமென்ன?" என்று கேட்டான். குடியானவன், "அரசே! தங்களிடம் உண்மை கூறுவதில் என்னகுறை. பதினான்கு வருடங்கட்கு முன் இந்நதியில் ஒரு பெட்டி மிதந்துவந்தது. அதில் அழுகுரலுடன் கூடிய சப்தம் கேட்டது. உடனே யானும் என் மனைவியும் சென்று பெட்டியை யிழுத்துப் பார்த்தோம்; அதில் இச் சிறுவன் இருந்தான். எங்களுக்கு நீண்ட

நாளாகக் குழந்தைகளில்லாததால் இவனையே கண்மணி யெனக் கருதிக் காத்து வருகிறோம்" என்றான்.

இதைக் கேட்டதும் அரசனுக்கு முன்னிலும் பதின் மடங்கு அதிகமாக திகிலேற்பட்டது. 'தான் முன் கொல்ல நினைத்து நதியில் விடப்பட்ட குழந்தை உயிருடன் இருக்கிறதே' எனத் துடிதுடித்தான். உடனே யவனைக் கொல்ல நினைத்தான். ஆனால் அவ்வாறு செய்ய அவன் மனம் துணிந்திலது. பிறகு, அரசன் குடியானவனைப் பார்த்து "அப்பா! இப்பையன் பிற்பாடு நல்ல நிலைமைக்கு வருவான். அவ்வமயம் இவனை யான் என்னிடத்திலேயே வைத்துக்கொள்வேன். தற்பொழுது எனக்காக இவனை ஒரு காரியஞ் செய்யச் சொல்லவேண்டும். ஒரு அவசரகாரியமாக என் மனைவிக்கு ஒரு நிருபம் வரைந்து வைத்திருக்கிறேன். இதனை யவளிடம் ஒருவருக்கும் தெரியாமல் கொண்டு போய் கொடுத்து வரும்படி செய்யவேண்டும். இதற்குச் சம்மதந்தானா?" என்று கேட்டான். அரசன் கேட்கும்பொழுது குடியானவன் யாது சொல்லுவான்? அரைமனதாய்ச் சம்மதித்தான். சந்திரமுகனும் தகப்பனார் சம்மதத்தை யறிந்து புறப்படத் தயாராக விருந்தான். அரசனும் ஒரு கடிதத்தை யெழுதி சந்திரமுகனிடம் கொடுத்தனுப்பினான்.

சந்திரமுகன் அதனைப் பெற்றுக்கொண்டு இரண்டு மூன்று தினங்களாக நடந்துசென்று கடைசியில் களைப்படைந்து வழியில் உள்ளதோர் குடிசையில் தங்கினான். அக்குடிசையில் ஒரு கிழவி இருந்தாள். அவள் இச்சிறுவனுடைய அழகிற்கும் அன்பிற்கும் மெச்சி மனம் இரங்கியவளாய், "சிறுவா! நீயோ ஒன்றும் அறியாத சிறுபையன். இக் குடிசையோ கொலைக்கும் கொள்ளைக்கும் அஞ்சாத கள்ளர்கள் வசிக்குமிடமாகும். அவர்கள் உனக்கு ஏதேனும் தீங்கு செய்தாலும் செய்யலாம். ஆதலால் வேறு ஓர் இடஞ்சென்று தங்கியிரு" என்றாள். சந்திரமுகனோ வழி

நடந்த களைப்பினால், அவள் கூறியதைக் கவனிக்காமல். அங்கே கிடந்த ஒரு கட்டிலில் படுத்து அயர்ந்து தூங்கி விட்டான். நடுநிசியாயிற்று.

கிழவி கூறியதுபோலவே கள்ளர்களும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அங்கு அயர்ந்து தூங்கும் சந்திரமுகனைக் கண்டார்கள். உடனே அங்குள்ள கிழவியைப் பார்த்து, "பாட்டி! இதோ படுத்திருக்கும் பையன் யாவன்?" என வினவினர். கிழவியும் நடந்தவற்றைக் கூறினாள். திருடர்கள் இப்பையனிடம் ஏதேனும் பொருளகப்படும் என நினைத்து அவனைச் சோதிக்கத் தொடங்கினர். சந்திரமுகனோ அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்துவிட்டான். அவர்கள் அவனைச் சோதித்துப் பார்க்கையில், அவ்வூரரசன் கொடுத்தனுப்பிய கடிதமொன்றே கிடைத்தது. உடனேயவர்கள் அதனை எடுத்துப் பிரித்துப் பார்த்தனர். அதில், "இக்கடிதம் கொண்டு வருபவன் எனக்கு ஜன்ம விரோதி; இவனை எப்படியாவது யான் வருவதற்குள் கொன்றுவிடு," என்றெழுதியிருந்தது. உடனேயவர்கள் அப்பையனை யுற்றுப்பார்த்தனர். அவனுடைய முகத்தின ழகு அவர்கள் மனதைக் கவர்ந்தது. அதனாலவர்கள் இரக்கங்கொண்டு, அக்கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு "இக்கடிதம் கொண்டுவரும் சிறுவன் எனது ஆப்த நண்பனுடைய புத்திரன். அல்லாமலும் நமக்கு மருமகனாவதற்கு ஏற்ற பெருந்தன்மையும், பெருங் குணங்களும் உடையவன். ஆதலின் யான் வருவதற்குள்ளாகவே, நம் பெண்ணை இவனுக்கு மணம் முடித்துவை." என்று எழுதி, அரசனால் வரையப்பட்ட கடிதவுறைக்குள் வைத்து அவன் உடுப்பில் முன்னிருந்ததுபோல் வைத்துவிட்டனர். சந்திரமுகனும் அயர்ந்து தூங்கி மறுநாள் விடியற்பொழுதில் எழுந்திருந்து தன் பிரயாணத்தை மறுபடியும் ஆரம்பித்தான்.

அன்று மாலைப் பொழுதிலேயே அரண்மனையையடைந்து, காவலாட்களின் உத்தரவின் பேரில் உள்ளே

சென்று, இராணியை வணங்கி, கடிதத்தைக் கொடுத்தான். அவளும் அக்கடிதத்தை ஒருமுறைக்கிருமுறை படித்துப் பார்த்தாள். கடிதத்தை மூடினாள். சிறுவனை ஏற இரங்கப் பார்த்தாள். அளவிலாத ஆனந்தங்கொண்டாள். பின்பு, "நம் மகளுக்கு இவனே தக்க மணாளன். நம் புருஷன் வந்து மணஞ்செய்யலாமென்றால் அதற்கு ஏதேனும் இடையூறு ஏற்படும் போலும்; அதனால் தான் நம் கணவன் இவ்வாறு எழுதியிருக்கிறார்" எனத் தன் மனதிற்குள் நினைத்தாள். பிறகு ஏவலாட்களை யழைத்து அரண்மனையை யலங்கரிக்கச்செய்து அன்றிரவிலேயே தன் மகளைச் சந்திரமுகனுக்கு மணஞ்செய்வித்தாள். அரண்மனை முழுதும் பெருங் குதூகலமாகவிருந்தது. பார்த்தவரெல்லாம் "நங்கைக்கேற்ற நம்பி இவனே; நம்பிக்கு ஏற்ற நங்கையுமிவளே" எனப் புகழ்ந்தனர். பொழுது விடிந்தது. அரசன் மெதுவாகக் குதிரையின்மீதேறிக்கொண்டு "நாம் எழுதிய நிருபப்படி நம் மனைவி, அச் சிறுவனைக் கொன்றிருப்பாள். நம்முடைய சத்துரு தொலைந்தான்; நானே ஒரு பெரும் அரசன்; அவனோ ஓர் ஏழைக்குடியானச் சிறுவன்; அவனாவது என் அருமந்த மகளை மணப்பதாவது" என்று கூறிக்கொண்டு அரண்மனையை வந்து அடைந்தான்.

அரண்மனை வாயிலில் மணப்பந்தர் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும், மணவாத்தியங்கள் முழங்குவதையும் கண்டான். பித்துப்பிடித்தவன்போல் சரேல் என உள்ளே ஓடினான். மணம் முடிந்து வீற்றிருக்கும் தம்பதிகளைக் கண்டான். கண் சிவக்கக் கோபங்கொண்டான்; தன் மனைவியை வாய்க்குவந்தவாறு பேசிப் பிடித்து அடித்தான். பிறகு தன் மருமகனான சந்திரமுகனைப் பார்த்து "எவனொருவன் ஆயிரம் மைல்களுக்கப்பாலுள்ள குகையில் வசிக்கும் இராக்ஷஸனுடைய தலையில் உள்ள தங்க மயிர்களில் மூன்று கொண்டுவருகிறானோ? அவனே என்

மகளை மனைவியாகப் பெறுவதோடு எனக்குப் பின் இச் சிம்மாதனத்தின் உரிமையையும் பெறுவான்" எனக் கூறினன். அரசனுடைய ஆணையைக்கேட்ட சந்திரமுகன் அவ்வாறே கொண்டுவருவதாக வாக்களித்து, தன் மனைவியிடமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

அநேக மைல் தூரஞ்சென்று ஒரு ராஜ்யத்தின் கோட்டை வாயிலை யடைந்தான். அவ்வாயிலைக் காவல் செய்துகொண்டிருந்த ஒரு சேவகன் சந்திரமுகனைப் பார்த்து, "நீ யார்? எந்த ஊர்? உனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டான். அதற்குச் சந்திரமுகன், தன் பெயரையும் ஊரையும் கூறி, 'தனக்கு எல்லாம் தெரியும்' என்றும் கூறினன். அதற்குச் சேவகன், "அப்பா! அப்படியானல் சரி; உன்னைத்தான் நான் இத்தனை நாட்களாக எதிர்பார்த்திருந்தேன். எங்களுடைய நகரின் நடுவேயுள்ள ஊற்றுக்குழாயில் இதுநாள்வரை வந்துகொண்டிருந்த தண்ணீரானது திடீரென்று நின்றுவிட்டது. அதன் காரணம் தெரிவிப்பாயாக" என்றான். அதற்குச் சந்திரமுகன், "நண்ப! யான் சென்று என் காரியத்தைப் பார்த்துக்கொண்டு இதே வழியாகத் திரும்பவருவேன். அப்பொழுது அதை யுனக்குத் தெரிவிக்கிறேன்" என்றான். காவல்காரனும், "நீ அதைத் தெரிவித்தால் எங்களுடைய அரசன் உனக்கு இரு குதிரைகள் சுமக்கக்கூடிய தங்கம் பரிசளிப்பான்" என்றான்.

பிறகு சந்திரமுகன் அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் பிரயாணத்தைத் தொடங்கினன். வெகு தூரஞ் சென்றதும் மற்றொரு இராஜ்யத்தின் கோட்டை வாயிலை யடைந்தான். அக்கோட்டை காவல்காரனும் சந்திரமுகனைப் பார்த்து முன் காவல்காரன் கேட்டது போலவே கேட்டான். அதற்குச் சந்திரமுகன், முதல்வனுக்குக் கூறியதுபோலவே பதிலளித்தான். அதைக்கேட்ட அக்காவலாளன், "அப்பா! இந்த ராஜ்யத்தில் தங்க

மாம்பழம் காய்க்கும் மரமொன்றிருக்கிறது. அம்மரம் இதுநாள் வரையும் தங்க மாம்பழம் காய்த்தது; கொஞ்ச நாளாகக் காய்க்காமலிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன ?" என்று கேட்டான். அதற்குச் சந்திரமுகன், முதல்வனுக்குக் கூறியதுபோலவே கூறி அவனை விட்ட கன்றான்.

மறுபடியும் வெகுநாட்கள் பிரயாணஞ்செய்து ஓர் ஏரிக் கரையை யடைந்தான். சந்திரமுகன் அவ்வேரிக் கரையைத் தாண்டித்தான் செல்லவேண்டியதாயிருந்தது. படகோட்டி எதிர்க்கரையிலிருந்தபடியால், சந்திரமுகன் இருந்த கரைக்கு படகைக் கொண்டுவரும்படி அங்கே யிருந்த மணியை யடித்தான். உடனே படகோட்டி, படகை சந்திரமுகனிருக்கும் கரைக்குக் கொண்டுவந்து சந்திரமுகனை ஏற்றிக்கொண்டு சென்றான். செல்லும் பொழுதே படகோட்டி, சந்திரமுகனைப் பார்த்து, "ஐயா! உமக்கு யாது தெரியும்?" என்று கேட்டான். அதற்கவன் "எனக்கு எல்லாம் தெரியும்" என்றான். படகோட்டி, "அப்படியானல் தாங்கள் எனக்கொன்று சொல்லவேண்டும். என்றைக்கு இப்படகின் துடுப்பைக் கையிற் பிடித்தேனே அன்றைக்குமுதல் இன்றைக்கு வரையும் அத்துடுப்பானது என் கையுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது. என் உயிருள்ளவரையில் நான் தான் படகோட்டவேண்டும் போலிருக்கிறது. இதன் காரணம் தெரிவிப்பாயாக" என்றான். சந்திரமுகன் அதற்குச் சந்தோஷமாக, "அப்பா! யான் திரும்ப வரும்பொழுது சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டுக் கரையை யடைந்து தன் வழியை நோக்கிச் சென்றான்.

சென்றவன் சில மைல் தூரஞ் சென்றதும், அரசனல் சொல்லப்பட்ட இராக்ஷஸன் வசிக்கும் குகையை நெருங்கினன். அவ்வமயம் இராக்ஷஸன் வெளியே சென்றிருந்தான். அவனுடைய பாட்டி வாயிற்படியண்டை உட்

கார்ந்திருந்தாள். அவள் சந்திரமுகனைக் கண்டதும், "அருமைக் குழந்தாய்! நீ யாவன்? இக்குகையண்டை ஏன் வந்தாய்? இங்கே ஒரு இராக்ஷஸன் வசிக்கிறான். அவன் உன்னைக் கண்டால் கொன்று தின்றுவிடுவான். ஆகையால் உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள விரைந்து ஓடிவிடு" என்றாள். அதைக் கேட்டதும் சந்திரமுகன், "பாட்டி! நான் இக்குகையில் வசிக்கும் இராக்ஷஸனுடைய தலையிலிருந்து மூன்று தங்க மயிர்களைக்கொண்டுபோகவே வந்திருக்கிறேன். ஆதலால் நான் போகமுடியாது. நீ என் மீது இரக்கமுள்ளவள் ஆனால், எனக்கு அக்காரியத்தை முடித்துத் தரவேண்டும்" என்றான்.

அக்கிழவி மந்திரம் வல்லவளாதலால் அச்சிறுவனைக் காப்பாற்றி யனுப்ப வேண்டுமென நினைத்து, அவனிடம் அவ்விதம் செய்வதாக வாக்களித்தாள். சந்திரமுகனும், "பாட்டி! இன்னும் சில விஷயங்களும் தாங்களே சொல்ல வேண்டும். அதாவது யான் வரும் வழியில் ஓர் ஊரில் தங்கினேன். அவ்வூரில் இதுவரை வந்து கொண்டிருந்த ஊற்றுக்குழாயின் ஜலம் திடீரென நின்றுவிட்டதென வுணர்ந்தேன். அதன் காரணத்தையும், மற்றொரு ஊரில் இதுவரை தங்க மாம்பழம் காய்த்துக்கொண்டிருந்த ஒரு மாமரமானது இப்பொழுது காய்க்கவில்லையென உணர்ந்தேன். அதன் காரணத்தையும், ஒரு ஏரியிற் படகு செலுத்தும் படகோட்டியின் கையில் துடுப்பு ஒட்டிக்கொண்டு இந்நாள் வரை அது விட்டு நீங்காததின் காரணத்தையும் தெரிவிக்கவேண்டும்" என்றான். கிழவியும், அவற்றை விசாரித்துச் சொல்லுவதாகத் தேறுதல் கூறி, அவனைப்பார்த்து, "அப்பா! இப்பொழுது இராக்ஷஸன் வருவான். அவனை நோக்கி, நீ என்னிடம் கேட்ட கேள்விகளைக் கேட்பேன். அவன் எனக்குப் பதில் சொல்லுவதிலிருந்து உனக்கு மறுமொழி கிடைக்கும்" என்று கூறி, அவனையொரு சிறு எறும்பாக மாற்றி தன்னுடைய அங்கியில் மறைத்து வைத்துக்கொண்டாள்.

கிற்க, சூரியனும் மறைந்தான். வெளியே சென்றிருந்த இராக்ஷஸனும் விரைந்து குகையை நோக்கி வந்தான். வந்தவன் "என்றுமில்லாத மனித மாம்ஸநாற்றம் இன்று இவ்விடத்தில் வீசுகின்றதே. இதன் காரணம் என்ன?" என்று கூறிக்கொண்டு எல்லாச் சாமான்களையும் தலை கீழாகக் கவிழ்த்துத் தேடலானான். ராக்ஷஸன் அவ்வாறு தேடியது மந்திரக் கிழவிக்குப் பிடிக்கவில்லை. அவளும் கோபங்கொண்டு, "ஏனடா! எல்லாவற்றையும் தள்ளுகிறாய்! உனக்கு என்ன பித்தம் சிரசிலேறிக்கொண்டதா? யான் இப்பொழுதுதான் எல்லாவற்றையும் பார்த்து அடுக்கி வைத்திருக்கிறேன். நீ பேசாமல் படுத்துத் தூங்கு" என்று சிம்மம் கர்ஜிப்பதுபோல் கர்ஜித்தாள்.

இராக்ஷஸனும் எல்லாவிடங்களிலும் தேடிவிட்டுக் கடைசியில் மந்திரப்பாட்டியின் மடியின்மீது தன் தலையை வைத்துக் குறட்டைவிட்டுத் தூங்கவாரம்பித்தான். இராக்ஷஸன் குறட்டைவிட ஆரம்பித்தவுடனே, மந்திரக்கிழவி, இராக்ஷஸனுடைய தலையிலிருந்து தங்க மயிர் ஒன்றை வெடுக்கென்று பிடுங்கினாள். அப்பொழுது ராக்ஷஸன், "ஐயோ! என்னை என்ன செய்கிறாய்?" என்று கூக்குரலிட்டான். அதற்குக் கிழவி, ஓர் ஊரில், கடைத்தெருவிலுள்ள, ஊற்றுக் குழாயில் இதுநாள் வரையிலும் தண்ணீர் வந்துகொண்டிருந்தது. இப்பொழுது திடீரென்று நின்றுவிட்டதாகக் கனவு கண்டேன். அந்தப் பயத்தினால் தான் உன் தலைமயிரைப் பிடித்திழுத்தேன். வேறொன்றுமில்லை. அதன் காரணம் யாதாகவிருக்கலாம்?" என்று வினவினாள்.

அதற்கு இராக்ஷஸன், "ஆஹா! இந்த சங்கதியின் உண்மை தெரிந்தால் அவ்வூர்க்காரர்கள் களிப்படைவார்கள். அங்கே ஊற்று ஊறுமிடத்திலுள்ள பாறையொன்றில் தேரை யொன்றிருக்கிறது. அதை அவர்கள் கொன்று

விட்டால், மறுபடியும் ஊற்று ஜலம் முன்போலவே வரும்" என்று கூறிவிட்டுத் தூங்கவாரம்பித்தான்.

பிறகு கொஞ்சநேரம் கழித்து, மறுபடியும் அவன் தலையிலுள்ளதொரு தங்க மயிரைப் பிடுங்கினாள். அவன், "ஐயையோ! என்னை ஏன் இவ்விதம் தொந்தரவு செய்து என் தூக்கத்தைக் கலைக்கிறாய்" என்று கோபத்துடன் கேட்டான். அதற்குக் கிழவி, "அப்பா! நீ என்மீது கோபம் கொள்ளவேண்டாம். ஏதோ ஒரு இராஜ்யத்தில் தங்க மாம்பழம் காய்த்துக் கொண்டுவந்த மரம், இப்பொழுது திடீரென்று காய்க்காமலும், இலைகூட முளைக்காமலும் இருப்பதைக் கண்டு ஜனங்கள் வருந்துவதாகக் கனாக்கண்டேன் அந்தப் பயத்தினால் உன் தலைமயிரைப் பிடித்திழுத்தேன்" என்றாள். அதற்கவன், "ஆஹா! அந்த இரகசியத்தை அவ்வூரரசன் அறிந்துகொள்ள ஆவல் கொண்டிருக்கிறான். அம் மாமரத்தின் அடிவேர்ப்பக்கத்தில் ஒரு சுண்டெலி வசித்துக் கொண்டிருக்கிறது. அது பழத்தை யுண்டுபண்ணுகிற சில வேர்களைக் கத்தறித்துக் கொண்டிருக்கிறது. அச்சுண்டெலியைப் பிடித்துக் கொன்றுவிட்டால் மறுபடியும் அம்மரம் தங்க மாம்பழம் காய்க்கும்" என்று கூறிவிட்டுத் தூங்கவாரம்பித்தான்.

அவன் தூங்கிய சிறிது நேரத்திக்கெல்லாம் அம்மந்திரக் கிழவி, அவன் தலைமயிரி லொன்றினை வெடுக்கெனப் பிடுங்கினாள். இராக்ஷஸன் வலி பொறுக்கமாட்டாது, கோபத்துடன் விரைந்து எழுந்து அவளை அடிப்பதற்குக் கைகளை ஓங்கினான், அவள் அவனைச் சமாதானப்படுத்தி, 'அப்பா! இதுநாள் வரையிலும் உன்னையான் இவ்வாறு செய்ததுண்டா? இல்லையே. இன்றைக்குச் சதா கனவு காண்கிறது. அதனால் ஏற்படும் பயத்தால், உன்னை யவ்வாறு செய்தேன். தற்பொழுதுகூட, ஒரு படகோட்டி படகோட்டிக் கொண்டிருப்பதாயும், அவன் படகோட்டுவதற்கு உப

யோகிக்கும் துடுப்பு அவன் கையோடு ஒட்டிக்கொண்டிருப்பதாயும் அவன் அதனால் வருந்துவதாயும் கண்டேன். அதன் காரணம் என்ன?" என்றாள்.

இராக்ஷஸன், "பாட்டி! படகோட்டி, படகில் ஏறிச் செல்லுபவரில் யாரிடமாவது துடுப்பைக் கொடுப்பானாகில், அத்துடுப்பு பெறுபவர்களின் கையை யொட்டிக்கொள்ளும். பிறகு படகோட்டி சௌகர்யமாயிருக்கலாம். இது அவனுக்கு எப்படித் தெரியப்போகிறது?" என்றான். பிறகு அவன் முன்போலவே படுத்து யாதொரு தொந்தரவுமில்லாமல் தூங்கினான் மறுநாட்பொழுது புலர்ந்ததும் தன் வேலையைப் பார்ப்பதற்காக வெளியேறிச் சென்றான். மந்திரக்கிழவி, எறும்பாக மாற்றியிருந்த சந்திரமுகனைப் பழைய ரூபமாகுமாறு செய்து, "சிறுவா! இராக்ஷஸன் கூறியவை யனைத்தையும் கேட்டனையா?" என்றாள். அவன், "பாட்டி! ஆம் எல்லாவற்றையும் ஞாபகப்படுத்திக்கொண்டேன்" என்றான். பிறகு அவள் தான் வைத்திருந்த தங்க மயிர்கள் மூன்றையும் அவன் கையில் கொடுத்துப் போய் வருமாறு ஆசிகூறி யனுப்பினாள். அவனும் அவளைப் பன்முறை வணங்கிச் சென்றான்.

சந்திரமுகன் அவ்விடத்தைவிட்டுத் திரும்பி வருகையில் ஏரிக்கரையை யடைந்தான். அக்கரையிலுள்ள படகோட்டி இவனைக்கண்டதும் ஓடிவந்து, "அன்பனே! திரும்பி வருகையில் கூறுவதாகச் சொன்னாயே. அதனையிப்பொழுது சொல்லலாகுமா?" எனக்கேட்டான். சந்திரமுகன், "அன்பனே! நீ முதலில் என்னை யக்கரைகொண்டு சேர்த்துவிடு: பிறகு உன்னுடைய சமாசாரத்தைக் கூறுகிறேன்" என்றான். படகோட்டியும் அவ்வாறே யவனை அக்கரைகொண்டு சேர்த்தான். அப்பொழுது சந்திரமுகன், "ஏ! நண்பனே! இனிமேல் எவன் இப்படகில் ஏற வருகிறானோ அவன் கையில் துடுப்பைக் கொடு; அது

அவன் கையில் ஒட்டிக்கொள்ளும்; நீ சுயேச்சையாய்ப் போகலாம்" என்று கூறி யவ்விடத்தை விட்டகன்றான்.

பிறகு முன்பு தான் வந்தவழியைப் பின்பற்றிப் போகையில், தங்க மாம்பழம் காய்க்கும் மரத்தைப்பற்றிக் கேட்ட காவற்காரனைச் சந்தித்தான். அவன் "எனக்கு யாது கூறப்போகிறாய்?" என்று கேட்டான். அதற்கவன், "அன்பனே! நீ கூறிய மாமரத்தின் வேரின் பக்கம் ஒரு சுண்டெலியிருந்து கொண்டு வேர்களைக் கத்தறிக்கிறது. அதை பிடித்துக் கொன்றுவிட்டால், மரம் முன்போல் தங்க மாம்பழம் காய்க்கும்" என்றான். உடனே காவற்காரன் அரசனிடம் அவனை யழைத்துக்கொண்டுபோய் இதைக் கூறினான். அரசன் அவன் கூறியபடி செய்து பார்க்கையில், வேரின் கீழ் சுண்டெலியைக் கண்டான். உடனே ஆச்சரியங்கொண்டு அவனுக்கு பரிசில்கள் கொடுத்தான். சந்திரமுகன் அவற்றைப் பெற்றுக் கொண்டு, ஊற்றுக்குழாயில் தண்ணீர் வாராமலிருந்த இராஜ்யத்தை யடைந்தான். அக்கோட்டைக் காவற்காரனும் சந்திரமுகனை வரவேற்றுபசரித்தான். கேட்டதற்கு உத்தரவுளிக்குமாறு உசாவினான். அதற்கவன், "அப்பா! ஊற்றுக்குப் பக்கமாகவுள்ள பாறையில் தேரை யொன்றிருக்கிறது. அதை எடுத்துவிட்டால் முன்புபோல் தண்ணீர் வரும்" என்றான். உடனேயவனும் சந்திரமுகனை யழைத்துக்கொண்டுபோய் அரசனிடம் அதன் காரணத்தைத் தெரிவித்தான். அரசனும் அதனைப் பரிசோதித்து இரண்டு குதிரை சுமக்கத்தக்க செம்பொன்களைப் பரிசிலாக வழங்கினான். சந்திரமுகன் அவற்றையும் பெற்றுக்கொண்டு, தன் மனைவியிருக்கும் இடத்தை யடைந்தான்.

அரசன் தனக்குக் கட்டளையிட்டபடி தான் சிரமப் பட்டுக் கொண்டுவந்த தங்க மயிர் மூன்றினையும், அரசன்

முன்பு வைத்தான். அரசன் அவற்றை எடுத்துத் திரும்பத் திரும்பப் பார்த்தான். அளவில்லாத கோபங்கொண்டான். ஆயினும், தான் கூறியதை மறுத்துக்கூற முடியவில்லை அதனுல் தன் மகளுக்கும் சந்திரமுகனுக்கும் நடந்த மணத்தை ஒப்புக்கொள்ளும்படியாய் நேர்ந்தது. சந்திரமுகன் மனைவியோ அவன் உயிருடன் திரும்பவந்ததைக் குறித்துச் சந்தோஷப்பட்டாள். சந்திரமுகனும் அவளுடன் கூடிக் காலத்தைச் சுகமாகக் கழித்தான்.

இவ்வாறிருக்கையில், ஒருநாள் அவ்வரசன் வெளியூருக்குச் சென்றிருந்தான். அங்கிருந்து மீண்டும் வேருெரு பட்டினத்திற்குச் செல்லக் கருதினுன். ஆனுல் அவன் செல்ல வேண்டிய விடத்திற்கு நடுவில் ஓர் ஏரியிருந்தது. அதைப் படகின் மூலமாய்க் கடந்து செல்லவேண்டும். முன்பு சந்திரமுகனிடம் தன் கையில் ஒட்டிக்கொண்ட துடுப்பு தன்னை விட்டுவிடுவதற்கு உபாயங்கேட்ட படகோட்டியே அங்குப் படகு செலுத்திக் கொண்டிருந்தான். அவன் யாரிடம் இத்துடுப்பைக் கொடுக்கலாம் எனப் படகில் ஏற வருகின்றவர்களை எல்லாம் பார்த்த வண்ணமாகவிருந்தான். அக்கரை யடையும்பொருட்டு அரசன் படகிலேறியவுடன், படகோட்டி அரசனைப் பார்த்ததும் இவனிடமேயிதனை ஒப்புவிக்கவேண்டுமென நினைத்து, "ஐயா! இதைச் சற்றுப் பிடியுங்கள், வேஷ்டி கட்டிக்கொண்டு வாங்கிக் கொள்ளுகிறேன்" என்முன். அரசன் அவன் கூறியதுண்மை யெனக்கருதி கைநீட்டி வாங்கினுன். வாங்கினதுதான் தாமதம். அவன் கையில் அது ஒட்டிக் கொண்டது. படகோட்டி கைகளை வீசிக்கொண்டு சுயேச்சையாகச் சென்முன். அன்று முதல் அரசன் படகோட்டிக்கொண்டிருந்தான்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்ற பழமொழிப்படி, சந்திரமுகனுக்கு முன்னுல் கெடுதல்களைச்

செய்த அரசன், தான் அரசப்பதவி யிழந்து, படகோட்டும் தொழிலை யடைந்தான். கேடு நினையாத சந்திரமுகனே அவ்வரசனது இராஜ்யத்திற்கு அரசனானான். எல்லோரும் புகழும்படியாகவும் விளங்கினான்.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்

5. கடவுளின் செயல்

கலிங்க நாடு என்பது ஒன்று. அதைக் கோவிந்தவர்மன் என்னும் ஒரு செங்கோன் மன்னன் ஆண்டுவந்தான். அவன் யாத்திரை செய்பவர்களுக்குச் சௌகர்யமாகப் பல சத்திரங்களும், குடிகளுக்கு இலவசக் கல்விச்சாலைகளும், தரும வைத்தியசாலைகளும் கட்டி வைத்தான். குடிகளிடத்து அளவில்லாத தயாள சிந்தையும், அன்பும் உடையவனாய் அவர்களுக்கு வேண்டிய பல நன்மைகளையும் செய்துவந்தான். அவனுக்கு மந்திரிகள் அநேகம் பேர் இருந்தனர். அவர்களுள் விஷ்ணுதத்தன் என்பவனும் ஒருவன். விஷ்ணுதத்தன் மந்திரிகளுக்கு முக்கியமாய் வேண்டப்படும் நுட்ப புத்தியும், அஞ்சாமையும் பின்வருவனவற்றை முன்னறிந்து சொல்லுதல் ஆகிய குணங்களில் தலை சிறந்தவனாக விளங்கினான். அதனால் அரசன் விஷ்ணுதத்தனிடத்து அன்பும் மரியாதையும் உடையவனாயிருந்தான். தான் எதைச் செய்யத் தொடங்கினும் அவனுடன் அதைக் கலவாமல் செய்வதில்லை. இவ்வாறு அவ்விருவரும் இணைபிரியா நட்பினர்களாகவுமிருந்தனர்.

அரசனுக்கும் விஷ்ணுதத்தனுக்கும் அடிக்கடி கடவுள் விஷயமாகத் தர்க்கம் ஏற்படுவதுண்டு. அரசன், "மந்திரி! என்னால் முடியாதது ஒன்றுமில்லை. அணுவை மலையாக்குவேன், மலையை அணுவாக்குவேன்" என்பான். அதற்கு மந்திரி, "அரசே! தாங்கள் அப்படிச் சொல்லக்

கூடாது. எதுவும் கடவுளுடைய செயலால்தான் ஆகும். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதைத் தாங்கள் கேட்டதில்லையா?" என்று வாதிப்பான். ஆனால், அரசன், மந்திரி கூறுவது சரியல்லவென்றும், தான் கூறுவதே சரியானதென்றும் எண்ணியிருந்தான். அவர்கள் அவ்விஷயத்தைப் பரீக்ஷை செய்து பார்க்கவில்லை.

இவ்வாறிருக்கும் சமயத்தில் ஒரு நாள், அரசனும் விஷ்ணுதத்தனும் அரண்மனை மேன்மாடியில் நின்றுகொண்டு உல்லாசமாக சம்பாஷித்தவண்ணமாயும், இராஜவீதியில் போய்க்கொண்டிருப்போர்களைப் பார்த்தவண்ணமாயுமிருந்தனர். அவ்வமயம், மூன்று குழந்தைகளுடனே கிழிந்த உடையை யுடுத்துக்கொண்டு, மிகவும் மெலிந்த தேகத்துடன் ஒரு குடியானவன் போய்க்கொண்டிருந்தான். அரசன் அக்குடியானவனைக் கண்டதும், மந்திரியைப் பார்த்து, "தத்தா! இதோ சென்றுகொண்டிருக்கும் குடியானவன் பரம ஏழையாகத் தோற்றுகிறான். அவனது முகவாட்டமும் தளர்ந்த நடையும், உணவு சாப்பிட்டு நெடுநாட்கள் ஆயினவென்பதை யறிவிக்கின்றன. குழந்தை குட்டிகளும் அதிகமாகவிருப்பதால் மிகவும் கஷ்டப்படுகிறான் போலும். இத்தகையானை இப்பொழுது யான் செல்வவந்தனாகச் செய்யப்போகிறேன்" என்றான். அதைக் கேட்ட தத்தன், "அரசே! தாங்கள் ஒருவனைப் பெரிய தனவந்தனாகச் செய்வதும், பரம ஏழையாகச் செய்வதும் கடவுளினுடைய அருள் நோக்கம் தங்களிடத்து இருந்தால்தான் முடியும். இல்லையேல் முடியாது. ஆதலின், கடவுளினுடைய அருளின்றி தாங்களே இவனைப் பணக்காரனாகச் செய்யமுடியவே முடியாது" என்றான்.

அதைக்கேட்ட அரசனுக்கு மிகுந்த கோபம் ஏற்பட்டது. நம்முடைய பெருமையை யறியாமல் இவ்வாறு கூறுகிறானே என்று அவனைக் கோபித்தான். பிறகு ஏவலாளனை

யழைத்து இராஜவீதியிற் செல்லும் குடியானவனை யழைத்து வருமாறு உத்தரவிட்டான். அவ்வேவலாள னும் விரைந்து சென்று அக்குடியானவனை யழைத்துக் கொண்டு வந்து அரசன் முன்னிலையில் நிறுத்தினன். அப்பொழுது அரசன் குடியானவனைப் பார்த்து, "அப்பா! நீ வாடிய மேனியும், அழுக்கடைந்த ஆடையுமுடையவ னய் குழந்தைகளை யழைத்துக்கொண்டு அலைய நேர்ந்த காரணம் யாது?" என்று கேட்டான். அதற்குக் குடி யானவன், "அரசே! நேற்று வரையிலும் 'கடவுள் ஒருவர் உண்டு அவர்தான் எல்லாவற்றையும் செய்யக் கூடியவர்?" என்று எண்ணியிருந்தேன். ஆனால் இன்றைய தினம் காலையிலேயே அவ்வெண்ணம் என்னைவிட்டுப் பறந்துவிட்டது. கடவுள் ஒருவர் இருப்பாரானல், அவர் என்னை இவ்வளவு தாழ்ந்த நிலையில் வைத்திருக்கமாட்டார். ஆதலால் முயற்சி யென்பதே கடவுள் என்றும், முயற்சி யுடையவர்களே எல்லாவற்றையும் எய்துவரென்றும், எண்ணி யாதேனும் முயற்சி செய்யலாமெனவுன்னி, போய்க்கொண்டிருக்கிறேன். யானும் என் மனைவி மக் களும் அன்னத்தைக்கண்டு ஐந்து நாட்களாகின்றன" எனக்கூறி வருந்தி நின்றான்.

அப்பொழுது தத்தன் குடியானவனைப் பார்த்து, "அப்பா! கடவுளை நிந்திக்காதே. கடவுளருள் இருந்தா லன்றி எக்காரியத்தையும் நாம் செய்யமுடியாது. நீ படும் துன்பத்தால் கடவுளைப் பழிக்கிறாய். நீ முன் செய்த தீவினையால் உனக்கு இத்துன்பத்தையவர் கொடுத்திருக் கிறார். நீ இன்னும் பக்தியுடன், அவரை நோக்கி 'பரம் பொருளே! யான் செய்த தீவினைகளை மன்னிக்கவேண் டும். அடியேன் துன்பத்தை ஒழிக்கவேண்டும்' எனப் பணிவாயானல், அவர் மனமிரங்கி, உன் துன்பத்தைத் தீர்ப்பார். ஆதலின் கடவுளிடத்துள்ள நம்பிக்கையை

விட்டுவிடாதே. மனிதரால் ஒன்றும் செய்யமுடியாது" என்று கூறினன்.

அதைக்கேட்ட அரசன் அவன்மீது கோபங்கொண்டு, குடியானவனைப் பார்த்து, "அப்பா! என் மந்திரி கூறியதைக் கேட்டு நீ மனம் வருந்தவேண்டாம். அவன் பழைய புராணக் கதையை விடுகிருனில்லை. யானே உன்னைச் செல்வவந்தனுகச் செய்யப்போகிறேன். இப்பொழுது யான் உனக்கு நூறு பவுன் கொடுக்கப் போகிறேன். நீ யதனைப் பெற்றுக்கொண்டு சென்று சுகமாக வாழலாம். அல்லாமலும் பெரிய தனவந்தனுகவும் நீ ஆகிவிடலாம். எக்காரணத்தினுலாவது அவ்விதம் நீ ஆகமுடியாவிட்டால், மறுபடியும் என்னிடம் வா" என்று கூறி, நூறு செம்பொன்களையும் கொடுத்தனுப்பினன்.

உடனே மந்திரி, அரசனைப் பார்த்து, "அரசே! மண்ணுலகத்தையாளும் அரசர்களைக் கடவுளினுடைய பிரதிநிதிகள் என்றே உலகினர் கூறுவர். அரசன் உதவியில்லாமலே கடவுளால் எக்காரியமும் செய்யமுடியும். கடவுளின் உதவியின்றி அரசனுல் எக்காரியமும் செய்யவியலாது. இது நிச்சயம். தாங்கள் இவ்வேழைக் குடியானவன் விஷயத்தில் பரீக்ஷை செய்து இதனைத் தெரிந்துகொள்ளலாம். கடவுளினுடைய அனுக்கிரகம் இல்லாமல் இவனைப் பணக்காரனுகத் தாங்கள் செய்துவிட்டால், அன்றுமுதல் யான் என் வேலையைவிட்டு விடுகிறேன்" என்ருன். அதற்கரசன், "மந்திரி! நான் அக்குடியானவனுக்கு இன்னுமொரு முறைதான் பொருள் கொடுத்து உதவி செய்வேன். அதில் அவன் தனவந்தனுகாவிடில் மறுமுறை, கடவுளின் அனுக்கிரகம் அவனுக்குண்டாகுக என வாழ்த்தி, விலைபெருத பொருளைக் கொடுத்தனுப்புவேன். இவற்றில் எந்தத்தடவை செய்த உதவி தக்க பலனளிக்கிறதென்பதைப் பார்ப்போம்" எனக் கூறினன்.

அரசனிடம் செம்பொன் பெற்றுச்சென்ற குடியானவன் அதில் ஒரு பவுனை எடுத்து மாற்றி, கொஞ்சம் மாமிசத் துண்டங்களும், மற்றும் சில சாமான்களும் வாங்கினான். பிறகு அவற்றைப் பவுன் மூட்டையோடு ஒன்றாக வைத்துச் சேர்த்துக்கட்டி, தலையில் வைத்துக்கொண்டு குழந்தைகளுடன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அப்பொழுது, இவன் மாமிசத்துண்டு வாங்கியதை உயரவிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒரு கருடப்பறவை, அவன் தலைமேல் வைத்துக்கொண்டிருந்த பவுன் மூட்டையோடு கூடிய மாமிசத்தைத் தன் கால்களால் பற்றி எடுத்துச் சென்றது. குடியானவனும் மனந்திடுக்கிட்டு, அக் கருடப்பறவையை துரத்திக்கொண்டே சிறிது தூரஞ் சென்றான். சென்று என்ன பயன்? அப்பறவையோ ஆகாயத்திற் பறந்துசென்றுவிட்டது. கடைசியில் மனக் தளர்ந்து குழந்தைகளை யழைத்துக்கொண்டு தன்னில்லத்தை யடைந்தான். கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று வருந்தினான். மனைவியிடம் தனக்கு அரசன் செய்த உதவியையும், தனக்கு அதிர்ஷ்டமில்லாததையும் கூறி, உண்ணாமல் பட்டினி கிடந்தான். அவளும் அளவில்லாத் துயரமடைந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்ததும் அக்குடியானவன் அரசன் மாளிகையை யடைந்தான். அவனைக் கண்ட காவலாட்களும் விரைந்து அழைத்துக்கொண்டு சென்று அரசன்முன் நிறுத்தினர். அரசன் குடியானவனை நோக்கி "அப்பா யான் கொடுத்த செம்பொன்களைக் கொண்டு யாது செய்தாய்? உன் வறுமை உன்னைவிட்டகன்றதா?" என்று கேட்டான். அதற்குக் குடியானவன், "வேந்தே! தாங்கள் கொடுத்த செம்பொன்கள் கருடப்பறவையால் கவர்ந்துகொள்ளப்பட்டன" என்று நடந்த விருத்தாந்தங்களைக் கூறி மனம் வருந்தினான். அப்பொழுது மந்திரி உடனே அரசனைப் பார்த்து, "அரசே! இன்னும் இவ

னுக்குக் கடவுளின் அனுக்கிரகம் ஏற்படவில்லை. ஏற்பட்டிருந்தால் இந்நேரத்திற்குள் தனவந்தனாக இருப்பான்'' என்று கூறினான்.

அரசன் உடனே அக்குடியானவனுக்கு ஆயிரம் செம்பொன்களைக் கொடுத்து, ''இவற்றை ஜாக்கிரதையுடனும், சாமர்த்தியத்துடனும் வைத்துப் பிழைப்பாயாக. உனக்கு யாதேனும் கெடுதல் ஏற்பட்டால் மறுபடியும் என்னிடம் வா'' என்று கூறி யனுப்பினான். குடியானவன் அரசன் கொடுத்த செம்பொன்களைப் பெற்றுக் கொண்டு சென்று, ஒருவருக்கும் தெரியாமல், தன் மனைவிக்குக்கூடச் சொல்லாமல் வீட்டில் நெடுநாளாய் உபயோகமற்றுக்கிடந்த தவிட்டுப்பானையொன்றையெடுத்து, அதில் பவுன்களை எல்லாம் கொட்டி, அதற்குமேல் தவிட்டைக் கொட்டி வைத்துவிட்டான். பிறகு வெளியே ஏதேனும் வேலை கிடைக்குமா என்று பார்ப்பதற்குச் சென்றான்.

அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வூரிலுள்ள தனவந்தனொருவனுடைய வேலையாள் ஒருவன் தவிடு வாங்குவதற்காகப் புறப்பட்டு வந்தான். அவன் வீடுகள் தோறும் 'தவிடு இருக்கிறதா தவிடு' எனக் கூறிக் கொண்டு, குடியானவன் வீட்டுப்பக்கம் வந்தான். குடியானவன் மனைவியோ தனக்குள், ''இன்று நம் கணவன் கூலி வேலை செய்யவில்லை. வீட்டில் செலவிற்கு பணமும் இல்லை. நம் வீட்டில் வெகுநாட்களாய் விற்காமலிருக்கிற தவிட்டை இவனுக்கு விற்றுவிட்டால், இன்றைக்குச் செலவிற்காகும்'' என நினைத்து, தவிடு வாங்குவோனையழைத்தாள். அவனும் வந்து சேர்ந்தான். உடனே குடியானவன் மனைவி வெகு சிரமத்துடன் தவிட்டுப் பானையைத் தூக்கிக்கொண்டு வந்து அவன் முன் வைத்தாள். வந்தவன் தவிடு வாங்குவதற்கு வேறு கூடையொன்றும் கொண்டு வாராததால், குடியானவன் மனைவியைப்

பார்த்து, அம்மா ! இதைக் கொண்டு போவதற்குக் கூடை கொண்டு வரவில்லை. ஆகையால், தாங்கள் இப்பானை யுடன் ஒரு விலை சொல்லுங்கள் ; அதை கொடுத்துவிட்டுக் கொண்டுபோகிறேன்,'' என்றான். குடியானவன் மனை விக்கு அவன் கூறியது நியாயமாகத் தோற்றினபடியால், அதற்கு ஒரு ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கேட் டாள். உடனேயவன் ரூபாய் ஒன்றை யெடுத்துக் கொடுத்துவிட்டு, பானையோடு தவிட்டைக்கொண்டு சென்றான்.

வெளியே சென்றிருந்த குடியானவனோ வேலையொன் றும் அகப்படாமையால் மனம் மிக வருந்தி, 'வீட்டி லுள்ள தவிட்டுப் பானையிலிருந்து ஒரு பவுனை எடுத்து இன் றைச் செலவிற்கு வைத்துக்கொள்வோம்' என நினைத்தவ னாய் வீட்டை யடைந்தான். உள்ளே வேகமாய்ப்போய் தவிட்டுப் பானையைத் தேடினான். காணவில்லை. மனைவி யிடம் கேட்டான். அவள் அதை ஒரு ரூபாய்க்கு விற்று விட்டதாகக் கூறினாள். கூறினதுதான் தாமதம். உடனே குடியானவன் பித்துப்பிடித்தவன்போல் மதிமயங்கி, மனைவியை யடித்தான். பலவாறு திட்டினான். தன் முகத் திலும் மார்பிலும் அறைந்துகொண்டு ஓவென்றழுதான். குடியானவன் மனைவியோ, 'இன்றைக்குச் செலவிற்கா கத்தானே தவிடை விற்றோம். தவிடை விற்றதற்கு இவ் வளவு தூரம் நம்மைத் தொந்தரவு செய்கிறானே' எனப் புலம்பியழுதாள். கடைசியில் குடியானவன் ஒருவாறு தேறி, நடந்தவற்றை மனைவியிடம் நவின்றான். அப்பொ ழுது அவள் அடைந்த துன்பத்திற்கோ அளவேயில்லை.

பிறகு குடியானவன், தன்னுடைய அறியாமைக்குத் தன்னைத்தானே நொந்துகொண்டு "ஆகா ! கடவுளே ! நீ என்னை யின்னுமா பரிசோதிக்கவேண்டும்? நான் இத் துணை அல்லல்களை யனுபவித்தது போதாதா? உன் மனந் தான் என்ன கல்லா? கல்லினும் வலிய இரும்பா? அரசன்

எனக்கு இருமுறை உதவி செய்தும், என் துரதிர்ஷ்டத்தா லும், நீ என்மேல் கிருபை வைக்காததாலும் என்னால் முன் னுக்கு வர முடியவில்லை. மூன்றும் முறையும் அரசன் வரச்சொல்லியிருக்கிறான். அவன் இனி எனக்குச் செய் யப்போகிற உதவியும் பலனளிக்காவிடில், இனிமேல் ஒன் றும் செய்யமாட்டான். ஆதலால் இன்று முதல் 'உம்மா லன்றி யாதொன்றுமாகாது' என்பதை யுணர்ந்துகொண் டேன். உம்மையே பூரணமாக நம்பியிருக்கிறேன். இதில் ஏதேனும் குறைவு ஏற்படின் நான் தற்கொலை செய்து கொள்வேன். இது நிச்சயம்" என்று கூறிக்கொண்டு உணவு கொள்ளாமல் படுத்திருந்தான்.

மறுநாட்பொழுது புலர்ந்ததும் குடியானவன் தன் காலைக் கடன்களை முடித்துக்கொண்டு அரசன் திருமாளி கையை நோக்கிப் புறப்பட்டான். அரசமாளிகை காவற் காரன் இவனைக் கண்டதும் வரவேற்று அழைத்துக் கொண்டுபோய் அரசன் முன்னிலையில் நிறுத்தினான். அரசன் அவனை நோக்கி, "ஓ! குடியானவனே! யான் கொடுத்த செம்பொன் ஆயிரத்தைக்கொண்டு யாது செய்தனை? நீ யிருக்கும் நிலையைப் பார்த்தால் இன்னும் வறுமை யுன்னைவிட்டபாடில்லைப் போலும். நடந்தவற்றை கூறுக" என்றான்.

குடியானவன் அரசனது பாதங்களில் வீழ்ந்து பணிந்து, "அரசே! யான் இதுநாள் வரை தங்களிடம் கடவுளில்லை என்றல்லவா கூறினேன். இப்பொழுது நடந்த செயலால் 'கடவுள் ஒருவர் உண்டு; அவரே எல் லாவற்றையும் ஆட்டுவிக்கிறார்' என்று புலனாகிறது. அவரு டைய பூரண கிருபையில்லாததால், தாங்கள் எனக்கு எவ்வளவோ உதவி செய்தும் அவையொன்றும் பயன்பட வில்லை" என்று நடந்த விருத்தாந்தங்களனைத்தையும் நவின்றான். அவற்றைக்கேட்ட அரசன் மனம் மிக வருந் தினான். பிறகு, 'கடவுள் அனுக்கிரகம் இல்லாத ஒருவ

னுக்கு நாம் எவ்வளவோ உதவி செய்தும் அவை பயன் படாமற் போய்விட்டது. கடைசிமுறையாக இன்னொரு தடவை யிவனுக்கு உதவி செய்வோம். கடவுளும் துணை செய்யட்டும்' என்றெண்ணி, மந்திரியைக் கூப்பிட்டு, தான் எண்ணியிருந்த தவற்றை ஒப்புக்கொண்டான்.

அப்போது மந்திரி, அருகில் கிடந்த ஒரு ஈயக்கட்டியை எடுத்து அரசனிடம் அளித்து, "அரசே! தாங்கள் இருமுறை இவனுக்கு வேண்டிய பொருள் அளித்தும் கடவுள் அருள் இல்லாமையால் அவை அவனுக்கு உதவவில்லை. ஆனால் இப்பொழுது அவனும் தாங்களும் 'எதற்கும் கடவுள் அருள் அவசியம்' என்பதை அறிந்தீர்கள். அதனால் இவனுக்குக் கடவுள் அருள் சீக்கிரமே கிடைக்கும். அவ்வாறு கிடைக்குமாயின், நீங்கள் பொருள் ஒன்றும் கொடுக்காது, இந்த ஈயத்துண்டை, 'கடவுள் அருளால் பிழைத்துக்கொள்' என்று ஆசீர்வதித்துக் கொடுத்தாலும் அவன் நல்ல நிலைமைக்கு வருவான். இது நிச்சயம்" என்றான். அரசனும் அதையும் பரீக்ஷித்தறிய எண்ணி அவ்வாறே செய்தான்.

ஈயத்துண்டைக்கொண்டு சென்ற குடியானவனை வழியில் ஒரு வலைஞன் சந்தித்தான். குடியானவன் கையில் உள்ள ஈயத்துண்டைக்கண்டு, "ஐயா! வலைக்குக் கனம் கட்டுவதற்கு இந்த ஈயத்துண்டைக் கொடுத்தால், நான் நாளைக் காலையில் வலைவீசி, முதலில் வலையில் சிக்குவதை உமக்குத் தருவேன்" என்று கூறி ஈயத்துண்டைக் கேட்டான். குடியானவனும் சம்மதித்து அதனைக் கொடுத்தான். அவ்வாறே மறுதினம் காலையில் வலைஞனும் குடியானவனும் கடற்கரை சென்றனர். வலைஞன் வலை வீசினான். அதில் ஒரு பெட்டி அகப்பட்டது. வலைஞன் அதை அப்படியே குடியானவனிடம் அளித்தான். குடியானவன் பெட்டியைத் திறந்து பார்த்தான். அதில் நிறைய தங்க நாணயங்கள் இருந்தன. குடியானவன்

அவற்றில் சிலவற்றை வலைஞனுக்கு அளித்து, மிகுந்ததைப் பெட்டியுடன் வீடுகொண்டு சேர்த்தான்.

இது இவ்வாறிருக்க, முன் குடியானவன் மனைவியிடம் தவிடுவாங்கிச் சென்ற சேவகனுடைய தலைவனுக்குத் திடீ ரென்று வாயுக்குத்து ஏற்பட்டது. அதனால், அவனிறந் தான். அவனுக்கு குழந்தைகள் கிடையாது. அதனால் அவனுடைய மனைவி, 'நாயகனிறந்த பிற்பாடு நாமிங்கிருப் பானேன்? வீடு வாசல்களை யெல்லாம் விற்றுவிட்டு நம் தாயகம் செல்வோம்' என நினைத்து ஏவலர்களிடம தன் வீட்டை விற்கப்போவதாகப் பறையறையுமாறு கட்டளை யிட்டாள். ஏவலரும் சென்று அங்ஙனமே செய்தனர்.

அதனைக்கேட்ட குடியானவன் இதுதான் தக்க சமயம் என நினைத்து, அவ்வீட்டுக்காரியிடம் சென்று, அவள் வீடு, தோட்டம், மாடு, கன்று முதலிய எல்லாவற் றையும் பவுன் இரண்டாயிரத்திற்குப் பேசிமுடித்து, பவுனையும் எண்ணிக் கொடுத்துவிட்டு, அவ்வீட்டுக்காரியை யும் அன்றைக்கே காலி செய்து விடுமாறு கூறிவிட்டு, தன்னில்லஞ் சேர்ந்தான். மனைவியிடம், முடித்துவந்த சகல சங்கதிகளையும் கூறி, தன் சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு புது வீடு வந்து சேர்ந்தான். வீட்டிற்கு வேண்டிய ஆகாரப்பொருள்களை நிறைய வாங்கி நிரப்பி வைத்தான். குழந்தைகளுக்கெல்லாம் நல்ல புதிய ஆடை களை வாங்கிக்கொடுத்தான். மனைவிக்கு வேண்டிய பட்டுச் சேலைகளையும் தங்க நகைகளையும் வாங்கிக் கொடுத்தான். வீட்டு வேலை செய்வதற்குச் சில வேலையாட்களையும் நிய மித்துக்கொண்டான்.

குடியானவன் மனைவி, புது வீட்டில் சாமான்களை ஒழுங்காக வைப்பதற்காக, அவ்வீட்டில், முன்னிருந்த சாமான்களைப் பரிசோதனை செய்தாள். செய்யும்பொழுது, தான் முன் விற்ற தவிட்டுப்பானை ஒரு மூலையிலிருப்பதைக் கண்டாள். உடனே ஆனந்தத்துடன் விரைந்து சென்று

தன் கணவனை யழைத்து வந்து அதனைக் காண்பித்தாள். குடியானவன் அப்பானையைக் கவிழ்த்துப் பார்த்தான். அதில் தான் வைத்த ஆயிரம் பவுனும் அப்படியே யிருக்கக் கண்டான். அப்பொழுது அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே கிடையாது.

மற்றொரு நாள், வேலையாட்கள் புது வீட்டு மாட்டுக் கொட்டத்திற்குக் கீற்று மேயும்பொழுது, அதில் ஒரு முடிப்பு இருந்ததாக எடுத்து வந்து குடியானவன் முன் வைத்தனர். அதை ஆவலுடன் குடியானவன் பிரித்துப் பார்த்தான். அதில் அரசனால் முன்பு கொடுக்கப்பட்ட பவுன்களுள், தாம் மாமிசம் வாங்குவதற்கு எடுத்துக் கொண்டது போக பாக்கிப் பவுன்களெல்லாம் அப்படியே யிருந்தது. அப்பொழுது குடியானவனும் அவன் மனைவியும் அடைந்த களிப்பிற்கு ஓரளவில்லை. 'திருமடந்தை யாம்போது ஆகும்' என்று ஔவையார் கூறிய பொன்மொழி தம்மிடத்துப் பலித்ததைக் குறித்து சந்தோஷித்தனர்.

பிறகு குடியானவன், அரசனாகிய கோவிந்தவர்மனை யடைந்து நமஸ்கரித்து "கடவுள் கிருபையால் தாங்கள் கொடுத்த ஈயத்துண்டினாலேயே நான் பெரிய செல்வவந்தனாய் விட்டேன். அத்துடன் தாங்கள் இருமுறை கொடுத்து, நான் இழந்த பொன்னையும் திரும்ப அடைந்து விட்டேன். ஆகையால், அரசே! இப்பொழுது தான் கடவுளுடைய கிருபை எனக்கு வந்துவிட்டது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று தங்களுடைய அமைச்சர் கூறியது உண்மையானதே" என்று நடந்ததைக்கூறி வணங்கி நின்றான். அரசனும் மந்திரி கூறியதை யொப்புக்கொண்டான். பிறகு, அவ்விருவரும் கடவுளது செயலைக் குறித்துப் புகழ்ந்துகொண்டாடினர். அன்று முதல், கோவிந்தவர்மன், தன் அமைச்சனாகிய விஷ்ணு தத்தனுடைய வாக்கையே வேதவாக்காகக் கொண்டான்.

தான் யாது செய்யத் தொடங்கினும், கடவுளின்மீது பாரத்தைப்போட்டுச் செய்வதெனத் தீர்மானித்துக் கொண்டான். குடியானவனும் கடவுளைத் தொழுது சுகமாக வாழ்ந்து வந்தான்.

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
அவனன்றி ஓரணுவும் அசையாது.

---

6. கோபாலன்

ஏமாங்கதம் என்பது ஒரு நாடு. அது நீர்வளமும், நில வளமும் உடையது. அதனைச் சச்சந்தன் என்னும் ஓர் மன்னன் ஆண்டு வந்தான். அவன் இராக்காலங்களில் மாறுவேடம் பூண்டு நகர் சோதனை செய்வான். குடிகள் தன் ஆட்சி முறையைப்பற்றி யாது கூறுகிறார்கள் எனக் கவனிப்பான். தன்னிடம் ஏதேனும் குறையிருக்கிறதாகத் தெரிந்தால் உடனே யதனை நீக்கிக்கொள்வான். தன்னிடம் யார் வழக்குக்கொண்டுவரினும் நீதி கோணாது நன்மை வழங்குவான். இவ்வாறு அவன் ஆண்டுவருங் காலத்தில், திருவிருந்தவூர் என்னும் கிராமத்தில் சுரமஞ்சரி என்று ஒருத்தியிருந்தாள். அவள் செல்வம் மிக்க வணிக குலத்திற் பிறந்தவள். அவள் தன் கணவனுடன் கூடி வாழ்கையில், அவன் கொடிய நோயால் பீடிக்கப் பட்டு உயிர் துறந்தான். அப்பொழுது அவளுக்கு கோபாலன், முத்து என்ற இரு குழந்தைகளிருந்தனர்,

சுரமஞ்சரி பொருட் செல்வத்துடன் புத்திரச் செல் வத்தையும் பெற்றிருந்ததனால், கணவன் இறந்த கவலையும் அவளுக்கு அதிகமாகத் தோற்றவில்லை. ஆயினும் 'புத்திரர் இருவர்களையும் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண் டிய பொறுப்பு பெண்பாலாகிய நம்மிடத்துப் பொறுத்து விட்டதே. செல்வம் இருந்தபோதிலும் இவர்களை நன்

னிலையிற் செலுத்தவேண்டியது நமக்கென்ன தெரியும்?' என அடிக்கடி ஏங்கி வருந்துவாள். இவ்வாறிருக்கும் நாளில் புத்திரர்களும் கல்வி கற்கவேண்டிய பருவத்தை யடைந்தனர். அதனை யறிந்த சுரமஞ்சரி, அதிவிமரிசை யாக நன்னாள் பார்த்து உற்றூர்களை யழைத்து, புத்திரர்க ளுக்கு வித்தியாரம்பம் செய்வித்தாள். புத்திரர்களும் அன்றுமுதல் கல்விச்சாலைக்குக் காலந்தவறாமற் சென்று கருத்துடன் பாடங்களைப் படித்து வந்தனர். உபாத்தி யாயர்களும் தந்தையில்லாப் பிள்ளைகள் ஆயிற்றே என் றெண்ணி, அவர்களைத் தனியாக கவனித்தனர். இவ்வாறு வருடங்கள் நான்காயின. அப்புத்திரர்களும் ஆரம்பக் கல்விச்சாலையிற் படிக்கவேண்டியவற்றைப் படித்துத் தேர்ந்தனர்.

பிறகு அவர்களை மேல்படிப்புப் படிக்க வைப்பதற் காக வேறு கலாசாலைக்கு அனுப்பத் தீர்மானித்தாள் சுர மஞ்சரி. அதனை யறிந்த கோபாலன் தனக்குப் படிப்பி லிஷ்டமில்லை என்றும், வீட்டுக்காரியங்களைக் கவனிக்கப் போவதாகவும் கூறினான். முத்துவோ, தன்னை விரைவாக கலாசாலைக்கு அனுப்பவேண்டுமென்றும், நல்ல புத்தகங் கள் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்றும், தன் தாயாரை வற்புறுத்தினான். இவ்வாறு முத்து கல்வியினிடத்து விருப் புக்கொண்டிருப்பதையும் கோபாலன் கல்வியினிடத்து வெறுப்புக்கொண்டிருப்பதையும் அறிந்தாள் சுரமஞ்சரி. உடனே மூத்த பையனை யழைத்து, " கோபாலா! உன்னி லுஞ் சிறியவனாகிய உனது தம்பியின் புத்திக்கூர்மையைப் பார்த்தனையா? எவ்வளவு செல்வமிருந்தபோதிலும், கல் விச் செல்வத்தையும் தேடிக்கொள்ளவேண்டும். பொருட் செல்வத்திற்கு, ஒருகால் வெள்ளத்தாலும், அக்கினியா லும், கள்வராலும், தாயத்தாராலும் கெடுதி ஏற்படும். கல்விச் செல்வத்திற்கோ ஒருக்காலும் அழிவு ஏற் படாது. அதனைத் தேடிக்கொண்டால் பொருட்செல்

வத்தை இலகுவிற் தேடிக்கொள்ளலாம். ஆதலின் இன்னும் நீ படிக்கவேண்டியவற்றைப் படித்துக்கொள்'' என்று நற்புத்தி புகட்டினுள். கோபாலனே அவள் கூறியதொன்றையும் கவனித்திலன். தனக்கு எழுதப் படிக்கத் தெரிந்ததே போதுமென நவின்முன். பிறகு சுரமஞ்சரி, தனது இளைய புத்திரன் முத்துவைமட்டும் மேற்படிப்புப் படிக்குமாறு அனுப்பி வேண்டிய புத்தகங்களையும் வாங்கிக் கொடுத்தாள். கோபாலனுக்குப் படிப்பில் விருப்பமில்லாதிருந்ததனுல் அவனைக் கவனிக்காது விட்டாள்.

கோபாலனுக்கு வயது பதினைந்து ஆயிற்று. அவன் தினந்தோறும் வீட்டிலுண்பதும், தன்னுடைய துஷ்ட சிநேகிதர்களோடு சேர்ந்து சுற்றுவதிலும் வீணுகப் பணத்தையெடுத்துச் செலவு செய்வதிலும் பிரியமுடையவனுயிருந்தான். இவ்வாறு நாள் பல செல்ல சூதாட்டத்திலும், கட் குடித்தலிலும் வல்லவனுனன். என் செய்வாள் சுரமஞ்சரி. அவளோ பெண் பேதை. அவள் மறுபடியும் கோபாலனை யழைத்து, "கோபாலா! கல்வியை நஞ்செனக் கருதி விடுத்தாய். சூதும், கள்ளும் அமுதென மேற்கொண்டாய். அவை யிரண்டும் ஒருவனுக்கு அளவில்லாத அல்லலை விளைத்து நரகத்திற்கு ஆளாக்கும். எல்லோரையும் பகைக்கும்படி செய்யும். அறிவைக் கெடுத்து வறுமையை யழைத்துக்கொண்டு வந்து சேர்ப்பிக்கும். ஆதலின் நீ எதைச் செய்தபோதிலும் அவ்விரண்டினையும் மேற்கொள்ளாதே' என்று கூறினுள். கோபாலன் நிமிர்ந்த பிள்ளையாய் விட்டபடியால் அவள் சொல்லைக் கேளானுய், அவளை வைவதும் அடிப்பதுமாக விருந்தான். அவளும் 'இவன் எக்கேடு கெட்டுப்போனுலும் சரி' என்று விட்டுவிட்டாள். முத்துவை மட்டும் நன்கு கவனித்து கல்வியில் ஊக்கத்தை யூட்டினுள். அவன் அதிக கவனத்துடன் கற்று ஒவ்வொரு வகுப்பிலும் முதல்

தரமாகத் தேறி பரிசு பெற்று வந்தான். அது அவளுக்கு ஆனந்தத்தைக் கொடுத்தது.

கோபாலன் தினந்தோறும் வீட்டிலுள்ள பொருள்களைத் தயாருக்குத் தெரியாதபடி எடுத்துக்கொண்டு சென்று சூதாடுவான். சூதாடி முடிந்ததும் கள் குடிப்பான். தன் சகாக்களுக்கும் வேண்டியமட்டும் வாங்கிக் கொடுப்பான். இவ்வாறு காலத்தைக் கழித்து வந்தான். அதனால் சுரமஞ்சரியினுடைய செல்வத்திற் பாதி தொலைந்தது. தொலையவே சுரமஞ்சரி மனம் வருந்தினாள். மீதியிருக்கும் செல்வத்தையும் கோபாலன் தொலைத்துவிடுவானேயென்று நினைத்து, அதனைப் பத்திரப்படுத்தும் பொருட்டு, அச்செல்வத்தை யெல்லாம் தனக்குப் பின் மூத்துவே அடையவேண்டியதென எழுதி வைத்தாள். அதனை யறிந்த கோபாலன், சூதாட்டத்திற்கும், கட்குடிப்பதற்கும் பொருளில்லையே என் செய்வதென யோசித்தான். கடைசியில் களவு செய்து பிறர் பொருள்களை அபகரித்துக் கொள்ளலாமெனத் தீர்மானித்தான். தான் தீர்மானித்தபடியே இராப்பொழுதில் தன் சிநேகிதர்களுடன் சென்று திருடுவதும் பகற்பொழுதில் சூதாடுவதுமாக விருந்தான். இவ்வாறிருக்கும் தருவாயில் சுரமஞ்சரிக்கு வயிற்று நோவு உண்டாயிற்று. அதனால் மிகவும் கஷ்டப்பட்டாள். அப்பொழுதும் கோபாலன் தன் தாயாரைப்போய் பார்க்கவில்லை. அவள், ஆள்களை யனுப்பி அழைத்ததற்கும் போகவில்லை. கடைசியில் அவளுக்கு வியாதி வலுத்துக்கொண்டது. அப்பொழுது அவள், கோபாலனுக்கு ஒரு வார்த்தை கூறவேண்டுமென்றும் அதனை கேட்டுவிட்டு உடனே யவன் திரும்பி விடலாமென்றும் கூறி யழைத்துவருமாறு சில ஆட்களை யனுப்பினாள். அவ்வாட்கள், சூதாடிக்கொண்டிருந்த கோபாலனை யடைந்து விஷயத்தைத் தெரியப்படுத்தி, 'உன் தாயாருக்கு வியாதி யதிகரித்துவிட்டது. இனிப் பிழைப்பதரிது' எனக் கூறினர்.

அதன் பிறகு, அரைமனதுடன் அவ்விடத்தை விட்டுக் கிளம்பி தன்னன்னையை யடைந்தான். அன்னைக்குப் பிணி எந்நிலையிலிருக்கிற தென்பதைப்பற்றியும், எந்நிலையி லவள் இருக்கிருள் என்பதைப்பற்றியும் கேட்டிலன். "எதன் பொருட்டு என்னை யழைத்தாய்! விரைவாகக் கூறு. என் வேலை கெடுகிறது" எனக் கடுகடுத்துக் கூறினன். பார்த்தாள் சுரமஞ்சரி. அவனுடைய குறை வான அறிவிற்கு மிகவும் மனம் வருந்தினுள். பிறகு அவ னைப் பார்த்து, "கோபாலா! எனக்கு வியாதி முற்றிக் கொண்டது. இன்றைக்கோ, நாளைக்கோ இன்னுஞ் சில நாளிலோ இறக்கப்போகிறேன். யான் இனிமேல் பிழைக்கமாட்டேன். நீ என் வயிற்றில் புத்திரனுகப் பிறந்ததற்கு ஒன்று செய்யவேண்டும். அதாவது உன் னிடத்திலுள்ள கெட்ட குணங்களில் ஏதேனும் ஒன்றை விட்டுவிடவேண்டும். எதை நீ விட்டுவிடக் கருதுகிருயோ அதை இப்பொழுதே என்னிடம் கூறவேண்டும். அதை இன்று முதலாகச் செய்வதில்லை யென்று சத்தியஞ்செய்து தரவேண்டும். இவ்வாறு நீ செய்து கொடுப்பதை இறந் தும் மறவேன். ஆகையால் எதை விட்டுவிடுகிருய்?" என்று கேட்டாள்.

பார்த்தான் கோபாலன். தாய் சொல்லைத் தட்டுவ தற்கு முடியவில்லை. அதனுல் தாயாரின் அபிமானத்திற் காக ஏதேனும் ஒன்றை விட்டுவிடலா'மெனத் தீர்மானித் தான். பிறகு தன் மனதிற்குள், 'நம்மிடம், சூது, குடி, களவு, பொய் முதலிய கெட்ட குணங்களிருக்கின்றன. இவற்றுள் எதனை விட்டுவிடுவது? சூதாட்டத்தை விட்டு விட்டால் நம் சிநேகிதர்கள் நம்மை வெறுப்பர். நமக்கும் பொழுது சந்தோஷமாகக் கழியாது. ஒரு பொருளைப் பந்தயம் வைத்து நூறு பொருளைப் பெறுதலும் போய் விடும். அதனுல் அதனை விட்டுவிடமுடியாது. குடியை விட்டொழிக்கலாமென்ருல் சூதாட்டத்திற்கு உற்சாகத்

தைக் கொடுக்காது. அதனால் அதனையும் தவிர்க்கமுடியாது. களவை நீக்கிவிடலாமெனின், சூதும் குடியும் களவு இருந்தால்தான் நடக்கும். அதனால் அதனை நீக்க முடியாமலிருக்கிறது. ஆகவே பொய் ஒன்றிருக்கிறது. அதனைவிட்டு ஒழிப்பதால் நம் தொழில்களுக்கு யாதொரு பங்கமும் ஏற்படாது. அதனால், நம் அன்னையிடம் பொய் கூறுவதில்லை என வாக்குறுதி 'கொடுப்போம்' என நினைத்து, தன் தாயை நோக்கி, "அன்னாய்! நின் வேண்டுகோட்காக, நான் இன்றுமுதல் பொய் பேசுவதை விட்டொழிக்கிறேன். இது நிச்சயம்" எனச் சத்தியஞ் செய்தனன். அதன் பின் தனக்கு வேலையதிகமாயிருப்பதாகக் கூறிவிட்டு, அவ்விடத்தை விட்டகன்றான்.

சுரமஞ்சரி, தன் மகன் பொய் கூறுவதைத் தவிர்த்ததற்காகக் களிப்படைந்தாள். எவ்விதத்திலாவது, தன் மகன் நாளடைவில் கெட்ட குணங்களை எல்லாம் விட்டுவிடுவான் எனத்தேறினாள். பிறகு நாள் செல்லச்செல்ல வியாதி யதிகரித்து உயிர் துறந்தாள். அப்பொழுது முத்து அடைந்த கவலைக்கு ஓரளவில்லை. வீட்டிலுள்ளவர்கள், சுரமஞ்சரி யிறந்ததைக் கோபாலனுக்கு அறிவிக்குமாறு ஒருவனை யனுப்பினர். அவன் கோபாலன் சூதாடிக்கொண்டிருக்குமிடத்தை யடைந்து விஷயத்தைத் தெரிவித்து அழைத்தான். அதற்குக் கோபாலன் சிறிதும் வருந்தவில்லை. எல்லாக் காரியமும் நடக்கட்டும் யான் வருகிறேன் எனக்கூறி யனுப்பினான். அதன்பின் மற்றொரு ஆள் வந்து, "அப்பா! கோபாலா! எல்லாக் காரியமும் நடந்துவிட்டது. உனது தாயாரை ஸ்நானஞ் செய்விப்பதற்கு நீர் கொண்டுவரவேண்டும், எழுந்திரு" என்று கூறினார். அதற்கும் கோபாலன் எழுந்திராமல் "எல்லாம் என் தம்பியை வைத்துக்கொண்டு செய்யுங்கள் யான் வருகிறேன்" எனக் கூறி விடுத்தான். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம், வேறு சில ஆட்கள் வந்து, "அப்பா! பிரேதத்தை

எடுக்கவேண்டும் வா!" என்றழைத்தனர். அதற்கும் அவன் மனமிரங்காதவனாய், "என்ன ஐயா! பிரேதம் இந்த வழிதானே வரும். அப்பொழுது யான் சேர்ந்து கொள்கிறேன்" எனக் கோபத்துடன் கூறியனுப்பினான். வந்தவர்களும் இவனை இனி யழைப்பதிற் பயனில்லை யெனச் சென்று எல்லாக்காரியத்தையும் முத்துவைக் கொண்டே செய்து முடித்தனர். முத்துவும் தன் தாயாருக்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகளை ஒழுங்காகச் செய்து முடித்தான். அவனை எல்லோரும் புகழ்ந்து கொண்டாடினர். பிறகு அவனுக்கு ஒரு பெண்ணைப் பார்த்து மணஞ்செய்து வைத்தனர். அவனும் தனக்குள்ள சொத்தை வைத்துக்கொண்டு சுகமாக வாழ்ந்து வரலாயினான்.

கோபாலனோ ஊரரால் பழிக்கப்பட்டான். ஆயினும் தான் தன் தாயாரிடம் சத்தியம் செய்து கொடுத்தபடி 'பொய் பேசுவதில்லை' என்பதை மட்டும் உறுதியாகக் கொண்டான். தான் செய்யும் காரியத்தை யார் கேட்ட போதிலும், இன்னது செய்யப்போகிறேன் எனக்கூறுவான். இவ்வாறிருக்கும் சமயத்தில், ஒருநாளிரவு சூதாட்டத்திற்கும் கட்குடிப்பதற்கும் பொருளில்லை யாதலால், அரசன் மாளிகையிற் சென்று திருடலாமெனப் புறப்பட்டான். போகும் வழியில் ஏமாங்கதநாட்டுச் சச்சந்த மன்னன், மாறுவேடம் பூண்டு நகர்சோதனை செய்ய வந்தான். அவன் கோபாலனைச் சந்தித்து, "அப்பா! நீ யார்? இந்த நடுயாமத்தில் எங்குச் செல்லுகிறாய்?" எனக்கேட்டான். அதற்கு கோபாலன், "ஐயா! எனக்குத் திருவிருந்தவூர் என்பது இருப்பிடமாகும். அவ்வூரார் என்னைக் கோபாலன் என்றழைப்பர். யான், சூதாடுவதிலும் கட்குடிப்பதிலும் மிகப் பிரீதியுடையவன். அதனால் இப்பொழுது, சச்சந்தமன்னன் அரண்மனையிற் சென்று பொருளைக் களவாடச்செல்லு

கிறேன்" என்றான். அதைக்கேட்ட அரசன், "அப்பா கோபாலா! யானும் உன்னைப் போலொருவன்தான். யானுமுன்னுடன் வருகிறேன். நாமிருவரும் திருடுவதைப் பங்கிட்டுக்கொள்வோம்" என்றனன். கோபாலனும் அதற்குடன்பட்டான். பிறகு அவ்விருவரும் அரசமாளிகை யடைந்தனர். அரசனாகிய கள்வன், கோபாலனைப்பார்த்து "நண்பா! யான் இங்கே கவனித்துக் கொள்கிறேன், நீ அதோ செல்லும் வழியாக உள்ளே சென்று இரும்புப்பெட்டகத்தைத் திறந்துபார்; அதில் யாதேனும் இரத்தினங்களிருக்கலாம். அதனை எடுத்துக் கொண்டுவா" என்றான். கோபாலனும் அதற்குச் சம்மதித்து உள்ளே சென்றான்.

சென்றவன் காவலர் அறியாவண்ணம் பொக்கிஷசாலையினுள்ளே நுழைந்து, இரும்புப் பேழையைத் திறந்து பார்த்தான். அதில் அரசக் கள்வன் கூறியவாறு மூன்று இரத்தினங்களிருந்தன. பார்த்தான் கோபாலன். 'மூன்றையும் எடுத்துக்கொண்டு சென்றால் நமது நண்பனும் நாமும் பங்கிட்டுக்கொள்வது கஷ்டம். அதனால் 'ஒன்றை அரசனுக்கு வைத்துவிட்டு இரண்டைக்கொண்டு செல்வோம்' என நினைத்து அவற்றை எடுத்துக்கொண்டு வந்தான். பிறகு தன் நண்பனுடன் சேர்ந்து வெளியே போய், தான் செய்துவந்த சமாசாரத்தை ஒளியாமற் கூறினான். அரசக்கள்வனும் தான் வைத்திருந்ததும், அவன் கூறுவதும் பொருத்தமாக விருந்தமையின், அவனிடத்து மிகுந்த அன்பைக் காட்டினான். பிறகு தான் ஒன்றும் அவன் ஒன்றுமாகப் பிரித்துக்கொண்டு, "கோபாலா! யான் என்னிருப்பிடம் போய்வருகிறேன். நாளையதினமும் நாமிவ்விடத்தில் சந்திப்போம். நாம் ஒருவரை யொருவர் இனி விட்டுப் பிரியலாகாது" எனக்கூறி, யவன் இருப்பிடத்தையும் தெளிவாகக் கேட்டு வைத்துக்கொண்டு தன்னிருப்பிடம் சேர்ந்தான்.

கோபாலனும் 'தனக்கேற்றபடி புதிய நண்பனொருவன் கிடைத்தான்' என்று களிப்படைந்து தன்னிருப்பிடம் சேர்ந்தான். மறுநாள் பொழுது புலர்ந்ததும் அரசன் மந்திரியைப் பார்த்து 'பொக்கிஷ சாலையிலுள்ள பொருள்கள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று பார்' என்றான். மந்திரி உள்ளே சென்று ஒவ்வொன்றையும் பார்த்தான். பார்க்கையில் அரசன் வைத்திருந்த மூன்று இரத்தினங்களுள் ஒன்று மாத்திரம் இருப்பதைக் கண்டான். அப்பொழுது அவன் மனதில் கெட்ட எண்ணம் உதித்தது. "எவனோ ஒரு திருடன் வந்து களவாடியிருக்கிறான். அவன் இருட்டில் தெரியாமல் ஒரு இரத்தினத்தை வைத்துவிட்டுப் போய்விட்டான். ஆதலின், இதனை நாம் எடுத்துக்கொண்டு, 'மூன்று இரத்தினங்களையும் கள்வன் திருடிக்கொண்டு சென்றுவிட்டான்' என்று கூறிவிடலா"மென எண்ணினான். பிறகு அரசனையடைந்து தான் நினைத்தவாறே கூறினான். பார்த்தான் அரசன்! "ஆஹா! இவனை யோக்கியன் என்றல்லவா எண்ணியிருந்தோம். இவன் பாக்கியுள்ள ஓரிரத்தினத்தையபகரித்துக்கொண்டானே. இவனே பெரிய திருடன். இவனை யின்றோடு ஒழிக்கவேண்டும்" எனத் தீர்மானித்தான். ஆனால் அதனை வெளிக்காட்டவில்லை. அவனைப் பார்த்து, "மந்திரி! களவாடிய திருடன் யாராயிருக்கலாம். யான் நேற்று நகர் சோதனை செய்கையில் திருவிருந்தவூர் கோபாலனை நம்மரண்மனையிடம் கண்டேன். ஒருக்கால் அவன்தான் திருடியிருக்கலாமோ? யாதோ தெரியவில்லை. எதற்கும் விசாரித்துப்பார்" என்றனன். மந்திரியும் அவ்வாறே சென்று விசாரித்தான். விசாரிக்கையில், கோபாலன், "நான் தான் திருடினேன். இரண்டு இரத்தினங்கள் எடுத்தேன்; ஒன்றை வைத்துவிட்டேன். அவ்விரண்டில் யான் ஒன்றும் என்னுடன் வந்தவன் ஒன்றுமாக எடுத்துக்கொண்டோம்" என உண்மையையுரைத்தான்.

மந்திரி, "அரசே! கள்வனைப் பிடித்துக்கொண்டு வந்துவிட்டேன். மூன்றையும் திருடிக்கொண்டு இரண்டு தான் திருடியதாகப் பொய் கூறுகிறான். செம்மையாகத் தண்டனையிட்டால், 'இன்னொன்றையும் திருடினேன்' என்று ஒப்புக்கொள்வான்" என்று அரசனிடம் அழைத்துக்கொண்டு போய்க் கூறினான். அரசன் ஒன்றுமறியாதவன் போன்று சபை கூட்டி, கள்வனை விசாரித்தான். விசாரிக்கையிலும் முன் கூறியவாறே கூறினான். அப்பொழுது அரசன் சபையினரைப் பார்த்து, "கோபாலனிடம் ஒரு இரத்தினம் பங்கு வாங்கிய கள்வன் நான் தான். அந்த இரத்தினம் இதோ இருக்கிறது" என்று எடுத்து வைத்து, மந்திரியைப் பார்த்து, "மந்திரி; நீ திருடிய இரத்தினத்தைக் கொண்டு வந்து வைத்துவிடு" என்றான். பார்த்தான் மந்திரி. திருதிரு என்று விழித்தான். 'நம்முடைய களவு தெரிந்துவிட்டதே' என்று நடுங்கி ஒன்றும் கூறாது தன்னிடத்தில் உள்ள இரத்தினத்தையும் எடுத்துக் கொணர்ந்து வைத்தான்.

சச்சந்தன், அன்று முதல் தன் மந்திரியை வேலையிலிருந்து விலக்கிவிட்டான். கோபாலனிடம் எவ்வளவு கெட்டகுணங்களிருந்த போதிலும் உண்மையுரைத்தல் என்ற சிறந்த குணம் ஒன்று இருந்தமையின், அவனைப் புகழ்ந்து தன்னரண்மனையில் ஒரு உத்தியோகம் கொடுத்தான். அவனிடத்திலுள்ள கெட்ட குணங்களையெல்லாம் நீக்கிக்கொள்ளவேண்டுமென்றான். கோபாலனும், 'அரசனே தன்னுடன் வந்து, தான் உண்மை பேசியதற்கும் உத்தியோகம் கொடுத்ததற்கும் மகிழ்ந்தான். 'உண்மையுரைத்தல் என்ற ஒரு சிறு குணமே யிவ்வளவு பெருமையை யளிக்குமானல், மற்றைய நல்ல குணங்கள் எவ்வளவு பெருமையை யளிக்காது? அதனல் நம்முடைய கெட்ட நடத்தைகளை எல்லாம் விட்டுவிட வேண்டு'மென எண்ணி நாளடைவில் ஒவ்வொன்ருக விட்டு விட்டான்.

தன் வேலையையும் ஒழுங்காகச் செய்தான். அதனைப் பார்த்த அரசன் கடைசியில் அவனையே மந்திரியாகக் கொண்டான்.

---

7. அரசனும் வைத்தியனும்

கிரீக் தேசத்தை ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன் தன் நாடு செழித்து, ஜனங்களும் சந்தோஷித்து வருவதைப் பார்க்கப் பார்க்க உள்ள மகிழ்ச்சி யடைந்தான். நீதி தவறாது அரசாண்டு வந்தான். அவன் கீர்த்தி எல்லா தேசங்களிலும் பரவிற்று.

இப்படியிருக்கும் நாளில், திடீரென எக்காரணத்தினாலோ, அவனுக்குக்குஷ்டரோகம் வந்தது. ரோகமும் தேகம் முழுவதும் பரவி அரசனுடைய அழகைக் கெடுத்து விடும் நிலையை யடைந்தது.

அரசனுடைய நோயைத் தீர்க்க அநேக வைத்தியர்கள் முயற்சி செய்து பார்த்தனர். ஒருவராலும் அவனுடைய வியாதியைத் தீர்க்க முடியவில்லை. இந்த சமாசாரம் அயல் தேசங்களிலெல்லாம் பரவியது.

அக்காலத்தில், சகல பாஷைகளிலும் வல்லவனும், வைத்தியம் செய்வதில் மிகவும் தேர்ச்சி பெற்றவனும். எல்லோராலும் புகழ்ப்பட்டவனும் ஒரு வைத்தியன் இருந்தான். அவன் பெயர் டௌபான் என்பது. அவன் 'கிரீக் தேசத்தரசனுக்குக் கண்டிருக்கும் குஷ்டரோகத்தைத் தீர்த்தால் நல்ல பேரும், புகழும், பெருவாழ்வும் சித்திக்கு'மெனக் கருதி கிரீக் தேசத்தை யடைந்தான். அரண்மனை சென்று அரசனைச் சந்தித்து, தான் ஒரு வைத்தியனென்றும் தன்னால், அரசனுக்குத் தற்போது கண்டிருக்கும் பெருவியாதியைச் சௌக்கியப்படுத்த முடியுமென்றும் சொன்னான்.

உடனே அரசன் வைத்தியனைப் பார்த்து, "வைத்தியனே! நீ வைத்தியன் என்று சொன்னது எனக்கு அவ்வளவு சந்தோஷத்தை யளிக்கவில்லை. அதற்குக் காரணம் அநேகமாக, எல்லா வைத்தியர்களாலும் பார்த்து சிகிச்சை செய்யமுடியாமல் போன சமயத்தில் நீ வந்து 'நான் சௌக்கியப்படுத்தி விடுவேன்' என்று சொன்னதே யாகும். நான் சாப்பிடாத ஔஷதமே கிடையாதெனலாம். அதனால் இனி எனக்கு உள்ளுக்கு ஔஷதம் கொடுக்காமலும், மேலுக்கு மருந்து பூசாமலும் எனக்கிருக்கும் இவ்வியாதியை உன்னால் சௌக்கியப்படுத்த முடியுமா? அப்படியானால் உன் வைத்தியத்தை ஆரம்பிக்கலாம். அப்படி யில்லாத பக்ஷத்தில் நீ உடனே சென்றுவிடு" என்றான்.

டௌபானும், அரசன் சொன்னதைக் கேட்டு "அரசே! தாங்கள் சொன்னபடியே உள்ளுக்கு மருந்து கொடாமலும் மேலுக்கு மருந்து பூசாமலும் தங்கள் வியாதியைச் சௌக்கியம் செய்ய என்னால் முடியும்" என்றான். அரசன் வைத்தியனுடைய வார்த்தையைக் கேட்டதும் சந்தோஷத்துடன் "நீர் சொல்லுகிறபடி செய்வீராகில் உம்மையும் உம்முடைய வம்சத்தாரையும், ஐசுவரியவான்களாய்ச் செய்ய என்னால் முடியும். அத்துடன் நில்லாது உம்மை என்னுடைய முதன் மந்திரியாகவும் ஆக்குவேன். நீர் எப்படி உள்ளுக்கு மருந்து கொடுக்காமலே என் வியாதியைச் சௌக்கியப்படுத்த முடியும்?" என்று கேட்டான். அதற்கு வைத்தியன் மறுநாள் தான் செய்து காட்டுவதாகச் சொல்லி விடைபெற்றுச் சென்றான்.

வைத்தியன் வீட்டை யடைந்ததும், பந்தடிக்கும் கோலொன்று மரத்தால் செய்து அதன் கைப்பிடியை மாத்திரம் தாம்பிரத்தில் செய்து அதனுள் தான் சித்த முறையில் தயாரித்த பஸ்பத்தை நிரப்பி முன் போலக்

கைப்பிடியை அதனுடன் பொருத்தி, பந்தொன்றையும் தயார் செய்து கொண்டு மறுநாட் காலை அரண்மனையை யடைந்தான்.

பின், அரசனைக் கண்டு "அரசே! தாங்கள் எப்பொழுதும் பந்து விளையாடும் இடத்திற்குக் குதிரையிலேறி வர வேண்டும். அவ்விடத்தில் நான் முன்பே சென்று உமக்காகக் காத்திருப்பேன்" என்றான். அரசனும் வைத்தியன் கேட்டுக்கொண்டபடி ஏவலாளர் சகிதம் குதிரை ஏறி வேகமாய்ப் பந்து விளையாடுமிடம் சென்றான். சென்றதும், அங்கே அரசன் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த வைத்தியன் தான் கொண்டுவந்திருந்த பந்தடிக்குங் கோலையும், பந்தையும் அரசனிடம் கொடுத்து "அரசே! இக்கோலால் இப்பந்தை பலமுறையும் அடியுங்கள். அப்படி யடிப்பதால் தங்களுடைய தேகத்திலிருந்து வியர்வையானது வெள்ள மெடுத்து வரவேண்டு" மென்றான்.

உடனே அரசனும் வைத்தியன் சொற்படி பந்தடி கோலால் பந்தை பலமுறையும் அடிக்க, ஏவலாளிகள் பந்தை எடுத்தெடுத்துக் கொடுக்க, அரசனும் மறுபடியும் மறுபடியும் பந்து அடித்துத் தன் தேகத்திலுள்ள துர் நீரெல்லாம் வியர்வை ரூபமாய் வெளியேறும் வரை விளையாடினன். தாம்பிரத்தால் செய்யப்பட்ட கைப்பிடியில் வைத்திருந்த மருந்தின் வேகமானது அரசனது தேகத்தில் அதிகமாகச் சூடுண்டாக்கி அதிக வியர்வை நீரைப் பெருக்கிற்று.

இதனைக் கண்ட வைத்தியன் அரசனைப் பார்த்து 'அரசே! தாங்கள் உடனே குதிரையேறி அரண்மனை சென்று நன்றாக ஸ்நானம் செய்து போசனம் உட்கொண்டு நித்திரை கொள்ளுங்கள். இனி தங்கள் தேகத்திற்கு சிரமத்தை யுண்டுபண்ணக்கூடாது. நாளைக் காலையில் மருந்தின் பலனைக் காண்பீர்கள்" என்று சொல்லி

விட்டு விடைபெற்றுச் சென்ருன். அரசனும் வைத்தியன் சொற்படி அரண்மனை சென்று ஸ்நானம் செய்து போசன முட்கொண்டு அயர்ந்து நித்திரைபோயினன்.

பொழுது விடிந்தது. அரசன் எழுந்திருந்து தன் தேகத்தைப் பார்த்தான். ஆச்சரியங் கொண்டான். தனக்குக் குஷ்டரோகம் நேற்றுவரை யிருந்ததே கனவு என்று சொல்லும்படியாகச் சிறிதும் அடையாளமில்லாமல் சௌக்கியமாகியிருந்தது. உடனே தன்னை யலங்கரித்துக் கொண்டு சபாமண்டபத்தை யடைந்தான். அரசனைக் காணவந்த மந்திரி, பிரதானிகளனைவரும் அரசனுக்குண்டான வியாதி சௌக்கியமானதைப்பற்றி ஆச்சரியங் கொண்டனர். டௌபான் மிகவும் கெட்டிக்காரனெனவும் வைத்தியத்தில் கைதேர்ந்தவனெனவும் எல்லோராலும் புகழப்பெற்ருன்.

கொஞ்ச நேரத்தில் டௌபானும் அரசனைக்காண அவைக் களத்திற்கு வந்தான். அவனைக் கண்டதும் அரசன் அவனுக்கு வேண்டிய மரியாதைகள் செய்து, சகலவிதமான ஆபரணங்களும் அளித்து அவனைத் தன்னருகில் உட்கார வைத்துக்கொண்டு சபையோரை நோக்கித் தான் செய்த வாக்குறுதியைக் காப்பாற்றி அவனைப் பிரதான மந்திரியாகச் செய்யப் போவதாகவும் சொன்னன்.

அரசனுத்திரவுப்படியே டௌபானும் தன் மனைவி மக்களைக் கூட்டிக்கொண்டு வந்து கிரீக் தேசத்தில் அரசனுலளிக்கப்பட்டதோர் புதிய அரண்மனையில் குடியேறி அரசனுலளிக்கப்பட்ட சகல சம்பத்துடனும் சௌக்கியமாக இருந்து வந்தான். டௌபான் தற்போது பிரதான மந்திரியானபடியால் முன் முதல் மந்திரியா யிருந்தவனுக்கு டௌபான் பேரில் பொருமைத்தீ மூண்டது. அது நாட்கள் செல்லச்செல்ல அதிகமாய் எரியத்

தலைப்பட்டது. அவன் பெயர் கலீல் என்பது. கலீல் சூது, வாது, அக்கிரமம், பொறுமை, பேராசை, புறங்கூறுதல், அடுத்துக்கெடுத்தல் முதலிய சகல துற்குணங்களும் குடி கொண்டவன். டௌபானுக்கு அரசன் செய்யும் மரியாதைகளையும் கொடுக்கும் கொடைகளையுங் கண்டு அவன் மிகவும் வயிற்றெரிச்சற் கொண்டிருந்தான். அரசனுக்கு அவன் பேரிலுள்ள அபிமானத்தைப் போக்கவேண்டு மென்று தீர்மானித்துக் கொண்டான்.

கலீல் கொண்ட கெட்ட எண்ணத்துடன் அரண்மனை சென்று அரசனை அணுகி "அரசே! தங்களிடம் தனிமையாகத் தீர்க்கமாய் ஆலோசிக்க வேண்டிய விஷயமொன்றைப்பற்றிப் பேசவேண்டு"மென்றான். அரசன் "அவ்வளவு முக்கியமான சமாசாரமென்ன?" என்று கேட்டான். அதற்கு "மகாராஜனே! புதிதாக வந்த ஒருவனை, அவனுடைய குணகுணங்களை ஐயந்திரிபற வுணராமல் அவன்மீது அரசர்கள் நம்பிக்கை வைப்பது எப்பொழுதும் ஆபத்துக்கிடமானது. இப்பொழுது தாங்கள், இரண்டு நாளைக்கு முன் யார் என்றறியாத டௌபான் என்னும் வைத்தியன்மீது நம்பிக்கை வைத்து, அவனுக்கு சகல சம்பத்துக்களும் அளித்து அவனை கௌரப்படுத்தி வருகிறீர்களே? அவன் நல்ல குணமுடையவனென்று நீங்கள் எப்படியறிந்தீர்கள். அவன் வைத்தியத்தைப் பற்றித் தாங்கள் பரீக்ஷித்தீர்களே ஒழிய அவன் கெட்ட குணங்களிலொன்றும் தங்களுக்குத் தெரியவராது. தங்களை வஞ்சித்துக் கொல்லவே அவன் தங்களை யண்டியிருக்கிறான். தங்கள் பேரிலுள்ள அபிமானத்தாலும் தங்களுடைய சிறந்த குணங்களாலும், என்னுடைய ராஜவிசுவாசம் இதைத் தங்களிடம் சொல்லும்படி தூண்டிற்று" என்றான்.

அரசனுக்குக் கோபம் அதிகரித்தது. "என்ன சொல்லத்துணிந்தாய்! நீ யாரிடம் யாரைப்பற்றிப் பேசுகிறாய்

என்பதை மறந்து பேசுவதாக நினைக்கிறேன். நீ சொல்லுவ தொன்றையும் நான் கேட்கத் தயாராகவில்லை. நம்பவும் தயாராகவில்லை" என்முன். கலீல் அரசன் அடிபணிந்து "ராஜாதி ராஜனே! நான் தங்களைக்கண்டு பேசப்போகு முன் டௌபானைப்பற்றி நன்ருய் விசாரித்தறிந்த பின் னரே அவனைப்பற்றித் தங்களிடம் பேச முன்வந்தேன். அவன் நம்முடைய பகையரசர்களால் தங்களைக்கொல்ல அனுப்பப்பட்டவன். அப்படிப்பட்டவன் பேரில் தாங்கள் இவ்வளவு நம்பிக்கை வைப்பது பிசகு. அவனுடைய சிநேகம் தங்களுடைய பிராணனுக்கே ஆபத்தை உண் டாக்காது என்பது என்ன நிச்சயம்? அவன் தங்கள் உயிரை நாடிவந்தவனே ஒழிய வேறல்ல" என்ருன்.

"மந்திரி! நீ யென்பேரிலுள்ள அன்பினுல் இவ்வாறு பேசுகிருய் என்பதை யுணர்ந்தேன். அவன் பகையரச ஞல் அனுப்பப்பட்டவனென்று சொன்னுய். பகையரசர் கள் இவ்விதமான தந்திரத்தால் என்னைக்கொல்ல நியாய மில்லை. அத்துடன் டௌபானும் என் வியாதியை சௌக் கியப்படுத்தினனேயொழிய அதிகப்படுத்தவில்லை. அவ் வாறு என்னுயிரைக் காப்பாற்றிய உத்தம புருஷனைப் பற்றி நீ இவ்வாறு சொல்வது நம்பத்தகுந்ததல்ல. நம் நாட்டிள்ள சகல வைத்தியர்களாலும் வைத்தியம் செய்து குணப்படுத்த முடியாத அவ்வளவு பெரிய நோயை இவன் ஒரே நாளில் சௌக்கியப் படுத்தியிருக்கிருனே. இவன் என் உயிரை நாடி வந்தவனுனல் என்னைக் காப்பாற்றக் காரணம் யாது? அவன் என்னுயிரைக் காப்பாற்றியதற் குப்பிரதியுபகாரமாக அவனுக்கு என்னுடைய ராஜ்யத்தில் பாதியளித்தாலும் ஈடாகாது. நீ இவ்வாறு அவனைப்பற்றிச் சொல்லுவதைக் கவனிக்குங்கால், அவனுக்குத் திடீரென உண்டாயிருக்கும் பதவியையும், பெருமையையும் கண்டு பொருமைப்படுகிருய். நீ சொல்வதைக் கேட்டு நான் அவன்மேல் தோஷம் நினைக்கமாட்டேன். இனியிப்படிப்

பட்ட வார்த்தைகளை என் காதில் போடாதே! போ" என்றான்.

"அரசே! டௌபானைத் தங்களுடன் நெருங்கிப் பழக விடுவது பிசகு என்பதை நாங்கள் அறிவோம். 'மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்' என்பதை யொப்ப, தங்களுக்கு வரவிருக்கும் ஆபத்திலிருந்து தங்களைக்காப்பாற்ற வேண்டியது எங்களுடைய முக்கிய கடமைகளிலொன்றல்லவா? மந்திரிகளுடைய பேச்சைக் கேட்காத அரசர்கள் அநேகர் மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. ஆகையால் நான் சொல்லுவதை நம்பித் தாங்கள் உடனே கொலையாளிகளைக்கொண்டு அவனைக் கொல்ல உத்திரவு இடுங்கள்" என்றான்.

அரசன் "மந்திரி! உனக்கு எள்ளளவும் கெடுதல் நினைக்காத டௌபானைப் பொறாமையினால் கொல்லும்படி எனக்கு நீ போதிக்கிறாய். அதற்கு நான் செவி சாய்க்க மாட்டேன். உன் பேச்சைக் கேட்டு அவனைக் கொல்லும்படி உத்திரவிடவும் மாட்டேன். அப்படிச் செய்தால் நன்றி மறந்தவனாவதோடும் என்றும் அழியா அடாப்பழியையும் பெறுவேன். பெரிய பாவத்தையும் செய்தவனாவேன்" என்றான்.

"அரசே! தோஷமற்றவர்களை வருத்தக்கூடாதென்பது நியாயமே! தோஷமுள்ள டௌபானைக் கொல்லுவதற்கு என்ன யோசனை? உங்கள் உயிரைக் கவரவந்தவன் என்னும் குற்றம் சாட்டப்பெற்றிருக்கிறான் அல்லவா? அவனைக் கொல்ல உத்திரவிட அது போதுமான காரணமாகவில்லையா?" தாங்கள் ஒன்றும் யோசிக்காது என் சொற்படி அவனைக் கொன்றுவிடும்படி உத்திரவிடுங்கள்" என்றான்.

மறுபடியும் மந்திரி "அரசே! குற்றம் செய்த ஒருவனை தண்டிக்காமல் விட்டுவிட்டால் அவனால் நாட்டிலிருக்

கும் ஜனங்களுக்குக் கெடுதலுண்டாகுமென்பதில் தடை என்ன? குற்றமே செய்யாத ஒருவனை தண்டித்தலால் என்ன கெடுதலேற்படும். அவனால் ஒரு கெடுதலும் ஏற்படாததோடு அரசனுடைய தண்டனையைக்கண்டு நாட்டிலுள்ளோர் நடுங்கிப் பயந்து நடக்க ஏதுவாகும். குற்றஞ் செய்த டௌபானைத் தாங்கள் குற்றமற்றவனெனக் கொள்ளக்கூடாது. பின் அவனால் தங்களுயிருக்கு ஆபத்து நேர்ந்ததாக வைத்துக்கொள்ளுவோம். ஆபத்து நேர்ந்த பிறகு அவனைத் தண்டித்துவிட்டால் தங்களுடைய உயிர் திரும்பி வந்துவிடுமா? வெள்ளம் வருவதற்குமுன் அணை போடுவதை விடுத்து வெள்ளம் பெருக்கெடுத்த பிறகு அணை போடுவதை யொக்கும் தங்களது செயல். ஆகையால் டௌபானை உயிருடன் வைத்திருப்பது பிசகாகும்" என்று பலவாறு துர்போதனை செய்தான்.

கிரீக்தேசத்தரசன் கண்டிப்புள்ளவனாகவும், சுயபுத்தியுள்ளவனாகவும் இருந்தானானால் மந்திரியைக் கண்டித்துக் கூறிப்புறங்கூறுதலை வெறுத்துப்பேசி யிருப்பான். 'அடி மேலடி வைத்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழிப்படி துன்மந்திரியாலேற்பட்ட துர்போதனையால் அரசனுடைய மனம் கொஞ்சம் மாறுதலடையும் தன்மையை யடைந்தது.

அரசன் கொஞ்சம் யோசிப்பதை யறிந்த கலீல் உடனே அரசே! இன்னொன்று சொல்லுகிறேன். சகல வைத்தியர்களாலும் தீராத பெருங்குஷ்ட நோயை ஒரே நாளில் தீர்த்து சௌக்கியத்தை உண்டாக்கிய டௌபான் ஏன் ஒரே நாளில் தங்களைக் கொல்லக்கூடாது? நன்றாய் ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். நான் அதிகம் சொல்லத் தயாராகவில்லை. உங்களிஷ்டம்போல் செய்யலாம்" என்றான்.

துன்மந்திரியாகிய கலீல் செய்த அதிகப் பிரசங்கத்திற்கு செவிசாய்த்தான் அரசன். அவ்வாறு செய்வதற்

குக் காரணம் டௌபானின் இறுதிக்காலமும், அரசன், புறங்கூறுவர் பேச்சுக்கு இடங்கொடுத்தலின் பலனை யனுபவிக்க வேண்டிய காலமும் நெருங்கினபடியாலுமே என்பதில் தடையென்ன ?

"மந்திரீ ! நீ சொல்லுவதெல்லாம் உண்மையாகவே யிருக்கக்கூடும். ஏனெனில் அவன் வெகு சீக்கிரத்தில் எனக்கிருந்த வியாதியை சௌக்கியப்படுத்தி விட்டான். மருந்தொன்றும் உள்ளுக்குக் கொடுக்காமலே சௌக்கியப்படுத்தியவன் மருந்தொன்றும் கொடாமலே என்னைக் கொல்லவும் கூடும். இப்படிப்பட்ட சமயத்தில் நாம் செய்யவேண்டியதை நன்காலோசித்துச் செய்யவேண்டும். அதற்கென்ன செய்யலாம் ?" என்றான்.

தான் எண்ணியபடி அரசனுடைய மனத்தைத் திருப்பி விட்டதை நினைத்து உள்ளம் பூரித்த கலீல் பின்னும் துர்போதனைக்கு ஆரம்பித்து, "அரசே ! நான் பாடுபடுவதெல்லாம் தாங்கள் கவலை நீங்கி அமைதி அடையவும் தங்களுடைய உயிரைக் காப்பாற்றவும்தான். அதற்குச் சரியான மார்க்கம் என்னவென்றால் உடனே டௌபானை வரவழைத்து ஒரு காரணமும் சொல்லாமல் கொலையாளிகளைக்கொண்டு அவனைச் சிரச்சேதம் செய்துவிடும்படி உத்தரவிட வேண்டியதே. இதுதான் சரியான வழி" என்றான்.

அரசன் அவ்வாறே ஏவலாளரை யழைத்து டௌபானைச் சிறைப்பிடித்து, உடனே தன் முன்னே கொண்டு வந்து நிறுத்தும்படி கட்டளையிட்டான். அரசனது உத்திரவுப்படி டௌபானென்னும் வைத்தியன் சிறை செய்யப்பட்டு அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான்.

உடனே அரசன் அவனைப்பார்த்து "உன்னை இப்பொழுது இங்கே வரவழைத்த காரணத்தை நீ யறிவையா ?" என்றான். அதற்கு டௌபான் "அறியேன்

அரசே! தாங்கள் ஒரு நாளுமில்லாமல் இன்று என்னைச் சிறைப்படுத்திக்கொண்டு வரும்படி கட்டளை இடவேண்டிய காரணம் யாதோ? தயவு செய்து உத்திரவிட வேண்டுகின்றேன்" என்றான். "உன்னுடைய சதியாலோசனையினின்றும் தப்பித்துக்கொள்ளவும் உன்னைச் சிரச்சேதம் செய்ய உத்திரவிடவும் உன்னை சிறைப்படுத்தினேன்" என்றான் மதி மயங்கிய அரசன்.

அரசனது வார்த்தைகளைச் செவியுற்றவுடனே இடியோசை கேட்ட நாகம்போல் பயந்தான் டௌபான். செய்வ தின்னதென்று அறியானாய்ச் சித்தங்கலங்கி நின்றான். திடீரெனத் தனக்குண்டான உன்னத பதவியையும், ஐஸ்வரியத்தையும் கண்டு பொறாமைகொண்ட மற்ற மந்திரிகளே, தான் இவ்வாறு அவநிலை யடைந்து அல்லல் படக் காரணமென யூகித்தறிந்து கொண்டான். தன்னைப் பற்றி அவர்கள் சொல்லியவற்றை மதிமயங்கிய அரசன் கேட்டுத் தன்னைச் சிரச்சேதம் செய்ய உத்திரவிட்டதை நினைக்க நினைக்க அரசனுக்கிருந்த பெருங் குஷ்டநோயை என் தீர்த்தோம் என வருந்தினான். உடனே அரசனை நோக்கி "மதிமிக்க மன்னவ! நான் தங்களுக்குச் செய்த பேருதவிக்குப் பிரதி பலன் இதுவேயோ?' என்று மன்றாடினான்.

அதற்கு அரசன் சிறிதும் இடங்கொடாமல் தனது ஏவலாளிகளை நோக்கி, தன்னுடைய உத்திரவை நிறைவேற்றும்படி வற்புறுத்தினான். இதனைக்கேட்ட டௌபான் "மன்னனே! எதையும் ஆலோசித்துச்செய். நான் உனக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தேன். நீ என் உயிரைக் கவர ஆணையிட்டாய். கடைசி முறையாக எனக்கு உயிர்ப் பிச்சை யளிப்பாயாகில் உனக்கு பகவான் உயிர்ப்பிச்சை யளிப்பார். இல்லையேல் என்னைக்கொன்ற அன்றே நீயும் இறப்பாயென்பது நிச்சயம்!" என்றான். டௌபான்

வார்த்தைகளொன்றும் அரசன் செவியில் ஏறவில்லை. வைத்தியன் கெஞ்சினன். அரசன் அவனை நிராகரித்துத் தள்ளினன். டௌபானுக்கு அரசன்பாலிருந்த அன்பெல்லாம் வெறுப்பாக மாறி அரசன் மேல் வஞ்சம் தீர்க்க எண்ணினன். சமுத்திரத்தில் விழுந்து நீந்தத் தெரியாதவன் சமுத்திரத்தில் மிதக்கும் குச்சியைக் கூடப் பிடித்து உயிர் தப்ப முயற்சிப்பதுபோல் மற்றொரு முறை முயற்சிக்க எண்ணங்கொண்டு "அரசே! என்னைக் காப்பாற்றவேண்டும்! நான் நிரபராதி" என மன்றாடினன். அதற்கு அரசன் "நீ அவசியம் இறக்கவேண்டியவனே. இல்லாவிட்டால் என் குஷ்டநோயை எவ்வளவு சாமர்த்தியமாய்ப் போக்கடித்தாயோ அதைவிடத் தந்திரமாய் என் உயிரை; நீ போக்கக்கூடும். உன்னல் என் உயிருக்கு என்றும் ஆபத்தே" என்றான்.

இதைக்கேட்ட சில இறக்கமுள்ள பிரபுக்களும் டௌபானுக்காக மன்றாடினார்கள். அரசன் எதற்கும் அசையாதது கண்டு மனம் நொந்தவர்களானர்கள். டௌபானும் தானினி உயிரிழக்க வேண்டியதே என்றெண்ணித் தயாரானன். ஏவலாளிகளில் சிலர் வைத்தியனின் கண்ணைக்கட்ட ஆரம்பித்தனர். பொதுவாகவே அரசருடன் பழகுவோர் பாடு இவ்வாறு தான் போலும். அரசருடன் பழகுவது விஷமுள்ள அரவத்துடன் பழகுவதையொக்கும். எவ்வாறெனில் தனக்கு உயிர்ப்பிச்சையளித்துக் காப்பாற்றிய டௌபானைக்கொல்ல ஏவியது, பாதையில் சாகுந்தறுவாயிலிருந்த ஒரு அரவத்தை எடுத்து வளர்த்து அதற்குப் பால் வார்த்து உயிர்ப் பிச்சை கொடுத்தவனையே அது சீறிக் கடிக்கச் சென்றதை யொக்கும்.

அப்பொழுது டௌபான் "அரசே; நான் சாகத் தயாராயிருக்கிறேன். ஆனல் நான் என்னுயுள் முடியும் காலத்தில் ஒருவரம் தங்களைக்கேட்க விரும்புகிறேன். அதை யருள வேண்டும். அதாவது கடைசியாக என்

மனைவி மக்களைக் கண்டுபேசி உரையாடிவிட்டு தான தருமங்கள் பல செய்து என்னுடைய வைத்திய கிரந்தங்களைச் சில புத்திமான்களுக்குத் தானம் செய்துவிட்டுத் திரும்பித் தாங்களிட்ட தண்டனையை ஏற்றுக் கொள்ள இவ்விடம் உடனே வருகிறேன். இதை மட்டும் செய்ய அவகாசம் கொடுக்கவேண்டும். அப்புத்தகங்களுள் ஒன்று மிகவும் பத்திரமாய்ப் பொக்கிஷத்தில் வைத்துக் காப்பாற்றத்தகுந்தது" என்றான்.

"அப்படிப்பட்ட விசேஷமான புத்தகம் என்ன? அது என்ன விஷயத்தைக்கூறும் நூல்?" என்று அரசன் வினவினான். அதற்கு டௌபான் "அரசே! அது மிகவும் உயர்ந்த நூல். என் தலை வெட்டப்பட்டதும் அதைத் தரையில் விழா வண்ணம் தாங்கி ஒரு தங்கத் தட்டில் வையுங்கள். பிறகு, அப்புத்தகத்தின் எட்டாம்பக்கத்தில் பதினைந்தாம் வரியை வாசித்து அதனால் தங்களுக்கு ஏற்படும் சந்தேகத்தை என் தலையைக் கேட்டால் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் விடை பகரும். அவ்வளவு அருமையான நூல் தங்களுக்கே உரியது" என்றான்.

இந்த ஆச்சரியமான புத்தகத்தைப் பார்க்க எண்ணி அரசன் காவலாளிகளுடன் டௌபானை வீட்டுக்குச் சென்று மனைவி மக்களைக் கண்டுபேசி உத்தரவு பெற்று வருவதுடன் அந்த அருமையான நூலையும் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தான்.

சிறிது நேரஞ் சென்றதும் டௌபான் மனைவி மக்களிடம் பிரிவாற்று உத்திரவைப்பெற்று ஒரு பெரிய புத்தகத்தைக் கையிலெடுத்துக்கொண்டு காவலாளிகள் சூழ அரண்மனையை அடைந்தான். உடனே அரசனை அணுகித் தான் கொண்டு வந்த புத்தகத்தைக் கொடுத்து "அரசே! இப்புத்தகத்தைச் சுற்றியிருக்கும் பட்டை ஒரு தங்கத்

தட்டில் விரித்து என் தலை வெட்டுண்டவுடன் வைப்பீர்களானால் கழுத்திலிருந்து வரும் இரத்தம் அடங்கும். பிறகு நான் முன் சொன்னபடி கேட்பீர்களானால் தங்களுக்குச் சரியான பதில் கிடைக்கும். அரசே! கடைசியாக மறுபடியும் நான் என் உயிர்ப்பிச்சை கேட்கிறேன் கொடுக்கலாகாதா?'' என்றான்.

''இனி உன்னுடைய வேண்டுதல் பயன்படாது. உன்னை வெட்டிய பிறகு உன் தலை மட்டும் பேசும் ஆச்சரியத்தைப் பார்ப்பதற்காகவேனும் உன்னை வெட்ட விரும்புகிறேன்'' என்ன சொல்லிவிட்டு ஏவலாளிகளை நோக்கி டௌபானைச் சிரச்சேதம் செய்யச்சொன்னான். அவ்வாறே மகா பாபியாகிய அரசன் தனக்குயிரை யளித்த உத்தமனாகிய வைத்தியனின் தலையை வெட்டி எடுத்து அவன் சொல்லியபடியே தட்டில் வைத்தான். வைத்தவுடன் குபீர் குபீரென வந்து கொண்டிருந்த ரத்தம் நின்று விட்டது.

உடனே வைத்தியனுடைய தலையானது அரசனைப் பார்த்து, கண்களைத் திறந்துகொண்டு, ''அரசே! தாங்கள் இப்பொழுது அப்புத்தகத்தின் எட்டாம் பக்கத்தைத் திறவுங்கள்'' என்றது.

அரசன் அத்தலை சொல்லியவாறே புத்தகத்தைப் பிரித்து ஒவ்வொரு பக்கமாகத் தள்ளினான். ஆனால் இரண்டு பக்கம் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டிருந்ததால் தன் வாயில் விரலை வைத்து எச்சலாக்கி அவ்வெச்சலின் ஈரத்தைக்கொண்டு ஒவ்வொரு பக்கமாகத் தள்ளி மறுபடியும் எச்சலாக்கி மறுபடியும் தள்ளி இவ்வாறே எட்டாம் பக்கம் வரை எச்சலாக்கிக்கொண்டே வந்தான். கடைசியாக எட்டாம் பக்கத்தில் எழுத்துக்களே இல்லாததைக் கண்டு அரசன் வைத்தியனின் தலையைப் பார்த்து 'டௌபானே! இந்தப் பக்கத்தில் எழுத்துக்களையே காணவில்லையே. காரணம் என்ன?'' என்று கேட்க அதற்கு வைத்திய

னுடைய தலை "அப்படியானால் இன்னும் நாலைந்து பக்கங்கள் தள்ளுவீர்களா" என்றது. அரசன் அதன் சொற்படியே மறுபடியும் எச்சலாக்கியே அப்பக்கங்களையும் தள்ளினான்.

டௌபான் மிகவும் புத்திசாலியாகையால் தான் முன்னம் ஒவ்வொரு பக்கங்களிலும் விஷத்தைத் தடவி உலர வைத்துத் தயாரித்திருந்த புத்தகமே தற்போது அரசன் எச்சலாக்கி எச்சலாக்கிப் பக்கங்களைத் தள்ளியது. இவ்வாறு அரசன் செய்ததால் புத்தகத்தின் பக்கங்களில் தடவியிருந்த விஷமானது அரசனது நாவிற்குச் சென்று அதனுடைய குணத்தைக் காட்டத் தலைப்பட்டது. அரசனுக்குக் கண்கள் சுழன்றன. ரத்தக் கொதிப்பு ஏற்பட்டது. தலை தொங்கி சப்த நாடிகளும் ஒடுங்கி சிம்மாதானத்தின் அடியில் வேரற்ற மரம்போல் விழுந்தான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அரசனுக்கு விஷம் சரியாக ஏறிவிட்டது; இனிப் பிழைக்க மாட்டானென்று கண்ட வைத்தியனின் தலையானது "கொடுங்கோலனே! நியாயம் ஒருபுறமிருக்க அநியாயமாகப் புறங்கூறுபவர் பேச்சைக்கேட்டு எனக்குத் தண்டனை விதித்த உனக்கு கடவுள் தண்டனையிட்டார். குற்றமற்ற குணவான்களைக் கொல்லும் கொற்றவர்கள் படும் அவஸ்தை இத்தகையதே! நீ என்னை அநியாயமாகக் கொன்றதால் நான் உன்மேல் என் வஞ்சகத்தைத் தீர்த்துக்கொண்டேன்" என்றது.

அவ்விஷமானது அரசனைக் கொன்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் வைத்தியனுடைய தலையும் பேசுவதை நிறுத்திப் பிணமானது. ஆகையால்,

அடாது செய்வோர் படாது படுவர்
எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. குறள்

8. புருஷோத்தமன்

நீர் நிலவளங்களாற் சிறப்புற்றோங்கியது பாண்டியநாடு. அதற்குத் தலைநகரமாகவிருந்த மதுரைமாநகரை முன்னொரு காலத்தில் சீவகன் என்னுமரசன் ஆண்டு வந்தனன். அவன் பளிங்குபோன்ற பரிசுத்த மனமுடையவன். அவனுக்குக் குடிலன் என்ற அமைச்சனொருவனிருந்தான். அவன் தன் பெயருக்கேற்றவாறு வஞ்சகநெஞ்சுடையனாக இருந்ததோடு தன்னயங் கருதுந் தன்மையுமுடையான். அவன், தனது தேன்போன்ற இனிய வஞ்சக மொழிகளால் அரசனைத் தன் வயப்படுத்திக் கொண்டான்.

பின்னர் அவன், மதுரையே தலைநகரமாக இருக்குமாயின் தனது செல்வாக்கையும் செல்வத்தையும் மேன்மேலும் வளர்த்துக்கொள்ள முடியாதெனத் தனக்குள் முடிவு செய்து கொண்டான். அதற்காகப் பல சூழ்ச்சிகளைச்செய்து அந்நகரின் மீது அரசனுக்கு வெறுப்புண்டாகுமாறு செய்தான். திருநெல்வேலியில் கோட்டை அரண்மனை முதலியன அமைத்தான். அதனைத் தலைநகரமாகக்கொண்டு அரசாளத் தொடங்கினன். சீவகனுக்குக் குலகுருவாகிய சுந்தர முனிவர் தம் அரசனுக்கு ஏதேனும் தீங்குவருமென்று எண்ணி அவனைக் காக்கத் திருநெல்வேலியில் வந்து ஒரு ஆச்சிரமத்தில் தங்கி இருந்தார்.

சுந்தரமுனிவர் அங்கு எழுந்தருளியிருப்பதை அறிந்த சீவகன் அவரை அழைத்து வரச்செய்து தனது அரண்மனை முதலியவற்றைக் காண்பித்தான். அவர் இவ்வரண்மனையும் அரசச்செல்வமும் நிலையுடையதல்லவென்பதைக் குறிப்பாக வுணர்த்தி, 'நான் உமது குடும்பத்திற்கேற்ற சில நல்ல காரியங்களைச் செய்ய நினைக்கின்றேன்; அதற்கு ஓர் தனியறை வேண்டும்' எனக்கேட்டுப் பெற்றுத் திறவுகோலுடன் தன் ஆச்சிரமம் சென்றனர்.

இப்பாண்டியனுக்கு ஓர் அருந்தவப் புதல்வி உண்டு. அவள் பெயர் மனோன்மணி. அவள் அழகினாலும் குணத்தினாலும் சிறந்து விளங்கினாள். அவளுக்கு வயது பதினாறாக இருந்தும் குழந்தைகள் எண்ணமும் உலகப்பற்றைத் துறந்த துறவிகள் மனமும்போல் களங்கம் சிறிதுமின்றிக் காணப்பட்டது. அவளுக்கு வாணி என்ற தோழியொருத்தி உண்டு. தான் நேராகக் கண்டவற்றையே நம்பும் திறத்தள்; நீதி மார்க்கத்தினின்று சிறிதும் தவறாதவள். அல்லனவற்றை கனவிலும் கருதாள். இவள் ஒருநாள் நடராஜன் என்ற சிறந்த ஆடவனைக் கண்ணுற இருவர் மனமும் ஒன்றுபட்டன.

இது இவ்வாறாக, வாணியின் தந்தையோ பொருளாசையுடையவன். அவன் தனது புத்திரியைக் குடிலன் புதல்வனாகிய பலதேவனுக்கு மணஞ்செய்து கொடுத்தால் தனக்கு மிகுந்த செல்வமும் செல்வாக்கும் கிடைக்குமெனத்தீர்மானித்துக்கொண்டான். உடனே அரசனிடம் சென்று அவன் அனுமதி பெற்று விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் செய்தனன். வாணிக்கு மிகுந்த கவலை உண்டாயிற்று. மனோன்மணி அவளுக்குப் பலவிதமான ஆறுதல் மொழிகளைக்கூறி ஒருவாறு தேற்றினாள்.

நிற்க. முனிவர் அரண்மனை காணவந்ததாகக் கூறினோமல்லவா? அன்று இரவு மனோன்மணி நித்திரை செய்யும்பொழுது சிறந்த உத்தம புருஷனான சேர தேசத்துக் காவலனாகிய புருஷோத்தமனைப்பற்றிக் கனாக்கண்டு இச்சை கொண்டாள். அப்பொழுது முதல் அதுவே சுரமாக உடலை வருத்தத் தொடங்கியது. சீவகன் அது இன்ன சுரம் என்பதை அறியாமல் தவித்தான். பல வைத்தியர்களை அழைத்து வந்து பார்க்கச் சொன்னான். அவர்கள் தத்தம் மனத்திற்குத் தோன்றியவைகளை எல்லாம் கூறிச் சென்றனர். மறுநாள் தெய்வ வசத்தால் சுந்தர முனிவர் அரண்மனை வந்து மனோன்மணிக்குச் சுரமுண்டான மூல

காரணத்தை ஆராய்ந்தறிந்தார். பின்னர் அரசனை நெருங்கி, "அரசே! உமது புதல்வி விவாகத்திற்குரிய பருவத்தை அடைந்தாள். அவளுக்குத் தகுந்த மணாளன் சேரவரசனாகிய புருஷோத்தமனே யாவான். அவனிடம் சென்று அவன் மனக்கருத்தை யறிந்து மணவினையை முடிக்கவல்லவன் நடராஜனே யல்லாமல் வேறொருவருமிலர்" எனக் கூறிச்சென்றனர்.

நடராஜனே வாணியினால் காதலிக்கப்பட்டவனென்று கூறினோமல்லவா? வாணியின் தந்தை அவன்மீது அரசனுக்கு வெறுப்புண்டாகுமாறு செய்து வைத்திருந்தான். அதனாலரசன், புருஷோத்தமனிடம் நடராஜனைத் தூதாக அனுப்ப மனமில்லாது தனது மந்திரியாகிய குடிலனுடன் ஆலோசித்தான்.

குடிலன் இவற்றை யறிந்தான். 'புருஷோத்தமன் மனோன்மணியை மணந்தால் நமது கதி யாதாகுமென்றும், ஒரு சமயம் பலதேவனுக்கு மனோன்மணியும் அரசச் செல்வமும் கிடைக்கலா' மென்றும் தன் மனதில் சிந்தித்தான். பிறகு அந்த மணத்தை எவ்வாறாவது தடுக்கக் கருதி, "அரசே! பெண்வீட்டார் மணம் பேசிச்செல்லுதல் கூடாது; அவன் மனக்கருத்தை முதலில் அறிந்துகொள்ளவேண்டும்; அதற்குப் பழைய விவாதங்களை மேற்கொண்டு அரசனிடம் தூதனுப்பினாலவன் மனப்பான்மையை யறிந்து பின்னர் தொடங்கலாம்" எனக் கூறினான். அரசன் குடிலன் வார்த்தைகளை உண்மையெனக் கருதினனாதலால் குருமொழி கேளானாய், குடிலன் மகனாகிய பலதேவனையே தூதாக வனுப்பினான்.

சேர நாட்டிலிருக்கும் புருஷோத்தமன் தினந்தோறும் மனோன்மணியின் அழகையும் குணாதிசயங்களைப் பற்றிக் கனாக் கண்டு கொண்டேயிருந்தான். ஆனால் அவள் எத்தேசத்திலிருக்கின்றாள் என்பதை அறிந்துகொள்ள முடியாதவனாய்ச் சிந்தித்தான். "யாருடனே

னும் போர் நிகழுமேயானல் அதன் மூலம் மனேன்மணி யைப்பற்றி யறிந்து விவாகம் செய்துகொள்ளலாம்'' என எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போது, சீவகனுலனுப் பப்பட்ட பலதேவன் சேரன் சபையை அடைந்தான். அவன், தனக்குத் தன்பிதா இரகசியமாகச் சொல்லி யனுப்பியபடி சபையின் நடுவே எழுந்து பலவிதமான துர்வாதங்களைப் பேசத் தொடங்கினன். அவற்றைக் கேட்டான் சேரன். கோபமதிகரிக்கப் போர்க்கோலம் பூண்டுப் பாண்டியனுடன் யுத்தம் செய்யப் புறப்பட்டு விட்டான். சீவகனும் போருக்குச் சித்தனனன். திருநெல் வேலிக்கருகில் இருதிறப்படைகளும் சந்தித்தன.

பாண்டியன் சேனையில் நாராயணன் என்ற சேனைத் தலைவனெருவனிருந்தான். அவனிருந்தால் ஒருவராலும் பாண்டியனை வெல்ல முடியாதென எண்ணிய குடிலன் நாராயணனையும் மற்றுஞ்சில வீரர்களையும் கோட்டை யைக் காக்கும்படி அனுப்பிவிட்டான். பயிற்சி பெருத சில வீரர்களை வியூகமாக நிறுத்தி அவ்வியூகத்திற்குத் தன் மகனுகிய பலதேவனைத் தலைவனுக நியமித்துத் தானும் சண்டை செய்யத் தொடங்கினன். கொடுமையாகப் போர் நடக்கும்பொழுது பாண்டியன் சேனையில் ஒரு பெருங் குழப்ப முண்டாயிற்று. காரணமென்னவெனில் பலதேவன் தன்னுடைய வியூகத்திலிருந்த ஒரு வீரனது சகோதரியைத் தான் மணஞ் செய்துகொள்ளுவதாகக் கூறி, பொற்றெடியுங் கொடுத்துப்பின்பு மணந்துகொள்ள முடியாதெனக் கூறிவிட்டான். அதனல் கோபங்கொண் டிருந்த வீரன் இதுவே பலதேவனைக் கொல்ல தகுந்த சமயமென எண்ணிக் கையிலிருந்த வேலால் அவனைத் தாக்கினன். பலதேவன் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந் தான். அதனை யறிந்த மற்ற வீரர்கள் இவ்வீரனைக் கொன்று வீழ்த்தினர். பலதேவன் சிறிது நேரத்திற்கெல் லாம் மூர்ச்சை தெளிந்தெழுந்தான். பாண்டியன் சேனை

நாலாபக்கங்களிலும் சிதறியோடின. சீவகன் உயிர் தப்புவதே அரிதாயிற்று. கோட்டை வாயிலிருந்த நாராயணன் விரைந்து வந்து அரசனைக் காப்பாற்றினன். இல்லையேல் அரசன் பாடு அதோகதியாயிருக்கும். கோட்டைமதிலும் சிறிது பழுதாயிற்று. புருஷோத்தமன் வெற்றி யடைந்து பாண்டியனை நோக்கி, 'வருடந்தோறும் தாமிரபரணித் தண்ணீர் ஒரு குடமும் வேப்பந்தாரும் தோல்வியுற்றதற்கறிகுறியாக யனுப்பினல் இப்பொழுதேபோரை நிறுத்துகின்றேன். இல்லை யென்றல் மறுநாட் காலை மறுபடியும் யுத்தந் தொடங்கி, கோட்டை, அரண்மனை முதலியவற்றை இடித்துப் பாழாக்குவேன்' எனக்கூறி யனுப்பினன். சீவகன் முதல் நாட் போரிற் புறங்கொடுத்து ஓடியதனலுண்டாகிய அவமானத்தைத் தனது உயிர் கொடுத்தேனும் நீக்கக் கருதியவனய் அவன் கூறி யனுப்பியதற்குச் சம்மதிக்கவில்லை. பிறகு தனது அரண்மனை முதலியவற்றைச் சுற்றிப் பார்க்கும்பொழுது அவை ஒரு நாள் யுத்தத்திற்குக்கூடத் தாங்காதென்பதை யுணர்ந்தான். தனது சேனைகள் சேரனுக்குப் புறங்காட்டி ஓடக் காரணமென்னவென்று குடிலனுடன் ஆலோசித்தான்.

அப்பொழுது குடிலன், தனக்கு நாராயணன் மேலுள்ள கொடும் பகையைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு இதுவே தக்க சமயமென எண்ணினன். அரசனைப் பார்த்து, 'அரசே! நாராயணனை அரண்மனைக் காவலுக்காக நிறுத்தியிருந்தேன். அவன் எனது கடமையை மீறி அவ்விடத்தினின்றும் வந்தான். அதனல் பகைவர்கள் எளிதில் உள்ளே புகுந்தனர். அல்லாமலும் ஒரு வீரன் எனது குமாரனகிய பலதேவனைத் தன் கைவேலால் தாக்கினன். அதனல் சேனையில் பெருங் குழப்பமேற்பட்டது. இவற்றிற்கெல்லாம் காரணம் நாராயணனே யாவான். ஏனெனில் அவன் தன்னைச் சேனைத்தலைவனக நியமிக்கவில்லை என்ற வருத்தத்தினலவனை ஏவினன்.

அவன் அந்தக் காரியத்தைச் செய்ததற்குப் பரிசாக நமது அரண்மனையிலிருந்த ஒரு பொற்முடியையும் திருடிக் கொடுத்தான். அதுவே இப்பொழுது அவ்வீரன் கையிலிருக்கின்றது; இதோ பாருங்கள். இதிலே நமது முத்திரையும் காணப்படுகின்றது?' எனப் பலவாறு புகன்றான். அரசனும் வஞ்சகன் வார்த்தைகளை உண்மையென நம்பினான். 'களவு, கொலை, குழப்பம் முதலியவற்றிற்குக் காரணமாக விருந்த நாராயணனைக் கழுவேற்றுக' எனக் கட்டளையிட்டான்.

இது இவ்வாறாக, ஒரு சேவகன் விரைந்து வந்து அரசன்முன்னே நின்று, அரசே! 'நமது சுந்தர முனிவர் தங்களை உடனே அழைத்து வரும்படி கட்டளை இட்டார். உடனே புறப்படுங்கள்' என்றான். அதனால் அப்பொழுது நாராயணனைக் கழுவேற்றவில்லை. சிறையில் அடைத்து வைத்திருந்தனர். முனிவர் அரசனை யழைத்த காரணமென்னவென்றால், அரசன் குடிலன் வஞ்சனையில் அகப்பட்டதை யறிந்து அவனால் தீங்கு நேருமென ஐயுற்ற முனிவர் அரசனிடம் ஓர் அறையைப் பெற்றிருந்தாரல்லவா? அரசனுக்கு ஏதேனும் ஆபத்து வரும்போது அவனைக் காப்பாற்ற நினைத்த முனிவர், அந்த அறை முதல் தனது ஆச்சிரமம் வரையிலும் ஒரு சுரங்க வழியை உண்டாக்கி வைத்திருந்தார். அது ஒருவருக்கும் தெரியாது. அரசனைக் காப்பதற்காகவே முனிவர் அவ்வறைக்கு அழைத்தார். அரசனும் வந்து சேர்ந்தான். அவனைப் பார்த்து, 'இப்பொழுது உனது கோட்டை, அரண்மனை முதலியன வலிமையற்றிருக்கின்றது; நீ இன்னும் தாமதித்தால் உனது உயிருக்கே ஆபத்து நேரும்; ஆதலால் இச்சுரங்கத்தின் வழியே எனது ஆசிரமத்திற்கு வா' என அழைத்தனர். அதற்கரசன், சுத்த வீரர்கள் பகையரசர்களுக்காகப் பயந்து திருட்டுத்தனமாக ஒளிந்து சென்றதை இதுவரையிலும் எங்கேனும் கேட்டிருக்கின்றீர்

களா? ஆதலால், 'நான் இறந்தாலும் இறப்பேனேயன்றிப் புறங்கொடுத்து வரமாட்டேன்' என மறுத்தான். முனிவர், "அரசே! பாண்டிய குலத்திற்கு மனேன்மணியைத் தவிர வேறு சந்ததியே இல்லை; மற்றவர்களுக்குக்கேடு நேர்ந்தாலும் மனேன்மணியைக் காக்கவேண்டியது நமது முக்கிய கடமை" என்ருர். அரசனுமதற்கிசைந்து அவருடன் இரவில் அனுப்புவதாக ஒப்புக்கொண்டான்.

நடுநிசியாயிற்று. தனது அருந்தவப் புதல்வியை விட்டுப் பிரியும்படி நேர்ந்ததற்கும் பிரியாதிருந்தால் அவளுக்கு நேரும் துன்பத்திற்கும் வருந்தினன். தனது குருவாகிய முனிவர் வார்த்தையிலும் சந்தேகமுண்டாயிற்று. குடிலனை அழைத்தான். முனிவர் தன்னிடங்கூறிய சுரங்க வழி முதலிய சகல விஷயங்களையுந் தெரிவித்தான். கண்டான் குடிலன். 'தெய்வமும் நமது பக்கம் இருக்கின்றது; நமது எண்ணம் நிறைவேறுவதற்கு இதுவே தக்க சமயம்' என மனதில் சிந்தித்து, "அரசே! மனேன்மணியை முனிவர் பின்னுலிப்பொழுது அனுப்புவது உசிதமாகத் தோன்றினும் கன்னிப்பருவத்தோடு கூடிய அவளை அவர் பின்னே யனுப்புவதால் பழிச்சொல்லுக்கு இடமாகும். ஆதலாலிக் காரியத்தை நன்கு ஆராய்ந்து செய்க" என்ருன். அரசனுக்கு அப்பொழுது மனேன்மணியைப் பலதேவனுக்கு விவாகம்செய்து கொடுத்தாயினும் இருவரையும் ஒன்று சேர்த்து அனுப்பலாமென்ற எண்ணமுண்டாகும்படி செய்து தனது மனேரதத்தை நிறைவேற்றிக்கொண்டான்.

அரசனும் மனேன்மணியைப் பலதேவனுக்குக் கொடுப்பதென உறுதிசெய்து கொண்டான். இவ்விஷயத்தைத் தன் புத்திரியிடம் தெரிவித்தான். அவ்வார்த்தைகள் அவளுக்குப் புண்ணிற் கோலிட்டது போலிருந்தது. துக்கசாகரத்தில் மூழ்கினள். பின்பு ஒருவாறு மனந்தேறி, தன் தந்தைக்கு நேர்ந்த ஆபத்தை நினைத்து அவர் மனம்

வருந்தாதிருக்கும்படி செய்வதே மேல் எனத் தீர்மானித்து உடன்பட்டாள். உடனே விவாகத்திற்கு வேண்டிய காரியங்கள் தொடங்கப் பெற்றன. பின்பு தந்தையை நோக்கி அடியேனுக்கு இரண்டு வரங்கள் தந்தருள வேண்டும். அவற்றுள் ஒன்று நாராயணனைத் தண்டிக்கக் கூடாது. மற்றொன்று நடராஜனுக்கு வாணியை மணம் முடித்து வைக்கவேண்டுமென்பது.

இஃதிங்ஙனமாக சுந்தர முனிவரா லமைக்கப்பெற்ற சுரங்க வழியைக் குடிலன் காண விரும்பினன். ஒருவரு மறியாவண்ணம் அரண்மனையிலிருந்த முனிவர் அறைக் குட்புகுந்து சுரங்க வழியை வெகு சிரமத்தோடு கண்டு பிடித்தான். அதன் வழியே உட்சென்று பார்க்கும்போது சமீபத்தில் பகைவர் சேனை காணப்பட்டது.

கண்டதும், குடிலன், 'இன்று பகலில் நமது புத்திரனுக்கு ஏற்பட்டதைப்போன்ற ஆபத்துக்கள் நமக்கும் நேர்ந்தாலும் நேரும். மனோன்மணி பலதேவனை எப்படியும் விவாகம் செய்துகொள்ளுவாள். மறுபடியும் யுத்தம் தொடங்கினால் வெற்றி யார் பக்கமோ? சேரன் ஜெயித்தால் என்னை ஒருக்காலும் மதியான். ஆதலால் பாண்டியனைச் சேரனிடம் பிடித்துக் கொடுத்து விட்டால் நமக்கே இராஜ்யம் கிடைத்தாலும் கிடைக்கும். நாம் வருடந்தோறும் அவன் கேட்டபடி ஒரு குடம் தாமிரபரணித் தண்ணீரும் வேப்பந்தாரும் கொடுப்போம்' என உறுதி செய்து கொண்டான். திரும்பவும் சீவகனிடம் செல்லவேண்டுமென்ற எண்ணம் நீங்கிற்று. விரைந்து சேரனிடம் சென்றான். சேரனை எதிரே கண்டான். "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்த"தென நினைத்தான். சேரனை அணுகி, மன்னர் மன்ன! 'இப்பொழுதே பாண்டியனைத் தங்களிடம் பிடித்துத் தருகின்றேன்' எனக் கூறினன். அதற்குப் புருஷோத்தமன், சுத்த வீரர்களுக்கு அழகு எதிர்த்து நின்று

யுத்தம் செய்து வெற்றி பெறுவதேயல்லாமல் திருட்டுத் தனமாகச் செல்வதல்ல. உன்னைப்போன்ற துரோகிகளை நேரே காண்பித்துக் கொடுத்து அதன் பிறகு யுத்தம் செய்தல்லவா வெற்றிபெறவேண்டு மெனக் கூறித் தன் சேவகர்களை யழைத்து, குடிலன் கால்களுக்கும் கைகளுக் கும் விலங்கிடுமாறு பணித்தான். பின்பு அவனைப் பார்த்து, "சுரங்க வழியைக்காட்டு; இல்லையேல் உயிரை இழப் பாய்" என்றான். குடிலன் இடியோசை கேட்ட அரவத் தைப்போல நடுங்கித் திகைத்தான். இரு தலைக்கொள்ளி எறும்புபோலானான். சித்திரவதைக்குப் பயந்து வழி காட்டிச் சென்றான்.

அப்பொழுது நடுச்சாமம். விவாக மண்டபம் நன் றாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. அங்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து விவாகத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தனர். பலதேவனும் மனோன்மணி யும் மணவறையில் உட்கார்ந்திருந்தனர். அவள் கையில் மணமாலை இருந்தது. 'வஞ்சகன் மகனாகிய பலதேவனை மணக்கவேண்டி யிருக்கிறதே' என்ற துக்கத்தினால் கண் களினின்றும் நீர் ததும்பிக் கொண்டிருந்தது. ஒரு பக்கத் தில் சீவகனும் சுந்தர முனிவரும் அமர்ந்திருந்தனர். அப் போது சீவகன் அங்குள்ளோர்களை நோக்கி 'நமது குடிலன் எங்கே நெடுநேரமாகக் காணவில்லை' என்றான். அப்பொழுது சேர அரசன் குடிலனுடன் அங்கே வந்து சேர்ந்தான். புருஷோத்தமன் தான் நெடுநாளாகக் கன வில் கண்டு கொண்டிருந்த வனிதா ரத்தினத்தைக் கண் டான். சந்தோஷத்தினால் உடல் பூரித்தான். தன்னை யறியாமலே கால்கள் அவளிடம் செல்லத் தொடங்கின. பலதேவனுக்கு மாலை சூட்டுவதற்காக எழுந்த மனோன் மணி கனவிற்கண்ட உத்தம புருஷனை நேரே கண்டு புரு ஷோத்தமன் கழுத்தில் மாலையைச் சூட்டி அவன் மார்பிற் சாய்ந்தாள்.

சீவகன் அதைக்கண்டு மனம் பொருதவனுகிச் சேர ளேடு யுத்தம் செய்ய எழுந்தான். சுந்தர முனிவர் அரச ளேக் கையமர்த்தி, புருஷோத்தமனே நோக்கி "நீ இங்கு வந்த காரணத்தைக் கூறுவாயாக" என்றுன். உடனே புருஷோத்தமன் குடிலனுடைய ராஜத்துரோகங்களே எடுத்துக்கூறி, அவனே அரசனிடம் ஒப்புவிக்கவே விலங்கிட்டுக் கொணர்ந்தேனென்று சபை முன் நிறுத்தினன். சீவகன் குடிலனுடைய துரோகச் சிந்தனேயை அப்பொழுதுதான் அறிந்தான். அவனேத் தன்னுட்டினின்றும் வெளியே துரத்தினன்.

பின்பு புருஷோத்தமனும் மனேன்மணியும் தங்கள் எண்ணம் நிறைவேறப்பெற்றவர்களாய் பூவும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும் மன ஒற்றுமையோடு நீண்டகாலம் வாழ்ந்து வந்தனர்.

மனேன்மணி தன் தந்தையிடம் கேட்டுக்கொண்டதால் நாராயணன் சிறைத்தண்டனேயினின்றும் நீங்கினன். வாணியை நடராஜனுக்கு மணம் முடித்து வைத்தனர். அவர்களும் நீண்டகாலம் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

முற்றிற்று.

2/82